Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50


දිනමුරසු වාරමලර්

ஆக. 15-21, 2004

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL ... 575



# பேச்சுவார்த்தையா? யுத்தமா?





## இறுக்கமடையும் நெருக்கடிகள்!

## ஜே. ஆரின் இரத்த இரட்டை வேடம்

வரலாறு 73

## துரோகிகளாக்கப்பட்ட போராளிகளின் மரணங்கள்

-அலசல்



# ஆன்மீகம்



## மனிதனின் உயர்ந்த மதிப்பு

மானிடர்களே! மனித வாழ்க்கை என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். மனித வாழ்க்கை உயர்ந்த மதிப்புள்ளது என்று உபநிடதங்கள் கூறுகின்றன. மனிதனுள் இருக்கும் தெய்வீகத் தன்மையைப் புரிந்துகொள்ளல் சுலபமல்ல. அனைத்து வடிவங்களும் அனைத்து ஆற்றல்களும் மனிதனுக்குள் இருக்கின்றன. தங்கமும் வைரமும் மிக உயர்ந்த மதிப்புள்ளவை என்று மனிதன் நினைக்கிறான். ஆனால், உண்மையில் மனிதன்தான் அவற்றிற்கு மதிப்பை வழங்குகிறான். Men are valuable than all the wealth of the world. அத்தகைய போற்றத்தகு மனித வாழ்வை வீணடிக்கலாகாது.

- எஸ். அகிலா, 1 ஆம் பிரிவு, மண்டூர்.

## கர்த்தரே ஆலோசகர்

தாவீது ராஜா தனது ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரிடமே ஆலோசனை கேட்பான். வெற்றியும் பெறுவான். பிரியமானவர்களே! எம்முடைய நிலைமை எப்படி? கர்த்தரிடம் பதில் வந்த பிறகு காரியத்தைச் செய்கிறோமா? அல்லது எம்முடைய இஷ்டப்படி செய்துவிட்டு கர்த்தர் என்னைக் கைவிட்டுவிட்டார் எனத் தோல்வியைத் தழுவிக்கொண்டு சொல்லுகிறோமா? ஆம். எம்முடைய சித்தத்துக்கு எதையும் செய்யலாம். ஆனால், அது தேவனுக்குச் சித்தமில்லாததாக இருந்தால் தோல்வியே பலனாயிருக்கும்.

மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள். நீதிமொழிகள் (14:12)

இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எமக்குள்ளே வாசம் பண்ணுகிறார். உற்ற நண்பராக, ஆலோசனைக் கர்த்தராக எமக்கு உதவக் காத்துக்கொண்டிருக்கிறார். எமது பிரச்சினைகளை எல்லாம் அவரிடத்தில் கூறுவோம். 'பரிசுத்த ஆவியானவரே! இவைகளில் இருந்து மீள எனக்கு ஆலோசனைத் தாரும் சுவாமி' என்று கேட்போம். எனக்குச் சொந்தமானவன் எப்பொழுது கேட்பான் என அவரும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். இன்று முதல் எமது ஆலோசனைகளை விடுத்து பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனைப்படி செயற்படத் தொடங்குவோமாக! அப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியைத் தேவன் தருவார். ஆமேன்.

- சகோ: போல் ஜோன், தெல்தெனிய.

## இறையச்சத்தின் ஈருலகப் பயன்கள்

"நிச்சயமாக எவர்கள் பயபக்தியுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடனும், எவர்கள் நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களுடனும் அல்லாஹ் இருக்கிறான்."

(அல்குர் ஆன் 16:128)

"எவர் பயபக்தி கொண்டு (தம் வாழ்க்கையில்) திருந்திக் கொண்டார்களோ அவர்களுக்கு அச்சமில்லை. அவர்கள் ஒதுக்கப்படவும் மாட்டார்கள்" என அல்லாஹ் கூறுகிறான்.


(அல்குர் ஆன் 7:38)

"உங்கள் மீது அவன் எவ்வளவு வரம்பு மீறியுள்ளானோ அதே அளவு நீங்கள் அவன் மேல் வரம்பு மீறுங்கள். அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோருடன் இருக்கின்றான்" என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

(அல்குர்ஆன் 2:194)

எம்.எல். நுஸ்ரத் நஸ்வின், வாழைச்சேனை–05.

## கவிதைப் போட்டி இல.572



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### மீண்டுமா?

பேச்சுவார்த்தைகள்
இடைநிறுத்தப்பட்டு
யுத்தத்துக்கான கதவுகள்
திறக்கப்பட்டுக் கொண்டிருக்கும்
இந் நிலையில்
மீள் குடியேற்றம்
செய்யப்பட்டவர்கள்
மீண்டும்
இடம்பெயர்கிறார்களோ?

*வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.*

### முகவரியைத் தொலைத்துவிட்டேன்

ஏன்.
முகவரியை
தொலைத்து
விட்டீர்களா?
முகத்தைக் கூடக்
காட்டாமல்
செல்கிறீர்கள்.....

*கந்தசாமி ரமேஸ், ராகலை.*

### யார் இவர்கள்?

இவர்கள்
பிறந்த மண்ணில்
பெருமையுடன் வாழ
புறப்பட்ட அகதிகளா
அல்லது
சொந்த மண்ணில்
வாழ விடாமல்
விரட்டப்பட்ட அகதிகளா?

*அ.சந்தியாகோ, கண்டி.*

### கிளம்பிவிட்டோம்!

நாடு போற போக்கில்
நாளைக்கும்
சண்டை வரலாம்.
அதுதான் - இன்றே
கிளம்பிவிட்டோம்
யுத்தம் இல்லாத
தேசம் நோக்கி....!

*சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி – 03.*

### நாடோடி!

நாட்டு
நடப்புகளும்
நடக்கின்ற
நிகழ்வுகளும்
நாடோடி
வாழ்க்கையினை
மீண்டும்
நமக்களிக்கப்
போகின்றதோ?

*ரேணுகா ரிபாய்தீன், ஏறாவூர் – 02.*

### சகுனம்

இடம்பெயரும்போது
வெளிச்சம் வடிந்து
இருண்டு கிடந்தது.
திரும்புகிறோமென்று
விடிந்திருக்குமா வானம்
விடி வெள்ளியாய்....?

*பெ.விக்னேஸ்வரன், டன்பார் வீதி, ஹட்டன்.*

### அன்றும் இன்றும்

பசுமையான எங்கள்
மண்ணில் மலர்ந்ததோ,
யுத்தம் - உதிர்ந்ததோ
எங்கள் நிம்மதி - அன்று
தொட்டு இன்று - வரை
நாங்கள் நாடோடிகள்.

*ஆ.ஞானகுரு, வினித்தகம, பதுளை.*

## கவிதைப் போட்டி இல.575



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 21.08.2004

கவிதைப் போட்டி இல.575
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### பயணம்....?

முடியவில்லை
மீண்டுமொரு யுத்தத்தை
எண்ணிப் பார்க்கவும்
யாவும் இழந்து
உயிரைப் பிடுங்குகின்ற சோகத்துடன்
அகதியாய் ஊர் சுற்றுவதற்கும்.

*கிண்ணியா தமிழடியான்.*

### மீண்டும் அகதிகளாய்

தங்களுக்குள் பழி
தீர்க்கும்
எங்களினப்
பிள்ளைகளின்
நீங்காத கொலை
வெறியால்
பங்கமொன்று
அமைதிக்கு
வந்துவிட்டால் என்
செய்வோம்
எச்சரிக்கையாக
நாமும்
இன்னுமோர் முகாம்
நோக்கி
இடம் பெயர்ந்து
செல்கின்றோம்.

*எம்.எச்.யுனைதீன்,பரிட் மைதான வீதி, ஏறாவூர்*

### மீள் குடியேற்றம்

தரை நிறைந்த
மிதிவெடிகள்
தலைகளை இழந்த
பனை தென்னை
மீள் குடியேற்றினர்
பாழ் வெளியில்
மிஞ்சி நிற்போர்
நாம் நால்வர்.

*சி.புலேந்திரன், பாலமுனை, மண்டூர்.*

## உங்கள் பக்கம்

### பாதையை செப்பனிட மூதூர் மக்கள் கோரிக்கை

மூதூர் மக்களின் நன்மை கருதி சேருநுவர தொகுதிக்குட்பட்ட கல்லாறு சந்தியிலிருந்து எல். பி 8 கொலனி ஊடாக தெகிவத்தை, கிளிவெட்டிக்குச் செல்லும் பிரதான வீதி பல வருட காலமாகச் செப்பனிடாமல் இருப்பதால் பொது மக்கள் வாகனங்களில் பிரயாணம் செய்வதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இப் பாதையின் இரு மருங்கிலும் வயல் வெளிகளும் பிரதான வாய்க்காலும் இருப்பதால் இவ் வீதியில் வாகனங்கள் விலத்திச் செல்லும் அளவுக்குப் பாதை அகலம் குறைவாக உள்ளது. அத்தோடு மழைகாலங்களில் கனரக வாகனங்கள் மிகவும் கஷ்டமான நிலையில் பிரயாணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அத்தோடு இப் பகுதி மக்கள் மேலதிக, அவசர சிகிச்சைகளுக்காகத் திருகோணமலை தளவைத்தியசாலைக்கு நோயாளர்களை உரிய நேரத்திற்குக் கொண்டுசெல்ல முடியாத நிலையும் ஏற்படுகிறது.


இதைத் தவிர இப் பகுதி விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்குத் தேவையான எண்ணெய், பசளைகளை உரிய காலத்திற்குள் ஏற்றிவருவதற்கு காலதாமதமேற்படுகிறது. இதனால் விவசாயிகள் விவசாயத்தில் சரியான பலாபலன்களைப் பெற முடியாதுள்ளது. அத்தோடு விவசாயிகள் விவசாயத்தில் பெறும் அறுவடையை இப் பகுதியில் சந்தைப்படுத்து வதற்கான வசதிகளைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கையெடுக்கும்படியும் உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எனவே, இங்கு வாழும் மக்களின் நன்மை கருதி இத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், உரிய திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, இப் பாதையைச் செப்பனிடுமாறு இங்கு வாழும் மக்கள் கேட்டுக்கொள்வதோடு, இப் பாதைக்குத் 'தார்' போடுவதால் நீண்ட காலத்துக்கு இவ் வீதியில் சிரமமின்றி பிரயாணம் மேற்கொள்ளலாமென மக்கள் விரும்புகின்றனர்.

- இ. மாதவராஜா, திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசக[ர்] சாலை





### வாழ்த்து!

உண்மையைத் தரும் உன்னத முரசே! ஜுலை 18-24 வரையான மலர் கிடைக்கப் பெற்றேன். பெரும் மகிழ்ச்சி. அமைச்சர் டக்ளஸ் மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சி பற்றிய உண்மையான விரிவான செய்தியை அறிந்துகொண்டோம். தகவல் பெட்டியில் கருக்கலைப்பு செய்வோர் கவனத்திற்கு...... மக்களுக்குத் தேவையான விடயம் ஒன்றுதான். இன்னும் சிறப்புப் பெற எனது வாழ்த்துக்கள்.

*ஆறுமுகம் சந்திரமோகன், நிவ்யூ பீக்கொக், மேல்பிரிவு, புஸ்ஸல்லாவ.*

### என் பிரியமான முரசே!

கடலில் அலைகள்
ஓய்ந்தாலும்
கண்களில் கண்ணீர்
வற்றினாலும்
என் பிரியமான
முரசே!
உன் மீது நான் கொண்டுள்ள
காதல் என்றும் மாறாது.

*– உன் ப்ரியமானவன், ஆர்/ கோபிநாத், இல. 23, கண்டி வீதி, கம்பளை.*

### எழுத்திலெனை ஈர்த்த முரசே!

அணையாத அகிலத்து முரசே
ஆராய்ச்சியின் ஆணிவேர் முரசே
இதமான இலக்கிய முரசே
ஈற்றிலெனை ஈர்த்த முரசே
உண்மையின் உன்னத முரசே
ஊகங்கள் ஊறாத முரசே
எட்டுத்திக்கும் எங்கள் முரசே
ஏழைகளின் ஏக முரசே
ஐயமில்லா ஐஸ்வர்ய முரசே
ஒழுக்கத்தின் ஒளிச்சுடர் முரசே
ஓயாத ஓட முரசே
ஔடதம் போன்ற ஔதாரிய முரசே!

*– கு. ஜெகசுதன், திருக்கோவில் – 02.*

### வளர்க!

அழகிய பேனா
நண்பி
நண்பர்களையும்,
ஆன்மீகத்தையும்
கொடும்பாவிகளின்
கொடுங்கோலையும்
எனக்கு
அள்ளித்தரும்
வார முரசே!
நீ தினமும்
வரமாட்டாயா
என்ற
ஏக்கத்துடன்
மேலும் வளர
முரசுக்கு
வாழ்த்தி
தொடர்வேன்.

*எஸ். ஐ. கமீர் மெயின் குரோஸ் றோட், வாழைச்சேனை.*

### முத்தமிழ் முரசே! முதல்கண் வணக்கம்!!

வியாழன் தோறும் இல்லம் வந்தடையும் இல்லத்தரசே! அழகிய முகவுரையை முத்தான பெறுமதி வாய்ந்த விடயங்களை உள்ளடக்கி அதிலும் கவிதைப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி, தேன் கிண்ணம், சிந்தியா, சிறுகதைகள் இவைகள் சூப்பரோ! சூப்பர்! உன் வருகையால் மனம் திருப்தி அடைகின்றது. அத்தோடு நாங்கள் பூரணத்துவம் அடைகின்றோம். நாட்டுநடத்தைகளை நாங்கள் அறிய நலமுடன் எம் கரம் வந்தடைகின்றாய். உன் வருகையே எங்கள் வாழ்வு அதற்கு முதற்கண் வணக்கம்.

*யோ. ஷாலினி, திருக்கோயில்–03*

# கொலைக் குழுக்களை அடக்க டோக்கியோ மாநாட்டு நாடுகளின் உதவியைக் கோருகிறது சமாதான ஆதரவுக் குழு

"ஜனநாயக வழிமுறைகளுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்காத புலிகளின் ஆயுதக் குழுக்களால் கடந்த நான்கு மாதங்களில் நாற்பதுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் இந்தக் கொலைக் கலாசாரம் கொழும்புக்கும் பரவி, கிட்டத்தட்டப் பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு டோக்கியோ மாநாட்டுக்கு இணைத் தலைமை வகித்த நான்கு நாடுகளின் பிரதிநிதிகளும் சமாதானச் செயற்பாடுகளுக்கான மனித உரிமைகள் ஆலோசகர் இயன்மார்ட்டினும் இணைந்து இலங்கைக்கு வருகைதந்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி வன்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சமாதானத்துக்கான ஆலோசனைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இத்தகைய கொலைகள் குறித்து தம்மால் விசாரணை நடத்த முடியாமலிருப்பதாக இலங்கையிலுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அண்மையில் அறிவித்துள்ளதால் இவ்வாறான உயர்மட்ட உண்மையைக் கண்டறியும் குழு இலங்கைக்கு வருகை தருவது அவசியமானதென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரலில் வாகரையிலும் ஜூன் மாதம் தொப்பிகல காடுகளிலும் இடம்பெற்ற ஆயுத மோதல்களில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு மேலதிகமாக நாற்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் சமாதானத்துக்கான ஆதரவுக் குழு தெரிவித்துள்ளது.

புளொட் மோகன் என்றழைக்கப்படும் கந்தையா யோகராசா என்பவரைக் கொல்வதற்கு சிவா என்றழைக்கப்படும் சூத்திரதாரியை ஆறு மாதங்களுக்கு முன்னரே புலிகள் நியமித்திருந்ததாகவும் புளொட் மோகனின் அண்மைக்காலப் புகைப்படமொன்றினைப் பெறுவதற்காக ஐம்பது இலட்ச ரூபா சன்மானத்தோடு மட்டக்களப்பு, கொத்தியாபளையிலுள்ள புளொட் மோகனின் சகோதரியோடு சிவா தொடர்புகொண்டபோதும் முயற்சி பலனளிக்கவில்லையென்றும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். பின்னர் அங்கு வாழும் புளொட் மோகனின் சகோதரரோடு தொடர்புகொண்ட சிவா, தனக்கு மதுபான விற்பனை நிலைய அனுமதிப்பத்திரம் பெறும் சாட்டோடு மோகனுடன் நெருக்கமான பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். கொழும்பு பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியிலுள்ள இம்பீரியல் ஹோட்டலில் தங்கியிருந்த சிவா, புலிகளுக்கு புளொட் மோகன் பற்றி அடிக்கடி தகவல்களை வழங்கி வந்ததோடு கொலை நடந்த மறுகணமே மட்டக்களப்பின் புலிப் பகுதிக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அமைச்சர் டக்ளஸையும் கருணா அம்மானையும் கொலை செய்வதற்காக ஆறு கொலைக் குழுக்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட தகவலைக் கடந்த வாரம் 'ஆசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. சிவாவினால் ஏமாற்றி வரவழைக்கப்பட்ட புளொட் மோகன் முச்சக்கர வண்டியொன்றில் சிவாவுடன் பயணம் செய்துவிட்டு அவரை இம்பீரியல் ஹோட்டலில் இறக்கிவிட்டுத் தனியாகச் செல்கையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது, ஜூலை மாதம் ஏழாம் திகதி கொள்ளுப்பிட்டி தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டமையும் 24ஆம் திகதி கொட்டாவவில் கருணா அணியைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது, மட்டக்களப்பு - அம்பாறையில் கருணாவின் விசுவாசிகளென நம்பப்படும் முப்பது பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

பகிரங்க இடங்களிலும் சிறைச்சாலைகளுக்குள்ளும் படுகொலைகளை நடத்துமளவுக்கு இலங்கையில் நிலைமைகள் மோசமடைந்துள்ளதாகக் கடந்த 27ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கண்டனம் தெரிவித்தமையும் குறிப்பிடத் தக்கது.

## ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அதிரடிப் படை பாதுகாப்பு

கடந்த பொதுத் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்து, பின்னர் அக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்கப்பட்ட ஜோசப் பரராஜசிங்கம் நான்கு மாதங்களின் பின்னர் பலத்த பாதுகாப்போடு மட்டக்களப்புக்குத் திரும்பியுள்ளார். கருணா அம்மானின் கட்டுப்பாட்டில் மட்டக்களப்பு - அம்பாறையிலுள்ள புலிகளின் பகுதிகள் இருந்தபோது பிரபாகரனுக்குச் சார்பாக இறுதிவரை இவர் பேசியபோதும், இவரோடு சேர்ந்து போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் நால்வரும் கருணாவின் கிழக்குப் பிராந்தியக் கோரிக்கையை வலியுறுத்திப் போட்டியிட்டுத் தேர்தலில் வெற்றி பெற்றனர். கிழக்கில் கடந்த ஒரு மாதத்துக்குள் இருபதுக்கு மேற்பட்ட கருணா விசுவாசிகள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து சொந்த ஊருக்குத் திரும்பிய ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

## நிலாவினியும் மூன்று பெண் புலிகளும் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

கருணா அம்மானோடு கடந்த ஏப்ரல் மாதம் கொழும்புக்குத் தப்பிவந்த பின்னர், மீண்டும் ஜூன் மாதம் மட்டக்களப்புக்குப் போய் பிரபா அணியோடு சேர்ந்துகொண்ட பெண் புலிகளான நிலாவினியும் மற்றும் மூன்று பேரும் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப் பெண்கள் நால்வரும் கருணாவோடு கொழும்புக்கு வந்ததையடுத்து, அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பதினேழு பேர்களை புலிகள் கைதுசெய்து தடுத்து வைத்திருந்தனர். இவர்கள் மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்பிப் புலிகளிடம் சரணடைந்ததையடுத்து கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் விடுவிக்கப் பட்டனர். இதைப் போன்றே கொட்டாவவில் கருணா அணி தரப்பினர் ஏழு பேர் உட்பட எட்டுப் பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு மட்டக்களப்புக்குத் தப்பிச் சென்ற புலிகள் இருவரின் உறவினர்களும் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதேவேளை, கருணா அம்மானின் நெருங்கிய சகாவாகச் செயற்பட்ட விசு, வன்னிக்கு அழைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் அவரைப் பற்றிய தகவலெதுவும் கிடைக்கவில்லையென்று அவரது நெருங்கிய உறவினர்கள் கூறுகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச்சோலையைப் பிறப்பிடமாகக் கொண்ட விசு, முன்னாள் புலி உறுப்பினரான ரஞ்சனி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டாரென்றும் இவர்களுக்கு கன்யா என்ற ஒரு வயதுடைய குழந்தையொன்று இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கில் தொடரும் பரிதாப மரணங்கள்

மட்டக்களப்பு மண்டூரில் கடந்த வாரம் கருணா அணியினரின் விசுவாசியென்ற சந்தேகத்தின் பேரில் கடத்திச் செல்லப்பட்ட இளைஞரொருவரின் சடலம் மறுநாள் கல்லாறு கடற்கரையோரம் வீசப்பட்டிருந்தது. இதைக் கேள்வியுற்ற இளைஞரின் தந்தையான சிதம்பரப்பிள்ளை என்பவர் அதிர்ச்சி தாங்காது மூர்ச்சித்து மரணமானார். இருவரின் சடலங்களும் ஒரே மயானத்தில் ஒரே நேரத்தில் அடக்கம் செய்யப்பட்டன. கடந்த ஏழாம் திகதி சனிக்கிழமை தனது மகனைப் புலிகளிடம் கையளிக்க மறுத்த வெள்ளையன் சித்திரம் என்ற 52 வயதுப் பெண்மணி சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது இரு புத்திரிகள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானார்கள். அம்பாறை மாவட்டம் குடாபொக்கணை செவனப் பிட்டியாவைச் சேர்ந்த சிவநாயகம் புஷ்பகுமார் (19 வயது) ஏறாவூர் சித்தன்கேணியைச் சேர்ந்த கே.ஆர். இரத்தினம், மன்னம்பிட்டியைச் சேர்ந்த பூபாலபிள்ளை கவீந்திரன், கதிரவெளியைச் சேர்ந்த பாலசிங்கம் சாந்திகுமார் ஆகியோரும் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தி லிருந்து மேலும் பதினைந்து இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப் பட்டனர். இவர்களுக்கு நடந்ததென்ன என்பது இதுவரை தெரியவில்லை. இதற்கிடையில் கடந்த ஒன்பதாம் திகதி கோளாவில் பகுதியிலிருந்து வானொன்றில் மூன்று இளைஞர்கள் கடத்திச் செல்லப்படுவதாகக் கிடைத்த தகவலொன்றின் பேரில் பொலிஸார் அவர்களை மீட்டனர். இது தொடர்பாக இரு பிரபா அணிப் புலிகளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். புலிகளின் பிடியிலி ருந்து பாதுகாக்கப்பட்ட விக்னேஸ்வரன், நிமலன், சுதாகர் ஆகிய மூன்று சிறுவர்களையும் பொலிஸார் பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். கடந்த ஐம்பது நாட்களுக்குள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இருபதுக்கு மேற்பட்ட கருணா விசுவாசிகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டுள்ளனரென்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விஸ்வ இந்து பரிஷத் பிரதிநிதிகள் சந்திப்பு

விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான இணைப்பாளர் சுவாமி விக்ஞானந்தா மற்றும் அருளானந்தம் (ஜே.பி), விஜயபாலன் ஆகியோரும் கதிர்காமம் தெய்வானை அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரும் இணைந்து கடந்த ஐந்தாம் திகதி இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துப் பேசினர். முழுநேர இந்து சமய பிரசாரகர்களை உருவாக்கும் திட்டம், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம், பிராமணர்கள் அல்லாத இந்து ஆலய அர்ச்சகர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம், இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை வரவழைத்தல் போன்றவை குறித்து கலந்துரையாடப்பட்டது. அமைச்சருடன் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்.

## பிரிட்டிஷ் விழாவுக்குத் தடை!

பிரிட்டிஷ் தமிழ்ச் சங்கம் இவ்வருடம் நடத்தவிருந்த தமிழ் விளையாட்டு விழாவுக்கு சரே பொலிஸ் விசேட செயற்பாட்டுப் பிரிவு அனுமதியளிக்க மறுத்ததால் அவ் விழா பிற்போடப்பட்டுள்ளது. இம்பர்கோர்ட் பொலிஸ் மைதானத்தில் இவ்விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் பிரிட்டிஷ் தமிழ்ச் சங்கம் ஈடுபட்டிருந்தது. பிரிட்டனில் வாழும் தமிழ்க் குழுக்களுக்கிடையிலும், தமிழ் வாலிபர்களுக்கிடையிலும் மோதல்கள் அதிகரித்து வருவதால் உரிய பாதுகாப்பை வழங்க முடியாதெனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

## விரைவில் கப்பல் சேவை

தூத்துக்குடிக்கும் - கொழும்புக்குமிடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமிழ்நாட் டுக்கும் ஊடுருவலாமென்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அச்சம் தெரிவித்ததையடுத்து, கேரளாவின் கொச்சிக்கும் - கொழும்புக்குமிடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான வேலைகள் முடுக்கி விடப்படுள்ளன. இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கென புதுடில்லியிலிருந்து அதிகாரிகள் குழுவொன்று விரைவில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படு மென்று இந்திய மத்திய கப்பல்துறை அமைச்சர் டி.ஆர். பாலு தெரிவித்தார்.

## கதிர்காம நிலை குறித்துக் கவனம்

இந்து மக்களின் புனிதத் தலங்களில் ஒன்றான கதிர்காமம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களின் அறங்காவலர்கள், இந்து மத நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டுள்ளார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இந்து மக்களின் மன உணர்வுகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையிலான செயற்பாடுகள் கதிர்காம ஆலய சூழலிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்று வருவதாக அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## படகோட்டிகள் காயம்

புலிகளுக்கும் மன்னார் பேசாலைப் பகுதிப் படகோட்டிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலையடுத்து இரு படகோட்டிகளையும் கைதுசெய்து கொண்டுபோக வந்த புலிகளைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து மரத்துடன் கட்டிவைத்தனர். இதனையடுத்து பொதுமக்களுடன் புலிகள் சமரசத்தினை ஏற்படுத்தி கட்டப்பட்ட புலிகளைக் கூட்டிச் சென்றனர். படகோட்டிகளான தர்மலிங்கம் முரளி, சேகு ரவிந்திரன் ஆகிய இருவரும் வழமை போல தமது சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவரும் கடும் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் ஒருவரும் மற்றையவர் மன்னார் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஜனநாயகவாதி என்பதால் கொலைகளைக் கண்டிக்கும் ரவிராஜ் எம்.பி.

"புலிகள் மேற்கொண்ட படுகொலைகள் தவறானவை. ஒரு ஜனநாயகவாதியென்ற முறையில் இவற்றை நான் கண்டிக்கிறேன்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான ரவிராஜ் தெரிவித்தார். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 'ஐ' அலைவரிசையில் இடம்பெற்ற 'சதுரங்கம்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். "யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர்களாகப் பணியாற்றிய சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் ஆகியோரின் படுகொலைகளுக்கும் புலிகளே காரணம். நான் மாநகர சபை முதல்வராகப் பணியாற்றிய காலத்தில் புலி இயக்கத்தவர்களையும் சமாளிக்கும் விதத்தில் எனது வேலைப் பாணியை மாற்றிச் செயற்பட்டேன். இந் நிகழ்ச்சியில் எதிர்த் தரப்பில் விவாதித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். தவராஜாவின் வாதங்களை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்த ரவிராஜ் எம்.பி, அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் அதற்கு ஆதரவளிப்பது தமது தார்மீகக் கடமையென்றும் சொன்னார். இவரின் தீர்க்கதரிசனமான இக் கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## சூரியனில் 'அப்படியா சங்கதி?' தலைகள் பல உருண்டன!

சூரியன் எப்.எம். வானொலியில் பக்கச் சார்பாகவும் முறையற்ற விதத்திலும் அரசியல், சமூக விசயங்கள் விமர்சிக்கப்பட்டு வந்ததாக எழுந்த பலத்த கண்டனங்களையடுத்து அதிரடியாகப் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எதிர்பாராத மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாக காலை 7.40 மணியிலிருந்து 8.00 மணிவரை ஒலிபரப்பாகி வந்த 'அப்படியா சங்கதி?' என்ற நிகழ்ச்சியே அமைந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. சூரியன் வானொலியின் ஆலோசகர் நடராஜசிவம், அறிவிப்பாளர்கள் வியாசா மற்றும் லோசன் ஆகியோர் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'அப்படியா சங்கதி?'யின் ஆரம்ப அறிவிப்பாளரான வியாசா கல்யாணசுந்தரமும், உதவி நிகழ்ச்சி முகாமையாளரான லோசன் ரகுபதி பாலசிறிதரனும் தொகுத்து வழங்கிய இந்த நிகழ்ச்சி தேவையற்ற நையாண்டிகள், பக்கச்சார்பான விமர்சனங்களில் ஈடுபட்டு வந்ததாக பல அரசியல்வாதிகள், சமூக - சமய பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் நிர்வாகத்துக்குச் சுட்டிக்காட்டியதையடுத்து மேற்படி நிகழ்ச்சியை நிறுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப்படியொரு தரக்குறைவான நிகழ்ச்சி நடத்த அனுமதியளித்த காரணத்துக்காக நடராஜசிவம் மீது விசாரணை நடத்தப்படுவதாகவும் அவர் பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளாரென்றும் பிரதான தயாரிப்பாளரான வியாசா விசாரணை எதுவுமின்றி விலக்கப்பட்டுள்ளாரென்றும், லோசன் பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளாரென்றும் கிடைத்த தகவல்கள் குறித்து சம்பந்தப்பட்டோரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் பதிலளிக்க மறுத்துவிட்டனர். 'அப்படியா சங்கதி?' என்று மட்டும் முக்கிய பதவியிலிருப்பவர் எம்மிடம் திருப்பிக் கேட்டார். சகோதர இனத்தைச் சேர்ந்த அரவிந்த என்பவர் புதிய ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று கூறப்படுகிறது.

தரக்குறைவான நிகழ்ச்சிகளின் விளைவாக சூரியன் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்போரின் சராசரி 14.0 சத வீதத்திலிருந்து 7.05 சத வீதமாகக் குறைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தற்சமயம் நிகழ்ச்சிகளில் கூடுதலாகப் பாடல்களே ஒலிபரப்பப்படுவதாகவும், நேயர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளைக் குறைக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## தமிழர் தாக்கப்பட்டார்

பிரிட்டனிலுள்ள ரூற்றிங் என்ற இடத்திலுள்ள கடையொன்றில் வேலை செய்யும் இலங்கைத் தமிழ் இளைஞரொருவர் கடந்த வாரம் புலிகளுக்காக அங்கு நிதி சேகரிக்கும் தமிழர்கள் சிலரால் நையப்புடைக்கப்பட்டார். "மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப் போகிறது. எமது போராளிகளுக்கான சாப்பாட்டுச் செலவுக்கே மாதமொன்றுக்கு ஒன்றரைக் கோடி ரூபா தேவைப்படுகிறது. உமது பங்குக்கு ஒரு வாரச் சம்பளத்தைத் தர வேண்டும்" என்று கேட்டபோது, "நீங்கள் கருணா அணியா, பிரபா அணியா" என்று அந்த இளைஞர் திருப்பிக் கேட்டதன் விளைவே சரமாரியான அடிகள் என்கிறார் லண்டன் வாலிபரொருவர்.

## நோர்வேயில் மாநாடு

இலங்கையில் சமாதானப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான உலகளாவிய கூட்டமைப்பு எதிர்வரும் இருபதாம் திகதி நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் மாநாடொன்றினை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டிக்கும் முன்னோடி நோக்கோடு நடத்தப்படவிருக்கும் இந்த மாநாட்டில், இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக உலகின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரவிருக்கும் பிரதிநிதிகள் கலந்துரையாடவுள்ளனர். நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வர். நோர்வே சமாதானப் பிரதிநிதிகளுக்கும் புலி இயக்க முக்கியஸ்தர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பான ஒளிநாடாக்களும் இங்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நோர்வேயின் 'நோர்விக்' அமைப்போடு இணைந்து நடத்தப்படும் இம் மாநாடு "இலங்கையின் சமாதானத்துக்கான பாதை" என்ற தொனிப்பொருளில் நடத்தப்படும். இலங்கையில் இடம்பெற்றுவரும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் இலங்கைப் பிரச்சினையில் நோர்வேயின் கொள்கைகளால் ஏற்பட்ட சாதக, பாதகமான தாக்கங்கள் பற்றியும் ஆராயப்படும். நோர்வே மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் பீற்றர் எட்லி, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாந்த ஹென்னாயக்க, ஒப்சேர்வர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் எச்.எல்.டி. மஹிந்தபால உட்பட பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் இங்கு உரையாற்றுவர். "நோர்வேயும் புலிப் பயங்கரவாதமும்,என்ற தலைப்பில் முக்கிய உரை ஆற்றப்படும்.

# முரசம்

## வேலையற்ற பட்டதாரிகளும் பயனற்ற கல்வி முறையும்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

**புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சுமார் 30,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கையொன்றை உடனடியாக ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்திற்கமைய சுமார் 17,000 பட்டதாரிகளுக்கு இதுவரை வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை வாய்ப்புப் பற்றிய உறுதி மொழியை தேர்தல் பிரசாரங்களின்போது இக் கூட்டமைப்பு வழங்கியிருந்தது. வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடுகின்ற அரசியல் சுபாவத்திற்கு மாறாக, அவற்றை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டும் அரசின் அக்கறை பாராட்டுக்குரியது. இவ் வேலைவாய்ப்பு வழங்கல் நடவடிக்கைகளில் சில குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டு சிலர் எதிர்ப்புத் தெரிவிக்க விழைந்தனர். இவற்றில் அரசியல் நோக்கங்களும் கலந்திருந்தன. எவ்வாறாயினும் பாரபட்சமற்ற முறையில் இவ் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. வடக்கு - கிழக்கில் இவ் வேலைவாய்ப்புகள் சீராக வழங்கப்படுமென தான் எதிர்பார்ப்பதாகவும்இதில் குறைபாடுகள் இருந்தால் தனக்குத் தெரிவிக்கும்படியும் தான் அதனை அனுமதிக்கப் போவதில்லையென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.**

**எப்படியிருந்தபோதும் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை மெச்சத் தக்கது. இதேவேளை, இப் பிரச்சினை ஏன் எழுந்ததென்பதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும். அடிப்படையில் எமது கல்வி முறையின் குறைபாடே இதற்குக் காரணம். இன்று பயிற்றப்படும் கல்வித் திட்டம் இந் நாட்டின் தொழில் துறைக்கு அமைவாக உள்ளதா? இத் திட்டத்தால் கல்வி கற்று வெளியேறும் பட்டதாரிகளில் ஒரு சிறிய எண்ணிக்கையானோரைத் தவிர, பெருமளவானோருக்கு அக் கல்வி வாழ்க்கைத் தொழிலுக்கு உதவுவதாக உள்ளதா? பணிபுரியும் பட்டதாரிகளில்கூட அவர்கள் தற்போது ஆற்றும் பணிக்கும் கற்ற கல்விக்கும் எவ்வளவு தூரம் தொடர்பிருக்கிறது? பட்டதாரிகள் மட்டுமல்ல, ஏனைய மாணவர்களுக்கும் கற்றதாலான பயன் என்ன? என்ற கேள்வி உள்ளது. வெள்ளையரால் அவர்களது காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ''வெள்ளை கொலர்'' உத்தியோகங்களுக்காகத் தமது நிர்வாகத் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட கல்வி முறையை மாற்றி நாட்டுக்குரிய கல்வி முறையை வடிவமைக்காவிட்டால் இந்தப் பிரச்சினை தீரப் போவதில்லை. தற்காலிகத் தீர்வுகள் அவசியம்தான். ஆனால் நிரந்தரத் தீர்வையிட்டும் நாம் சிந்திக்க வேண்டும்.**

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

---

ந ர ன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுவார்த்தையா? யுத்தமா?

# இறுக்கமடையும் நெருக்கடிகள்

நாட்டில் இனி என்ன நிகழப்போகிறது? யுத்தமா, சமாதானமா? நாட்டு மக்கள் அனைவரையும் இன்று அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கேள்வி இதுதான். தெரிந்த இருவர் சந்தையில் சந்தித்தால் கூட, "என்ன மாதிரிப் போகப் போகுதோ தெரியேல்லை, என்ன?" என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். சிலர் "இப்போதைக்கு உது சரிவரும் போலத் தெரியேல்லை" என்று விசனச் சலிப்பொன்றை உதிர்க்கவும் செய்கிறார்கள். சிலரோ "என்ன, குழம்பப் போகுதோ?" என்று அச்சம் தொனிக்க வினவுகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து உறவினர்கள் எடுக்கும் தொலைபேசி அழைப்புக்களில் 'என்ன நடக்கப்போகிறது' என்று அறியும் ஆதங்கம் பெருகியுள்ளது. வெளிநாடுகளில் உலவும் கதைகளில் யுத்தம் மூளக்கூடுமென்ற அச்சம் பரவியுள்ளது. இங்குள்ள உறவினர்களை தெண்டித்து அங்கே வந்துவிடும்படி அறிவுரை கூறுவது இப்போது வாடிக்கையாகிவிட்டது.

வியாபாரத்திலும் முதலீடுகளிலும் யுத்தம் மூளக்கூடிய அச்சத்தின்பாலான தயக்கம் தோன்றியுள்ளது. பலர் நிலைமையை அவதானித்து முடிவு செய்வது உசிதமென்ற எண்ணத்தில் தமது முதலீட்டுத் திட்டங்களை இடைநிறுத்தி அல்லது ஒத்திவைத்துள்ளார்கள்.

வெளிநாடுகளின் குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் அரசாங்கங்கள் அந் நாட்டுப் பிரஜைகளை இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்த விழைந்துள்ளன. எந் நேரத்திலும் யுத்தம் வெடிக்கலாம் என்ற கணிப்பு அவர்கள் மத்தியில் உள்ளது. இலங்கையின் உல்லாசப் பயணத்துறை, ஹொட்டேல்துறை என்பன மறுபடி முடங்கிச் செல்லும் நிலைமை தோன்றியுள்ளது.

தமிழ் ஊடகங்கள் அரசாங்கத்தைச் சாடும் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுத ஆரம்பித்துவிட்டன. புலிகளின் பத்திரிகை மற்றும் ஊடகக் கருத்துக்கள் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையைத் தெரிவிக்கின்றன. யுத்தமேற்பட்டால் தாம் போராடத் தயாரென்ற அறைகூவல்களும் சில சமயங்களில் வெளிவரத் தொடங்கிவிட்டன. புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரி.என்.ஏ. எம்.பி.க்கள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிப் பேசி வருகிறார்கள். புலிகள் முன்வைத்துள்ள ஐ.எஸ்.ஜி.ஏ. இடைக்கால நிர்வாகத் திட்டத்தை ஏற்றுப் பேச்சுவார்த்தை நடத்தாவிட்டால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடுமென்ற அச்சுறுத்தல்களை விடுக்கிறார்கள்.

இவற்றுக்கு மத்தியில் யுத்த நிறுத்த மீறல்கள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் மிக உச்ச நிலைக்குச் சென்றுள்ளன. நாளாந்தம் கொலைகள் நடக்கின்ற மோசமான நிலைமைக்குச் சென்றுவிட்டதுடன், தற்கொலைக் குண்டு வெடிக்கும் நிலையும் தோன்றிவிட்டது. நிகழ்கின்ற எந்தக் கொலையையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்கு அரசாங்கம் உள்ளாகிவிட்டது. இவற்றைக் கட்டுப்படுத்துவது கடினமென்று பாதுகாப்பு அதிகாரிகளே கூறுகின்ற அளவில் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விட்டது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு செல்லாக் காசாக மாறிவிட்டது. அதன் வார்த்தைகளுக்கு யாரும் மதிப்புக் கொடுக்கத் தயாரில்லை என்ற அளவுக்கு அவர்கள் அருகதையற்றவர்களாகி விட்டார்கள்.

இத்தகைய நிலைமைக்கு மத்தியில் எவருக்கும் யுத்தம் பற்றிய அச்சம் எழுவது தவிர்க்க முடியாததே. அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற அக்கறைக்குரிய கேள்வி இன்று எல்லோர் மத்தியிலும் உள்ளது.

புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்டிப் பதவிக்கு வரமுன்னரே - கடந்த ஐக்கிய தேசிய முன்னணியின் காலத்திலேயே பேச்சுவார்த்தை முறிவடைந்து போயிருந்தது. புலிகள் அவ் அரசாங்கத்திடமே தமது இடைக்கால நிர்வாக அதிகாரசபைக் கோரிக்கையான ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்தினை முன்வைத்திருந்தார்கள். ஆனால், அவ் அரசாங்கத்தால் இப் பாரிய கல்லினைப் புரட்ட முடிய வில்லை. பேச்சுவார்த்தையை நகர்த்த முடியவில்லை.

புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தபோது புலிகள் முன்வைத்திருந்த ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்திற்குப் பதில் கூற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த அரசாங்கத்தைச் சேர்ந்த பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய இரண்டும் கடந்த அரசாங் கத்தில் எதிர்க்கட்சியிலிருந்தபோதே இந்த ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்தை நிராகரித்திருந்தன. இப்போது அரசமைத்திருக்கும் நிலையில் அவற்றுக்குச் சங்கடமான நிலைமையொன்று தோன்றியுள்ளது.

ஒருபுறம் புதிய அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு அதன் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தவும் அது தேர்தலில் வழங்கியிருந்த உறுதிமொழிகளைக் காப்பாற்றவும் வேண்டியுள்ளது. இதற்கு யுத்தமற்ற சூழ்நிலையைத் தொடர்ந்து பேண வேண்டிய அவசியமுள்ளது.

அதேவேளை நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்படுத்த வெளிநாட்டுக் கடனுதவிகளையே இலங்கை நம்பியுள்ளது. ஆனால், யுத்தமற்ற நிலைமையிலும் பேச்சுவார்த்தைகள் நிகழ்வதிலும், அப் பேச்சுவார்த்தைகளில் தீர்வுக்கான நம்பிக்கைகள் காணக் கிடைப்பதிலுமே இந் நிதியுதவிகள் கிட்டுமென இவ்வுதவி வழங்கும் நாடுகள் குறிப்பாலுணர்த்தியுள்ளன. குறைந்தபட்சம் பேச்சுவார்த் தையை ஆரம்பித்தாலாவது முதற் கட்ட நிதியுதவிகளைத் தன்னும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே, பேச்சுவார்த்தைகளை நிராகரிக்க முடியாத ஒரு நிர்ப்பந்தம் இவ் அரசாங்கத்துக்குள்ளது.

இதேவேளை இவ் அரசாங்கம் இதுவரை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையற்ற ஒன்றாகவே திகழ்கிறது. இந் நிலையில் அரசாங்கத்தின் சட்டமூலங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவ தென்பது சிரமமானதொன்றாக ஆகியுள்ளது. இந் நிலையில் அரசாங்கம் தமிழரசுக் கட்சியினரையும் அனுசரித்துக் கொள்ள வேண்டியதாக உள்ளது. குறைந்தபட்சம் அவர்களை நடுநிலைப்படுத்தவாவது முயற்சிக்க வேண்டிய தேவை அதற்குள்ளது. இந் நிலையில் அரசு பேச்சுவார்த்தை மற்றும் புலிகளின் இடைக்காலத் தீர்வுத் திட்டம் தொடர்பாக மென்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது.

எனினும் இந்த நிலையில் தற்போது மாற்றமேற்படும் சாத்தியங்கள் தோன்றியுள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையும் சாத்தியம் உறுதியாகிவிட்டது. இதனால் அரசாங்கம் பெரும்பான்மை யைப் பெற்றுவிடும். அதனால் சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்குப் பிறர் தயவைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாது போய்விடும்.

இது தமிழரசுக் கட்சியினருடன் அளவுக்கதிகமாக அனுசரித்துச் செல்ல வேண்டிய அவசியத்தை இல்லாததாக்கிவிடும். அவர்களின் நிர்ப்பந்தங்களால அரசாங்கம் நசிந்து செல்ல வேண்டிய கட்டாயத்தை அது தாண்டிவிடும்.

எவ்வாறாயினும், அரசாங்கம் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தவும், வாக்குறுதிகளை நிறைவேற்றவும், வெளிநாட்டுக் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டியுள்ள நிலைமைகளை மட்டும் கருதி, புலிகள் முன்வைத்துள்ள ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்தை ஏற்றுப் பேச்சுவார்த்தைக்கு செல்லுமென எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ஐ.எஸ்.ஜி.ஏ.இன் உள்ளடக்கங்களை இந்த அரசியல் யாப்புக்குள் ஈடுசெய்ய முடியாது. அத்துடன் அவ்வாறாக அதையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்துவ தென்பதே இத் திட்டத்தின் பின்புலத்திலமைந்துள்ள புலிகளின் கோட்பாட்டை அங்கீகரிப்பதாகிவிடும் என்ற அச்சம் அவர்களுக்குள்ளது. இரு அரசு மையங்களுக்கு இடையிலான இணைக்கப்பாட்டுக்காக வகுக்கப்பட்ட வரையறைகளாகவே இத் திட்டத்தை வகுத்த புலிகளின் கோட்பாடு புலப்படுகிறது. ஆனால், அரசாங்கம் ஒரு அரசு மையம் பற்றிய கருத்துருவத்தையே கொண்டுள்ளது.

யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக அல்லது தற்போதைய நிலையை நீடிப்பதற்காக, இன்னும் கூறப்போனால் காலத்தை இழுத்தடிப்பதற்காகவேனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு முன்வர முனையலாம் என்ற எதிர்பார்ப்பு சில வட்டாரங்களில் இருந்தது. அவ்வாறு செய்யும்படி கூட சில வட்டாரங்களால் அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதாவது, பேச்சுவார்த்தையில் இறங்கி, புலிகளின் திட்டத்திலுள்ள கடினத் தன்மையை வெளிக்காட்டுவது, அத்துடன் பேச்சுவார்த்தை முறிவடைந்தால் அரசாங்கம் முன்வந்தபோதும் புலிகளே விட்டுக்கொடுக்க மறுத்ததாகக் காட்டுவது இவ் ஆலோசனைகளின் சாரமாக இருந்தன.

ஆனால், அது ஒரு விஷப்பரீட்சை என்றே அரசாங்க வட்டாரங்கள் உணர்கின்றன. புலிகளை அம்பலப்படுத்து வதற்குப் பதிலாக, அரசாங்கம் புலிகளின் கோரிக்கைகள் எதையும் நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ளதென்று விமர்சிக்கப்பட்டு -புலிகளின் யுத்தம்- பிரிவினை யுத்தம் நியாயப்படுத்தப்பட்டுவிடும் ஆபத்தை அவர்கள் உணர்கின்றனர். அத்துடன் ஐ.எஸ்.ஜி.ஏ.யின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்குச் சென்று இரு அரசுகள் என்ற நிலையை அங்கீகரித்துப் பேசுவதாகிவிடும் என்ற அச்சமும், அவ்வாறு அங்கீகரித்துப் பேசினால் உலக நாடுகளும் அதனை அங்கீகரித்துவிடும் அபாயமும் அரச தரப்பு இராஜதந்திரிகளால் உணரப்படுகிறது.

எனவே, ஐ.எஸ்.ஜி.ஏ. என்ற திட்டத்தை விடுத்துப் பொதுவான பேச்சுவார்த்தை ஒன்றுக்குச் செல்லவே அரசாங்கம் விரும்புகிறது. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றிருந்த அரசாங்க சமாதானச் செயலகத்தின் தலைவர், ஜனாதிபதி புதியதொரு இடைக்காலத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவுள்ளார் என்ற புதிய செய்தியொன்றைத் தெரிவித்தார். இத்தகைய நிலைமையை முன்னிட்டே அரசாங்கம் இப்போது இவ் அறிவிப்பினைச் செய்துள்ளது.

ஆனால், இது புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரப் போவதில்லை. புலிகள் தாம் முன்வைத்த ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்தின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென்பதில் பிடிவாதமாக உள்ளார்கள். கடந்த பொதுத் தேர்தலிலும் இவ் ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்துக்கு தமிழ் மக்களிடம் மக்களாணை பெறப்போவதாகக் கூறியே தேர்தலில் தமது தரப்பினராகத் தமிழரசுக் கட்சியினை முன்னிறுத்தினர். எனவே, ஐ.எஸ்.ஜி.ஏ. குறித்துப் பேசுவதற்கான மக்களா ணையைத் தாம் பெற்றுள்ளதாகவே புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். அரசாங்கம் இறுதித் தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தக் கோரியபோதும் புலிகள் அதனை நிராகரித்து ஐ.எஸ்.ஜி.ஏ. பற்றியே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனக் கூறினர். பின்னர் அரசாங்கம் இறுதித் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டு சமகாலத்தில் இடைக்காலத் தீர்வைப் பற்றிப் பேசலாமெனத் தெரிவித்ததற்கும் அதை மறுத்து, முதலில் ஐ.எஸ்.ஜி.ஏ. திட்டத்தைப் பேசி அதை அமுலாக்கொண்டே இறுதித் தீர்வையிட்டுப் பேசலாமெனத் தெரிவித்துவிட்டனர். அவர்களிடம் போய் ஜனாதிபதியின் புதிய இடைக்காலத் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் ஏற்பார்களா? எனவேதான் இது புலிகளிடம் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதில்லையெனக் கூறக் கூடியதாகவுள்ளது. எனினும் அந்த யோசனைகளின் சாராம்சத்தைப் பொறுத்து அது உலக நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியாக அமையலாம்.

எவ்வாறாயினும் இந் நிலையில் பேச்சுவார்த்தை நகர்வதற்கான சாத்தியங்கள் எதுவுமே தென்படவில்லை. இது யுத்தம் மூளக்கூடிய ஆபத்துக்கு இட்டுச் சென்றுவிடக் கூடாதென்பதே இப்போதுள்ள பெருங் கவலையாகும்.

ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை யுத்தமொன்றில் உடனடியாக ஈடுபடத் தயாரில்லை. ஏனெனில் அது நாட்டில் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும். உலக நாடுகளின் நன்மதிப்பை இழக்கச் செய்யும். யுத்தத்தின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் மனித உரிமை நற்சான்றுகளைச் சீரழித்து மீண்டும் அவப் பெயரைப் பொறித்துவிடும். மேலும், யுத்தமொன்றுக்குக் கைகொடுக்கக் கூடிய நம்பகரமான வெளிநாட்டு ஏற்பாடுகளை இன்னும் அரசாங்கம் உறுதி செய்துகொள்ளவில்லை.

புலிகளைப் பொறுத்தவரையிலும் கூட உடனடி யுத்தம் வரவேற்கக் கூடியதல்ல. தற்போதைய சமாதான சூழலில் அமைந்துள்ள அதன் வருவாய்த் திட்டங்கள் பல யுத்தம் ஏற்பட்டால் முடங்கிவிடும். குறிப்பாக ஏ9 பாதையை மூட நேர்ந்துவிடும். அத்துடன் தற்போது கருணா அணியின் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில் வழமையாக கிழக்கிலிருந்து கிடைக்கும் உதவிப் படையை இப்போது புலிகளின் வன்னித் தலைமை எதிர்பார்க்க முடியாது. இதேவேளை கிழக்கு மாகாணமே தற்போது பலவீனமான நிலையிலுள்ளது. யுத்தமேற்பட்டால் அங்குள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் காப்பாற்ற முடியாது போய்விடும். கருணா அணியினர் அரசாங்கத்துக்கு உதவும் சாத்தியக்கூறு இருப்பதால் அரசாங்கத்துக்கு இது வாய்ப்பாகிவிடும். அத்துடன் புலிகள் யுத்தத்தில் இறங்கினால் சர்வதேச நாடுகளின் ஆதரவை இழக்க நேரிடலாம். மேலும் சில நாடுகள் குறிப்பாக கனடா, பிரான்ஸ், ஜேர்மனி போன்றவை புலிகளைத் தடை செய்யும் நிலை தோன்றலாம். அல்லது தடை செய்யப்படும் என்ற அச்சுறுத்தலை யுத்தத்தைக் கைவிடும் நிர்ப்பந்தங்களாக இந் நாடுகள் பிரயோகிக்கலாம். இதை விட தற்போதைய இந்திய அரசாங்கம் தலையிட முன்வரலாம் என்ற அச்சமும் புலிகளுக்கு உண்டு. ஏற்கெனவே இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளும் நிலைமை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இவ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் பலத்த உதவி இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக்கலாம்.

இத்தகைய பாதகங்கள் அரசாங்கத் தரப்பிலும் புலிகள் தரப்பிலும் இருந்தாலும் இப்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைக்கு அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வியொன்று உள்ளது. இப் பாதகங்களை மீறியும் யுத்தம் பற்றிக்கொள்வதற்கு ஏதுநிலைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால், சமாதானம் பிறப்பதற்கு......? இன்னும் யுத்தத்திற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புக் கூட இங்கே சமாதானத்துக்கு இல்லாதிருப்பதான் கவலை தருகிறது.

**தமிழ் ஊடகங்கள் அரசாங்கத்தைச் சாடும் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுத ஆரம்பித்துவிட்டன. புலிகளின் பத்திரிகை மற்றும் ஊடகக் கருத்துக்கள் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையைத் தெரிவிக்கின்றன. யுத்தமேற்பட்டால் தாம் போராடத் தயாரென்ற அறைகூவல்களும் சில சமயங்களில் வெளிவரத் தொடங்கிவிட்டன. புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரி.என்.ஏ. எம்.பி.க்கள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிப் பேசி வருகிறார்கள்.**

# துரோகிகளாக்கப்பட்ட போராளிகளின் மரணங்கள்!

இலங்கையின் பேரினவாதம் தமிழர்களை அடக்கி ஒடுக்கிவிட முடியும் எனவும், அதற்கான காய் நகர்த்தல்களையும் திட்டமிட்டபோது, அதற்கு எதிராக வெடித்த எதிர்ப்புப் போராட்டம் காலத்தின் தேவையாக உணரப்பட்டது. பொது எதிரியான பேரினவாத சக்தியை எதிர்த்து பல வழிகளில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதற்காகக் கல்வி, உறவுப் பாசம், சுகபோகம் என்பதையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டுப் புறப்பட்ட தமிழ் இயக்கத் தலைவர்களும், அவர்களின் வழிகாட்டலில் இன விடுதலைப் போரில் கைகோர்த்துக்கொண்ட போராளிகளும் மதிக்கப்பட வேண்டியவர்கள். இவர்களே தியாகிகள், விடுதலை வீரர்கள். இப்படியான வரலாற்று நாயகர்கள் பிற்காலத்தில் தமிழ் இனத்தின் துரோகிகளாக்கப்பட்டிருக்கும் விதம் ஆராயப்பட வேண்டியது. ஆயுதம் தாங்கிப் போராடிய வீர புருஷர்களை பார்ப்பதற்கு முன்னர் அகிம்சை வழியில் தமிழினத்தின் தலைவர்களாக இருந்தவர்களும் வரலாற்றில் குறிப்பிடக் கூடியளவு பங்களிப்புச் செய்துள்ளார்கள். இவர்களில் தமிழர்களின் தேசியத் தலைவராக தமிழர்களாலும், சர்வதேச மட்டத்திலும் மதிக்கப்பட்டவர் அமரர் அ. அமிர்தலிங்கம். இலங்கையின் பாராளுமன்ற சரித்திரத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தது மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளிடன், குறிப்பாக இந்தியத் தலைவராக இருந்த இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் அதிக விருப்பத்துக்குரியவராகவும் இருந்தவர். தமிழர்களின் சார்பில் உரிமைப் பிரச்சினையை இராஜதந்திர ரீதியாக நகர்த்துவதில் அப்போது வெற்றி கண்டிருந்தவர். அமெரிக்காவின் நியூயோர்க் வரை தமிழீழப் பிரச்சினையை அக் காலகட்டத்திலேயே ஒலிக்கச் செய்தவர். இயக்கங்களுக்கிடையில் இந்தியாவில் முறுகல் நிலை முற்றிய சம்பவத்தில் கைதான புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்திய அரசாங்கத்துடன் பேசி விடுவித்தார். அவ்வளவுக்கு தனது அர்ப்பணிப்பால் செல்வாக்குப் பெற்றிருந்தார். தமிழீழத்தில் பாராளுமன்றம் கட்டப்படும் என்று அப்போதே இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தவர். இவர் பற்றி இன்னும் அதிகமான குறிப்புகள் உள்ளன. அவற்றை 'தேநீர் கோப்பைக்குள் இரத்தம்' தொடரிலும், இலங்கைத் தமிழரின் எந்தவொரு வரலாற்றிலும் தெரிந்துகொள்ள முடியும்.

இப்படியானவருக்கு நேர்ந்த மரணம் இயற்கையானதோ, தற்செயலானதோ இல்லை. நன்கு திட்டமிடப்பட்டது. அவரின் வீட்டில் அவரையும் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களான யோகேஸ்வரன், சிவசிதம்பரம் ஆகியோரையும் சந்திப்பதற்காக வந்த இரு இளைஞர்களால் தேநீர் கொடுத்து, குடித்துக்கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவத்தில் சிவசிதம்பரம் உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத் தக்கது.

"அண்ணை. நாங்கள்தானண்ணை. எங்களை செக் பண்ண வேணுமாம்" என்று வீட்டுக்குள் வந்து- அவர் கொடுத்த தேநீரைக் குடித்துவிட்டுச் சுட்டவர்கள் துரோகிகளா?, அவர்களை நம்பி "செக் பண்ணாமல் விடுங்கோ, வாங்கோ தேநீர் குடியுங்கோ" என்று போராட்டத்தை ஊக்குவித்தவர் துரோகியா? . இதே சம்பவத்தில் பலியான யோகேஸ்வரன் மற்றுமொரு வரலாற்று நாயகன்.

யாழ்ப்பாணத்தில் துரையப்பாவைக் கொன்றுவிட்டு புலிகளின் தலைவர் ஒளிந்துகொண்டு திரிகையில் அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றியவர் யோகேஸ்வரன். இவர் சுடப்பட்டதோடு நிறுத்தாமல், யாழ்ப்பாணம் அழிவுற்ற காலப்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணிக்குக் கிடைத்த மாநகர சபையின் மேயர் பதவியைப் பொறுப்பேற்று கணவனின் வழியைப் பின்பற்றி மக்கள் சேவைக்காக வந்த திருமதி யோகேஸ்வரனையும் சுட்டுக் கொன்றனர். இதில் எது துரோகம்?.

இவர்களைப் போல குறிப்பிடக்கூடிய மற்றுமொரு நபர் ஒபரோய் தேவன். நன்கு படித்தவர். ஹோட்டலில் வேலை செய்து சுகபோகமாக வாழ்ந்தவர். இன விடுதலைப் போர் வெடித்தபோது தன் மக்களுக்காகப் போராட இந்த வாழ்க்கையை அர்ப்பணித்தார். நீர்வேலி வங்கிக் கொள்ளையை நடத்தியவர்களில் ஒருவர். அவரது வீட்டுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரனை கூட்டிக்கொண்டு போகும் சமயங்களிலெல்லாம் அவரது அம்மா சோறு பிசைந்து தேவனுக்கும், பிரபாகரனுக்கும் கொடுத்து இருவரையும் தன் வயிற்றுப் பிள்ளைகளாக மதித்தவர்.




அக் காலகட்டத்தில் ஒப்ரேய் தேவன் டெக் மற்றும் இலக்ரோனிக் சாமான்களை வாங்கி விற்று இயக்கத்தின் செலவுகளுக்கு உதவி வந்திருந்தார். வியாபாரத்தில் இடம்பெறக்கூடிய ஒரு சில பிரச்சினைகளை சரியாக விசாரிக்காமல், சுமுகமான தீர்வைப் பற்றி யோசிக்காமல், அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சுடப்பட்டதில் என்ன நியாயமிருக்க முடியும்? அவர் துரோகியாக்கப்பட்டுவிட்டார்.

மூதூரைச் சேர்ந்த தங்கதுரை, திருகோணமலையில் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தலைவர் அமிர்தலிங்கத்துடன் தமிழர் உரிமைக்கான போராட்டத்தில் அதிகமாக பங்கு கொண்டவர். இவரும் சுட்டுக் கொல்லப்பட்டார். இதே போல் யாழ். மாநகர சபையின் மேயராக இருந்த சிவபாலன் சுடப்பட்டதும் தெரிந்ததுதான். இந்தப் படுகொலைகளுக்குள் சிவசிதம்பரத்தின் பெயர் வராதது அபூர்வம்தான். இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த சிவசிதம்பரம் மீண்டும் இலங்கை வந்து கூட்டணித் தலைவராக இருந்து இயற்கை மரணம் எய்தினார். இப்படி இயற்கை மரணம் எய்தியதால் தலைவர் செல்வநாயகமும் பாக்கியசாலிதான்.

1986ஆம் ஆண்டு TELO அமைப்பின் தலைவராக இருந்தவரும் 'அண்ணன்' என்று எல்லோராலும் மரியாதையாக அழைக்கப்பட்டவருமான ஸ்ரீசபாரத்தினம் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் சுட்டுக் கொல்லப்பட்டார். நீர்வேலி வங்கிக் கொள்ளைச் சம்பவத்தின்போது, இலங்கை பொலிஸ்காரர் ஒருவரால் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுடப்படுவதற்காக குறிவைக்கப்பட்டபோது, அந்த பொலிஸ்காரரைச் சுட்டு பிரபாகரனைக் காப்பாற்றினார். இப்படியான தலைவர் இயக்க முரண்பாடுகள் காரணமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுத் துரோகியாக்கப்பட்டார். மீண்டும் இயக்க முறுகல் வலுப்பெற்றதால் அதைத் தீர்த்து பிரதான தமிழ் இயக்கங்களாக இருந்த E.P.R.L.F., E.R.O.S., T.E.L.O., L.T.T.E. ஆகிய இயக்கங்கள் E.N.L.F. எனக் கூட்டு அமைத்தன. இதில் L.T.T.E. காலம் தாழ்த்தியே கூட்டுச் சேர்ந்தது குறிப்பிடத் தக்கது.

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழ் இயக்கங்களுக்கிடையே சமரசம் செய்யும் முயற்சியாக மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் புளொட்(P.L.O.T.) அமைப்பின் உறுப்பினர் வாமதேவன் சுடப்பட்டார். இதில் விசேஷம் என்னவென்றால் வாமதேவனின் சகோதரன் வாசுதேவன் அதே காலப்பகுதியில் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருக்கிறார் என்பதுதான். சமரசம் என்ற பெயரில் சந்திப்புக்கு வரவழைக்கப்பட்ட இடத்தில் சுடப்பட்டு வாமதேவன் துரோகியாக்கப்பட்டார்.

இந்தக் கூட்டு முயற்சிக்காகப் பெரிதும் உழைத்த ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் தோழர் பத்மநாபா குறிப்பிடத் தக்கவர். இவர் இந்தியாவில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக் கொலைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் இந்தியப் பிரதமராக இருந்த இலங்கை வாழ் தமிழ் மக்களின் உறவுக்காரர் மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி, கோயம்புத்தூரில் தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார். இந்திய இராணுவத்தினருக்கும்-புலிகளுக்கும் இலங்கையில் மோதல்கள் நடக்கக் காரணமானவர் கொல்லப்பட்டுவிட்டார் என்று கூறப்பட்டது. 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வன்னியில் பிரபாகரன் நடத்திய சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பில் ஒரு ஊடகவியலாளர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டாரே என்று கேட்டதற்கு, "அது ஒரு துன்பியல் சம்பவம்" என்று கூறி பிரபாகரன் சர்வதேசத்தின் ஒட்டுமொத்த விமர்சனத்திற்கு ஆளானார். இதுவும் வரலாறு.

ராஜீவ் காந்தி எப்படி இலங்கை வாழ் தமிழர்களின் உறவுக்காரர் ஆனார்? இந்தக் கேள்வி பலருக்கும் தெரிந்திருக்க வேண்டும். 1987ஆம் ஆண்டு ஜே.ஆரின் இராணுவப் படையெடுப்பு மூர்க்கத்தனமாக யாழ். வடமராட்சியை அழித்தது. அப்போது அந்த அழிப்பு நடவடிக்கையை நிறுத்தச் சொல்லி ராஜீவ் காந்தி வேண்டுகோள் விடுத்தார்.


இலங்கைத் தமிழர்கள் இலங்கை நாட்டு இராணுவத்தால் கொல்லப்படுவதையும், உணவின்றி அநாதரவானதையும் தாங்க முடியாத உச்சக் கட்டத்தையும் ராஜீவ் செயல் வடிவப்படுத்தினார். கடல் வழியாக உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கடற்கலங்களை இலங்கைக் கடற்படை தடுத்தது. எனினும் சர்வதேச சட்டதிட்டங்களை மீறி, மேற்படி பொருட்களை இந்தியாவில் தரையிறக்காமல் நேரடியாக விமானத்தில் ஏற்றி இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து யாழ்ப்பாணத்தில் பரவலாகப் போடச் சொன்னார். இதைச் சற்றும் எதிர்பாராத ஜே.ஆர். ஜெயவர்த்தனா பயந்துபோனார். இந்தியா இலங்கைக்கு எதிராக இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து விட்டதாகவே அவர் பயந்தார். வடமராட்சியின் மீது மேற்கொண்டிருந்த இராணுவ நடவடிக்கையை நிறுத்தினார். பின்னர் இந்தியா பேச்சு நடத்தியதும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜே.ஆருக்கும் ராஜீவ் காந்திக்கும் இடையே கைச்சாத்தானது. இதற்காக வருகை தந்திருந்த ராஜீவ்காந்தி, இலங்கைப் படையினரின் இராணுவ மரியாதையை ஏற்றுக்கொள்ளும் வைபவத்தின்போது படை அதிகாரியொருவன் தனது கையிலுள்ள துப்பாக்கியினால் ராஜீவ் காந்தியின் தலையைத் தாக்கினான். ராஜீவ் காந்தி தற்செயலாகக் குனிந்தபடியால் அடி பிடரியில் பட்டது. பின்னர் மெய்ப்பாதுகாவலர்கள் காப்பாற்றினர். இதைக் கூடப் பெரிதுபடுத்தாமல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கைச்சாத்திட்டவர்

அலசுவது
- மதியூகி -

தான் ராஜீவ் காந்தி. இன்றைக்குக் கூட தமிழர்களின் வாழ்விடங்களாக தமிழீழம் எனக் குறிப்பிடப்படும் வடக்கு - கிழக்கை இணைத்து வைத்து மாகாணமாக்கிய பெருமை ராஜீவ் காந்தியையே சாரும்.

*இப்படியாக ஒவ்வொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்கிறோமே! யாரால் சுடப்பட்டனர்? இலங்கை அரசாங்கமா கொன்றது? இல்லை, இராணுவமா கொன்றது? இல்லை, கொலையாளி யார்? மக்கள் சிந்தித்து உணர்வார்களா? இதே வரிசையில் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டுப் படுகொலையான புளொட் மோகன், ஈ.பி.ஆர்.எல்.எப். இராசிக், கருணா அணி சச்சு மாஸ்டர் மற்றும் ஏனையோரின் விடுதலை வரலாற்றையும் அவர்கள் துரோகிகளாக்கப்பட்ட விதத்தையும் அடுத்த வாரம் பார்ப்போம்.*

## அதிரடி அய்யாத்துரை



"**ஜனநாயகவாதி** என்ற முறையில் மனிதப் படுகொலைகளைக் கண்டிக்கிறேன்" எண்டு எங்கட ரி.என்.ஏ. கூட்டைச் சார்ந்த எம்.பி. ரவிராஜ் சொல்லியிருக்கிறது பாராட்டத் தக்க விசயந்தான். அந்தக் கூட்டுக்குள்ள இருக்கிறவை எவையும் இப்ப நடக்கிற படுகொலைகளைக் கண்டிக்க நினைச்சும் பாக்காமலிருக்கேக்க, தான் ஒரு ஜனநாயகவாதி எண்டதை வெளிக்காட்டியிருக்கிறார். அதே நேரத்தில இவரோடு கூட இருக்கிற மற்றய எம்.பி.க்கள் இந்தக் கொலைகளைக் கண்டிக்க முன்வராதது ஜனநாயக விரோதமெண்டும் சொல்லாமல் சொல்லுமாப் போல இல்லையோ?

**ரவிராஜ்** எம்.பி.யின்ர கதைகளில இப்ப நல்ல மாற்றங் கண்டிருக்கிறதாப் பல பேர் வியக்கிறாங்கள். வியக்கத் தக்க இன்னொரு விசயம் என்னெண்டால், தனக்கு முந்தின ரெண்டு மேயர்மாற்ற படுகொலைகளுக்கும் ரெண்டெழுத்தார்தான் காரணமெண்டு தனக்குத் தெரியுமெண்டும், தான் தகுந்த மாதிரி நடந்துகொண்டால தனக்குப் பிரச்சினை வரேல்லையெண்டும் தொலைக்காட்சி விவாதத்தில ஒப்புக் கொண்டதுதான். இப்பிடியே அவர் தங்கட தலைவர்கள் அமிர், யோகேஸ் படுகொலைகளையும் வெளிவாரியாய்க் கதைக்கத் துணிஞ்சிடுவார் எண்டு பேசிக்கொள்ளினம். அது சரி, ஆனந்தசங்கரி இதுகளக் கதைச்ச நேரத்தில குழிபறிச்ச கூட்டம் இப்ப ரவிராஜுக்குக் கை குடுக்கவே போகுது? இருந்து பாப்பம்.

**கடந்த** தேர்தலில யாழ்ப்பாணத்தில அதிகூடிய -(எ்கள- கீறிட்ட இடத்தை நிரப்புக. சொல் குழம்பியுள்ளது) வாக்குகளைப் பெற்று முதலாவது எம்.பி.யாகத் தெரிவான கஜேந்திரனாரைத் தெரியுமெல்லோ. தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சிச் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜாவுக்கே கிடைச்சது கடைசி எட்டாவது சீற்றுத்தான். அவரை மட்டுமல்ல கூட்டமைப்பின்ர நாலு கட்சித் தலைமை வேட்பாளர்களையும் ஏறி மிதிச்சுக்கொண்டு இவர் திடீரென லட்சக்கணக்கான யாழ்(?) மக்களின்ர அமோக ஆதரவைச் சுவீகரிச்ச அதிசயத்தை நம்பிய ஆறாம் அறிவைக் கழட்டி வைச்சுப்போட்டு நம்பியே ஆகவேண்டிய தலையெழுத்து எங்களுக்கு. அவரைக் கொணந்து பாராளுமன்றத்தில பேசவிட்டு கன்னியுரையையே கன்ஸாட்டால நீக்கச் சொல்லிச் சபாநாயகர் உத்தரவு போடுற அளவு தராதரத்தில அமைஞ்சிருக்குது பேச்சு. இப்ப என்ன சங்கதி தெரியுமோ? அவரைத் தொலைக்காட்சி விவாதங்களில பங்குபற்ற வைக்கிறதுக்கு சில ரி.என்.ஏ.காறர் அவதிப்படுகினம். ஏனெண்டு தெரியும்தானே. ஆள் பேசினால் அதுக்குத்தான்.... நுணலேயும் தன் வாயால் கெட வைக்க...!

"**ஓதாமல்** ஒரு நாளும் இருக்க மாட்டேன்" எண்ட கணக்கா வாயத் திறந்த நேரமெல்லாம் ரெண்டெழுத்தார் புகழ் பாடி வந்தவர் எங்கட காங்கிரஸ் கட்சி வினாயகமூர்த்தியார். "ஒருதரையும்" பொல்லாங்கு சொல்லாத அந்த மனிசரையே போன தேர்தலில யாழ்ப்பாணத்தை விட்டு அகற்றி வன்னியில விழுத்தி மண் கவ்வப்பண்ணி ஒதுக்கிப்போட்டினம். ஆளை இப்ப ஒரு பொருட்டாவே கருதிறதில்லையாம். இந்த நிலையில அவர் யாழ்ப்பாணத்திலயிருந்து கொழும்புக்கு வந்த பாதையில கியூவில விட ஆள், "தம்பி நான் இன்னார் இன்னார்" எண்டு சொல்லச் சொல்ல நல்லாச் செக்பண்ணி அனுப்பியிருக்கினம். அவமானம் தாங்காமல் இப்ப அவையப் பற்றி அபசுரம் பாடித் திரியிறாராம். பாவம் மனிஷன்? ம்... இப்ப உச்சத்தில பறக்கிற பட்டங்களெல்லாம் நூலறுந்த கையோட எப்பிடி விழும் எண்டு புரிஞ்சால் சரி!

**இந்தியாவுக்குப்** போய் உதைபட்டுத் திரும்பின பந்தொண்டு பார்லிமெண்டுக்குப் போய்த் துள்ளிக் குதிக்கப் பாத்துது. மற்றய சகாக்கள் எட்டிப் பிடிச்சு நிப்பாட்டிப் போட்டினம். எங்கட ஈழத்து வேந்தனாரைத்தான் சொல்லுறன். சார்க் விசாவைச் சாட்டா வைச்சு இந்தியாவுக்குள்ள நுழையப் பாத்தவரை எயார்போட்டில வைச்சே திருப்பி அனுப்பினவயெல்லோ. இது பாராளுமன்ற உறுப்பினர்களின்ர சிறப்புரிமை மீறலெண்டு கண்டனக் கடிதமொண்ட சபாநாயகரிட்டக் குடுத்திருக்கிறார் வேந்தனார். விஷயமறிஞ்ச டி.என்.ஏ.காறர் பதறியடிச்சு ஓடிப்போய் அந்த விவாதத்தை நிப்பாட்டியிருக்கினம். ஆனால் அந்தக் கடிதத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் மூலமாக இந்தியாவிட்டக் குடுக்கச் சொல்லி அறிவுரை சொல்லியிருக்கிறார் சபாநாயகர். இனி வேந்தனார் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு லக்ஷ்மனிட்டப் போவாரோ? ஏன்தான் அறளை பெயர்ந்தவரை வைச்சுக்கொண்டு மாரடிக்க வேண்டிக் கிடக்குதோ எங்கட ரி.என்.ஏ.க்கு? வட்டு டு? அவையால எதையும் தீர்மானிக்க முடியாதே!

**இந்தியத்** தூதுவர் பிரியாவிடை பெறும் விருந்தொண்டு கிட்டடியில நடந்ததெல்லோ. எல்லாப் பெரிய மனிசர்களும் வந்திருந்தவை. எங்கட ரி.என்.ஏ.க்காறரைத்தான் மருந்துக்கும் காணேல்லையாம். விசயமென்னெண்டால் அவை ஒருத்தருக்கும் அழைப்பே குடுக்கேல்லையாம்! எந்தக் கணக்கில அவைய மதிப்பிட்டு வைச்சிருக்கினம் பாத்தியளோ! இந்த வள்ளலில இந்தியாவுக்குத் தூதுபோய் இந்திய அரசாங்கத்தின்ர நிலைப்பாடுகளை மாத்தப் போகினமெண்டு பெரிசா பாச்சா காட்டினம். "யானைக்குட்டி முட்டையிட்டு கோழிக்குஞ்சு வந்ததெண்டு..." சொல்லுறவன் சொல்ல நம்பிறதுக்கு நாங்க ரெடி!

"**ஏன்** சம்பந்தர் அமெரிக்காவில ரொக்காவைச் சந்திக்கப் போகேல்லை?" "இல்லை. இப்ப, கஜேந்திரகுமார்! நீர் பதில் சொல்லும். ஏன் போகேல்லை. உங்களையெல்லாம் எம்.பி.க்களாத் தெரிஞ்செடுத்து வைச்சிட்டுப் பாத்துக் கொண்டிருந்தால் நீங்கள் அலுவல் பாக்கிறத விட்டிட்டு உல்லாசப் பயணம் நடத்தித்திரியிறியளோ?....." இப்பிடியொரு இங்குவாரி எங்க நடந்ததெண்டு பாக்கிறியளோ! வன்னியில எண்டுதான் நினைப்பியள். அதுதான் இல்லை. வன்னிய மிஞ்சின வன்னியாய் தனியார் தொலைக்காட்சி விவாதக்காறர் ஒருவர் விரல் காட்டி மிரட்டினதப் பாத்து அசந்து போனன். பாவம் கஜேந்திரகுமார். இது ஏதோ பெரிய இடத்தால கேக்கச் சொன்ன கேள்வியோ எண்டு பயந்தே போனார். சம்பந்தர் அமெரிக்கா போனது நேரம் கெட்ட நேரம் போல கிடக்குது. வந்து இறங்கேக்க வலது கால வைச்சு இறங்கச் சொல்லுங்கோ மறந்திடாமல்!

***தொண்டமான்*** அரசாங்கத்தோட சேரப்போறது உறுதியெண்டாயிட்டுது. சேந்தால் அரசாங்கம் பெரும்பான்மை பெற்றிடும். இப்பத்தய சிறுபான்மை நிலைமையை வைச்சுக்கொண்டு சில்லறை விசயங்களுக்கும் பயம் காட்டி வந்தவைதான் இனிச் செல்லாக் காசாப் போகினம். இதுக்குப் பிறகு புதுப் புதுத் திருப்பங்கள் நடந்தாலும் நடக்கலாம். சபாநாயகற்ர சீற்றே கேள்வியாகுமாப் போல கிடக்குது. நடப்பதை இருந்துதான் பாப்பமே!

# விளம்பரப் பகுதி



## சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவீடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.



## உங்கள் கைரேகையை நினைத்தது நினைத்தவாறு நடைபெற

மனோபலம் வீரியம், தத்துவம், சோம்பலின்மை, பணம் கையில் புழங்க, காதல் கைகூட வழிவகை, நினைத்தது நினைத்தவாறு நடைபெற, உங்கள் கைரேகையின் சக்தியை அட்சரக்கூட்டில் அடக்கி விதியை வெற்றிகொள்ள,
ஜாதகம் இல்லாதவர்கள் கைரேகையைக் கொண்டு ஜாதகம் எழுதிக்கொள்ள என்னைச் சந்தியுங்கள்.

**K.Gangatharan (MA), J.P**


(ஐரோப்பிய நாடுகளில் புகழ் பெற்ற)
(மணவள ஆலோசகர், கைரேகை நிபுணர்)

162, கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் ரோட்,
கொழும்பு-13.
தொலை பேசி 0777 - 388860, 2344832, 2342464.



## மலையாள மாந்திரீகம்





**கை கண்ட பலன் பெற வாருங்கள்**

எம்மால் வெற்றி பெறுவது என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

**மலையாள மனோவசிய மதுரைவீரன் சக்கரம்**

இக் சக்கரத்தால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் நட்ட நிலை மாறி மீண்டும் இலாபம் அமையும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை கிடைக்கும். பெற்றோர்கள், பிள்ளைகளின் உறவு வலுவடையும். கடன் தொல்லைகள் அகலும். செல்வம் சேரும்.

**மலையாள மனோவசிய வாழைதேவி சக்கரம்**

இது திருமணம் ஆகாதவர்களுக்கு கைகண்ட பலனைக் கொடுத்து வருகிறது.

**மலையாள மனோவசியம் ருத்திர ஜண்டி சக்கரம்**

இது எதிரிகள் இன்றி வாழ ஒவ்வொருவருக்கும் அவசியமே.

**மலையாள மனோவசிய சக்தி மைந்தன் மூல சக்கரம்**

பிரிந்த கணவன் ஒன்று சேரவும். காதலன், காதலி ஐக்கியப்படவும், மேலும் இச் சக்கரத்தால் எதிரிகளால் உங்களுக்கு தீய வேலைகள் செய்ய முடியாமலும் காவல் நிற்கும்.
நேரடித் தொடர்புகளுக்கு:-

**Prof. Dr. P.K. Samy (J.D.G.A.N) J.P.**

No: 162, Kotahena Street, Mayfield Road, Colombo-13

Sri-Lanka CLI-No- 0094(11)2342463, 42470615, 3431137, 2344832-2449110, Hotline-CLI No:- 0094-(11)-4613133, 4613124,4613127,
Fax-0094112344831
Email-drpksamy@sltnet.lk

நுவரெலியாவில் : Tel Cli No : 052-2222508, 2235097, 223093

வெளிநாட்டவர்களுக்கு எம்மிடம் பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. (இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)


# 15ஆவது வீரமக்கள் தினம்

*மக்களுக்காய் அவர்தம் வாழ்வுக்காய், விடுதலைக்காய் உணர்வுகளை, உறவுகளின் பாசங்களை உள்ளத்தின் ஆழத்தில் உயிருடன் புதைத்துவிட்டு, கவலையைக் காட்டாது உரிமைக்காய் உறுதியாய் உறங்காது உழைத்து உதிரம் சிந்தி உயிர் ஈந்த உயரிய மனிதர்களே! தோழர்களே! நீங்கள் கல்லறையில் தூங்கலாம், காற்றினில் கலந்திருக்கலாம். உங்கள் எண்ணங்கள், கருத்துக்கள் எம் மூச்சுள்ளே விதைக்கப்பட்டுள்ளன. விருட்சமாகும் நாள் வெகுதூரமில்லை. விழுதுகளாகவேனும் நாமிருந்து எமது மக்கள் விடுதலை பெற்று இளைப்பாற இனிய நிழல் நாம் கொடுத்திடுவோம் வீரமக்கள் உமது பெயரால்.*அமரர் தோழர் உமாமகேஸ்வரனின் 15ஆவது வருட நினைவு தினத்தில். அவரின் தீர்க்கதரிசன, தூரநோக்குச் சிந்தனையையும், கருத்துகளையும், செயற்பாட்டையும் மீள்பதிவு செய்வது இக் காலத்தில் சாலச் சிறந்தது.அமரர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்கள் கழகத்தின் செயலதிபராக இருந்த காலத்தில் கழகத்திற்குள்ளும், வெளியிலும் கழக உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், மனிதாபிமானமற்ற செயல்கள் அனைத்துக்கும் 1986இல் பின்தளத்தில் நடைபெற்ற மகாநாட்டில் விமர்சன, சுயவிமர்சன அடிப்படையில் கழகத்தின் செயலதிபர் என்ற முறையில் அதற்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக்கொண்டு மன்னிப்பும் கேட்டிருந்தார். 1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர், இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் திரும்புவதற்கு முன்னர் தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களிடமும் நேரடியாகச் சென்று நன்றி தெரிவித்தார். இலங்கை-இந்திய ஒப்பந்தம் சம்பந்தமாக கலைஞர் கருணாநிதி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார். " ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் எல்லோரும் சொல்லாமல் கொள்ளாமல் விமானத்தில் ஏறிச் சென்றுவிட்டார்கள். ஆனால், முகுந்தன் (உமாமகேஸ்வரன்) என்னிடம் வந்து நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றது எனக்குச் சந்தோசத்தை தந்தது" இப்படியெல்லாம் ஈழத் தமிழர் போராட்டத்திற்கு அங்கீகாரத்தையும், ஆதரவினையும், மதிப்பையும் பெற்று உலகின் கவனத்தை முறையாக எமதினத்தின் விடுதலையின் பக்கம் திருப்பும் தூரநோக்குடன் செயற்பட்ட அதே நேரத்தில், ஈழ விடுதலையில் இலக்கற்ற வீர தீரச் செயற்பாடுகள், சகோதர முரண்பாடுகள், கொலைகளாலும் விடுதலையையும், மக்களின் வாழ்வையும் அழிவுப் பாதைக்கு இட்டுச்சென்ற சக்திகளை, தன் தலைமையில் இருந்த கழகத்தின் பலத்தில் அழிக்கக் கூடிய நிலையிருந்தும் கழகத் தோழர்கள் பலரைப் பாசிசம் பலிகொண்ட வேளையிலும், விடுதலையின் திசையை மாற்றக் கூடிய அழிவுக்குட்படுத்தக் கூடிய சகோதரத்துவ யுத்தத்தை இறுதி மூச்சுள்ள வரை தவிர்த்து, தனது உதிரத்தை ஈழத் தாயின் காலடியில் சிந்தி தாய்மண்ணில் உயிரை ஈந்த, மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி அமரர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்கள் கோடிக்கணக்கான பணத்தை சுவிஸ் வங்கியில் போட்டுள்ளார் என்றும் அராஜகவாதி எனவும் கண்மூடித் தனமாக விமர்சித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இன்று வெளிநாடுகளில் அரசு சாரா நிறுவனங்களின் பணத்திலும், விடுதலையின் பேரால் மக்களிடம் கொள்ளையிடும் பணத்திலும் சொகுசாக, சுயநல வாழ்வு வாழ்ந்துகொண்டு புலிகளின் துதிபாடிகளாகவும், புலிகளின் உளவாளிகளுமாகச் செயற்படுகின்றார்கள். மேலும், வெளிநாடுகளில் ஈழத் தமிழர்களிடையில் பிரிவினை, முரண்பாடுகளை உருவாக்குவதிலும் மேலாக, கொலைகளின் பின்னணிச் சூத்திரதாரிகளாகவும் செயற்படுகிறார்கள் என்பதும் பலரும் அறிந்திராத அருவருக்கத் தக்க அதிர்ச்சியூட்டும் உண்மைகளும் ஆகும். இலங்கை-இந்திய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டபோது அமரர் தோழர் உமாமகேஸ்வரனால் (கழகத்தால்) வெளியிடப்பட்ட பிரசுரத்தை அறிவு பூர்வமாகக் கூர்ந்து கவனித்தால் எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் கழகத்தால் போராட்டம் தூரநோக்குப் பார்வையுடன் மக்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு அதற்கான ஆதரவினை இன,மத பேதங்களுக்கு அப்பால் திரட்டிக்கொண்டும் முன்னெடுக்கப்பட்டது என்பது தெளிவாகப் புலப்படுகின்றது இதனைப் புரிந்துகொள்ளாத அறிவிலிகளும், சகித்துக்கொள்ள முடியாத ஏகாதிபத்தியங்களும், பாசிஸ்டுகளும் துரோகிகள், கைக்கூலிகள் மூலமாக அதன் தலைவரையும் (தீர்க்கதரிசி) அவருடன் இணைந்து செயலாற்றிய வீரமும் அறிவும் கொண்ட போராளிகளையும் தொடர்ந்து அழித்தொழித்ததோடில்லாமல் தொடர்ந்தும் கழகத்தை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த உண்மையாகும். இற்றைக்கு 16 ஆண்டுகளுக்கு முன் கூறிய இத் தீர்க்கதரிசனத்தை இக் காலகட்டத்தில் மீண்டும் சொல்வது சாலச் சிறந்ததாகும். இத் தீர்க்க தரிசனத்தின் உண்மைகள் இன்று இலங்கைத் தமிழர் மற்றும் இலங்கை மக்கள் யாவராலும் உணரப்படும் நிதர்சனமாகும். இவர் போன்ற தலைவர்களால் இது போன்ற பல உண்மைகள் தீர்க்கதரிசனமாக எமது போராட்ட வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. உண்மையான விடுதலை இயக்கங்கள், அதன் தலைவர்கள் அழிக்கப்படலாம். ஆனால் அவர்களின் உண்மையான கொள்கைகளையோ, மக்களின் உணர்வையோ அழிக்க முடியாது. இவர்களின் செயல்களும் எண்ணங்களும் என்றும் உயிர் வாழும். மக்கள் போராட்டத்திற்கு வழிகாட்டியாக உறுதுணையாக இருக்கும்.

தீர்க்கதரிசனங்கள் அறிவு,
தேசப்பற்று, மனிதநேயம்
உள்ளவர்களின் அநுபவம்,
தூரநோக்கு என்பவற்றில் இருந்து
பிறக்கும் கருத்துக்களாகும்.
*"இக் கருத்துகள் ஆயுதங்களில்*
*இருந்து பிறப்பதும் இல்லை.*
*அவற்றால் மரணிப்பதும்*
*இல்லை"*

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**
**சர்வதேச ஒன்றியம் சுவிஸ் கிளை,**


## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை இல.33, 42nd lane இல், 3 Bed Rooms, 2 இணைந்த குளியலறை, 1 Servant Toilet, உடன் லிப்ற், சுடுநீர், A/C, Cable T.V, தனிப்பட்ட Roof Garden Luxury வீடு (1750 ச.அடி) தொடர் மாடி 7th Floor இல் ஒரு சில மாதங்களில் குடிபுகும் நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 2-360031,
2-501380, 2-361300.


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

*இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:*

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3500 | ரூ.1750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4400 | ரூ.2200 | ரூ.1100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 . Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager Thinamurasun" என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta,Colombo-06 .என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## வன்மையாகக் கண்டிப்போம்!

இலங்கைத் திரையரங்குகளில் ஆபாசத் திரைப்படங்களின் வருகை மிக வேகமாக அதிகரித்துள்ளது. ஆபாசத் திரைப்படங்களுக்கு எதிராகப் பல கட்டுரைகளை எழுதியும் ஒரு சிலரைத் தவிர, பலருக்கு சிந்திக்கும் தன்மை வரவேயில்லை. புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் அரசின் பங்காளிகளாக இருக்கும் ஜே.வி.பி.யினர் ஆபாசத் திரைப்படங்கள் குறித்துக் கடும் போக்கை வெளிப்படுத்தி வருகின்றனர். இதை நிச்சயம் பாராட்டியே ஆக வேண்டும். வெறுமனே வயது வந்தவர்களுக்கு மட்டும் என விளம்பரங்கள் செய்வதால் பலரையும் திரையரங்குகளுக்கு இழுத்துவிட முடியுமெனத் திரையரங்கு உரிமையாளர்கள் எண்ணக் கூடும். ஒரு படத்துக்குக் கொடுக்கப்படுகின்ற விளம்பரம், பெரிய திரை அமைப்பு என்பன இது குறித்து எதிர்பார்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. எமக்குக் கிடைக்கும் செய்திகளின்படி இலங்கையில் திரையிடப்படும் ஆபாசத் திரைப்படங்கள் குறித்து தணிக்கைக் குழு அதிகாரிகள் மிகக் கவனமாகச் செயற்படுவதை அறியமுடிகிறது. முன்னரை விடவும் ஆபாசத் திரைப்படங்களின் இறக்குமதி குறைந்துள்ளது எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் ஆபாசத் திரைப்படங்களின் இறக்குமதி முற்றாக நிறுத்தப்பட வேண்டுமென்பதே எமது அவா. ஒரு சில இறக்குமதியாளர்கள் நல்ல வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஆபாசத் திரைப்படங்களை இறக்குமதி செய்வதும், இதற்காக வெட்கித் தலைகுனிந்து வாழ்வதும் எதிர்காலத்தில் அம்பலத்திற்கு வரக்கூடும். எனவே, யுத்தத்தினால் திசை மாறிப்போயிருக்கும் இளைய சமூகத்தை மேலும் சீரழிக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். எதிர்கால சமூகத்தின் பின்னடைவுக்குக் காரணமானவர்களாக எவரும் இருந்துவிட வேண்டாம். சிறந்த திரைப்படங்களை இறக்குமதி செய்து அதனூடான இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதே தொழில் தர்மம். ஆபாசப் பட இறக்குமதியால் கிடைத்த இலாபத்தில் எந்தச் சந்தோசத்தையும் உரிமையாளர்கள் கண்டுவிட முடியாது. எமது இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு ஆபாசத் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவது குறைந்து வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். எஞ்சியிருக்கும் ஓரிரு திரையரங்குகளும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த மறுக்குமானால் வெளிப்படையாகவே ஆபாசத் திரைப்பட இறக்குமதியாளர்களையும் திரையரங்க உரிமையாளர்களையும் கண்டிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்படும். அப்படியொரு நிலை ஏற்பட்டால் எமது இந்த வேண்டுகோளுக்கு ஆதரவு தரும் அரசியல் சக்திகளோடு இணைந்து பெரும் கண்டனப் போராட்டமொன்றை வெகு விரைவில் நடத்தவும் வேண்டி வரலாம். ஆபாசத் திரைப்படங்களைத் தடை செய்யக் கோரும் இந்த வேண்டுகோள் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டதல்ல. எமது சமூகத்தின் ஒட்டுமொத்த எதிர்காலம் குறித்ததாகும். எனவே, இவ்வாறான நியாயமான போராட்டத்திற்கு சமூகத்தின் பால் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பும் எமக்கு ஆதரவு தரும் என்பதில் மறுபேச்சுக்கு இடமிருக்க முடியாது. ஆகவே, எமது நியாயமான வேண்டுகோளை சம்பந்தப்பட்ட பட இறக்குமதியாளர்களும் திரையரங்கு உரிமையாளர்களும் கவனத்தில் கொள்வது அவசியம். இவ்விடயத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதியும் அவரது தலைமையிலான அரசாங்கமும் மிகக் கூடிய கவனமெடுத்துச் செயலாற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

*- இளைய அறிவிப்பாளர் மன்றம்.*

**07.08.2004 திகதிய “டெய்லி நியூஸ்” ஆங்கில இதழில் பிரசுரமான அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்**

## இன்னொருவர் பார்வையில்

# புலிகளின் பிடிக்குள் சமாதான முன்னெடுப்பு

இலங்கையிலிருந்து கடந்த வாரத்தில் வெளிவந்த செய்திகள் யாவும் சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்து நம்பிக்கையீனத்தையே எதிர்வு கூறுகின்றன. நாட்டில் இருக்கும் அநேகமான ஆய்வாளர்களும், சமாதானப் பிரியர்ளெனச் சொல்லிக்கொள்பவர்களும், அடிக்கடி வெளிப்படையாகப் பேசும் வர்த்தகப் பிரமுகர்களும் மீண்டும் யுத்தத்தின் விளிம்புக்குத் தள்ளப்படுவதாகவே கூறுகின்றனர். நிச்சயமற்ற தன்மையும், பதற்றநிலையும் நீடிக்கிறது என்ற சிந்தனைக்கு ஆதரவளிக்க ஐக்கிய தேசியக் கட்சியும் மிகுந்த ஆவல் கொண்டுள்ளது. இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏதோவொரு பாத்திரத்தை வகித்து அதன் சுவையைச் சுவைத்தவர்கள், இப்போது ஒவ்வொரு விதமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். எனினும் புலிகளுக்கும் புதிய அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டாலொழிய சமாதான முன்னெடுப்பு என்ற ஒன்றிருக்காது என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

இப்போது இதனை அறியாதவர்கள் யார்? இது குறித்து இலங்கை ஜனாதிபதியும் மக்கள் விடுதலை முன்னணியினரும் அறிவார்கள் என்றே நம்புகின்றேன். பேச்சுக்கள் மீண்டும் தொடங்கப்படாமலிருப்பதன் பாதகம் குறித்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் புரிந்துகொண்டுள்ளதை விடவும் இவர்கள் அதிகமாக உணர்வார்கள். இதேவேளை ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஐ.தே.க. ஒத்துழைத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முனையவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆபத்தான பாதையில் வழிநடத்திச் சென்ற நோர்வேயினால் எதையும் சாதிக்க முடியவில்லை எனவும் மறு தரப்பில் சுட்டிக் காட்டப்படுகிறது.

சர்வதேச அபிப்பிராயமும் உள்ளூர்ப் பிரமுகர்களது எண்ணமும் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்குக் கொண்டுவருவது மட்டுமே சமாதான முன்னெடுப்புக்கான வழி என்பதாக உள்ளது. ஆனாலும் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதில் இருக்கும் ஒரேயொரு தடை பற்றி எவரும் வெளிப்படையாகப் பேசுவதாக இல்லை. பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவது தாமதமாகுமானால் 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி வாய்ப்புப் பறிபோய்விடும் என்பதுதான் பலரதும் கவலையாக உள்ளது. அவர்கள், சர்வதேச சமூகத்திற்கு வேறு முன்னுரிமைகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அது உண்மைதான். ஆனால், சமாதான முன்னெடுப்புகள் என்று வரும்போது புலிகள் கடைப்பிடிக்கும் நேர்மையற்ற மௌனத்தில்தான் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உண்மையான தடை தங்கியிருக்கிறது என்பதை மூடி மறைத்து, பொதுவாக இரு தரப்பினர் மீதும் எல்லாரும் குற்றம் சுமத்துகின்றனர்.

### குற்றம் சுமத்தல்கள்

புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுக்கள் தொடங்கப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்க மறுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் அதி தீவிரவாதப் போக்கையே பலரும் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால், வேறு எல்லாவற்றையும் தவிர்த்து, இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த மேசைக்கு வரத் தயார் எனக் கூறும் புலிகளின் நிலைப்பாடு குறித்து எவரும் தவறு காண்பதாக இல்லை. இதற்காக எவரும் புலிகள் மீது குற்றம் சுமத்தவும் முற்படுவதாக இல்லை. இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் அதேவேளையில், சமாந்தரமாக இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்தும் பேச வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இத்தகையோர் அங்கீகரிப்பதாகவும் இல்லை. புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு மாற்றாக அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்துக் கலந்துரையாடக் கூட இவர்கள் தயாராக இல்லை. ஐ.தே.முன்னணி அரசுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியதைக் கேலிக்கூத்தென வர்ணித்து அதிலிருந்து விலகிய புலிகள், ஆறு மாதங்கள் கழித்து இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தனர் என்பது தெரிந்ததே. ஆம். சர்வதேச அனுசரணையாளர்களது ஒத்துழைப்புடன் ஐ.தே.முன்னணியும் புலிகளும் இலங்கை மக்கள் மீது நடத்திய மிகப் பெரும் கேலிக்கூத்து இது.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் போரை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகப் புலிகள் எச்சரிக்கின்றனர். ஆனால், பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்போது புலிகள் முன்வைத்த யோசனையில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்வதற்குக் கூட அவர்கள் விரும்பவில்லை. பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பில் மிக முக்கியமானது சுதந்திரக் கட்சி என்ற அரசியல் உண்மையைப் புறக்கணித்து, இடைக்கால நிர்வாகம் தொடர்பில் விட்டுக்கொடுக்காத போக்கையே அவர்கள் கைக் கொள்ளுகின்றனர்.

பல கட்சிகளைக் கொண்ட கூட்டணியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டும், விமர்சனங்களைப் புறக்கணித்தும் செயற்பட வேண்டுமென எவரும் எதிர்பார்க்க முடியாது. இன்று மக்கள் விடுதலை முன்னணி எதிர்நோக்கும் சவால் இதுதான். அவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் விதத்தில் மாறுபாடுகள் இருக்கின்ற போதும் கூட சாராம்சம் இதுதான். இது மக்கள் விடுதலை முன்னணியின் அதி தீவிரவாதப் போக்கு அல்ல. இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தொடர்பாக சுதந்திரக் கட்சி முன்வைத்த விமர்சனங்களையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும். இது சமாதான முன்னெடுப்புக்களில் ஐ.தே.முன்னணி காட்டிய முதுகெலும்பற்ற தன்மையை நிராகரித்து 2004 ஏப்ரல் 2இல் மக்கள் வழங்கிய ஆணையை முன்னெடுக்கும் முயற்சியாகும்.

> **பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் போரை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகப் புலிகள் எச்சரிக்கின்றனர். ஆனால், பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்போது புலிகள் முன்வைத்த யோசனையில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்வதற்குக் கூட அவர்கள் விரும்பவில்லை. பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பில் மிக முக்கியமானது சுதந்திரக் கட்சி என்ற அரசியல் உண்மையைப் புறக்கணித்து, இடைக்கால நிர்வாகம் தொடர்பில் விட்டுக்கொடுக்காத போக்கையே அவர்கள் கைக் கொள்ளுகின்றனர்.**

எனினும், மக்கள் விடுதலை முன்னணியானது தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் போது சமாதான முன்னெடுப்புக்களின் இன்றைய நிலையைக் கருத்திற் கொண்டு மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும். இடைக்கால நிர்வாக யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாவற்கு ஆதரவு தர முன்வந்த ஐ.தே.க.வின் விருப்பத்தை ஜனாதிபதி நிராகரித்தது சரியான செயலாகும். அரசியல் நடைமுறைகளில் சுதந்திரக் கட்சியை ஜே.வி.பி.யிடமிருந்து தனிமைப்படுத்துவதில் ஐ.தே.க. வெற்றிகாணும் சாத்தியம் இன்னமும் உள்ளது. புலிகளைத் திருப்திப்படுத்தும் ஐ.தே.க.வின் நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக அது நீளலாம். இரு பெரும் தேசிய அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தைப் பல்வேறு முக்கியஸ்தர்களும் திரும்பத்திரும்பக் கூறிவருவதை எவரும் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது.

இக் காரணங்களாலேயே மக்கள் விடுதலை முன்னணி மிகக் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. சுதந்திரக் கட்சி புலிகளைக் கையாளுவதற்காக ஐ.தே.க.வின் ஆதரவை நாடிச் செல்லும் துரதிர்ஸ்டவசமான நிலை ஏற்பட்டால் அது ஜே.வி.பி.க்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். 1988.'.89 காலத்தைய நிகழ்வுகள் அல்லது அதையும் விட மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். இந்த நிலை மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது.

### விட்டுக்கொடுப்பு அவசியம்

சாராம்சமாகச் சொல்வதானால் மக்கள் விடுதலை முன்னணி புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பில் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தும்போது இன்னும் அதிகமான தளர்வைக் காட்ட வேண்டும். தமது அடிப்படைக் கொள்கைகளைக் காட்டிக்கொடுக்காத அதே சமயம், புலிகளுடன் பேசப் பெரும்பான்மை யானவர்கள் விரும்புகின்றனர் என ஜே.வி.பி. கூறலாம். பேச்சுக்கள் தொடங்கப்பட்ட பின்னர் இந்த யோசனையில் திருத்தங்களையும் மாற்றங்களையும் தேவையான இடங்களில் கொண்டுவர முயற்சிக்கலாம். அதேவேளை புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனையில் காணப்படும் ஜனநாயக விரோத அம்சங்களைச் சுட்டிக் காட்டி அவற்றுக்கான எதிர்ப்பைத் தெளிவாக முன்வைக்கலாம். இதேவேளை நிபந்தனையற்ற ஆதரவளிக்க முன்வந்த ஐ.தே.க.வின். நிலைப்பாட்டையும் பயன்படுத்திக்கொள்ளலாம். புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனைகளில் ஐ.தே.க.வினால் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்களைப் பகிரங்கமாகத் தெளிவுபடுத்தும்படி கோரலாம். ஏனெனில், ஐ.தே.க. என்ன நினைக்கிறது என்ன செய்ய ஏற்படுகிறது என்பதை அறிந்துகொள்ளும் உரிமை பொதுமக்களுக்கு இருக்கிறது.

**லூசியன் ராஜகருணாநாயக்க**

---

*நிமல் விஜேதா*

*இலங்கை அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.யினருக்கும் இடையில் ஸ்தம்பிதமடைந்துள்ள சமாதானத்துக்கான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து தமது முயற்சியை மேற்கொள்ளுமுகமாக நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அண்மையில் இலங்கை வந்திருந்தார். தமது விஜயத்தின் இறுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது, பலாத்காரங்களினாலும் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளின் காரணத்தாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை பலமிழந்துள்ளதாக இருதரப்பினருக்கும் ஹெல்கீஸன் எச்சரிக்கை விடுத்தார். அவர் தற்போதுள்ள நிலையை மிகைப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் அவரைக் குற்றம் சுமத்தியது. ஞாயிறு “ஐ லண்ட்” பத்திரிகை ஈமெயில் மூலம் அனுப்பிவைத்த கேள்விகளுக்கு ஹெல்கீசன் பதிலளித்துள்ளார்.*

**பேட்டியிலிருந்து சில துணுக்குகள் :-**

***கே :-*** அண்மையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டின்போது சாதாரணமாக நோர்வே அளிக்கும் இராஜதந்திர விளக்கங்களை விட உங்களது விளக்கம் பலமாக இருந்தது. ஏன் இப்படியான ஒரு மாறுதல் ஏற்பட்டது., தற்போதைய நிலை மோசமாக உள்ளது என்ற நிலையிலா முன்னரை விட அழுத்தமான விளக்கத்தை நோர்வே வழங்கியுள்ளது?

*ப :-* விளக்கம் அழுத்தமானதல்ல. ஆனால், அது வெளிப்படையாகவுள்ளது. யுத்த நிறுத்தம் சமாதான உடன்படிக்கையில் உள்ளதல்ல என்று நான் குறிப்பிட்டேன். இலங்கையில் தொடர்ந்தும் முரண்பாடுகளுள்ளன. எனினும், குறிப்பிட்ட தரப்பினர் அதனை மிகைப்படுத்திவருகின்றனர். மிகைப்படுத்தியுள்ள முரண்பாடுகளின் ஓரங்களில் சில தழும்பல்கள் உண்டாகியுள்ளன. அதனால்தான் யுத்த நிறுத்தத்தைக் தொடர்வதற்கு ஒத்துழைப்பு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்றேன். இரு தரப்பு தலைவர்களும் மீண்டும் ஒத்துழைக்க ஆரம்பித்துள்ளனர். அது நல்ல ஒரு நிலை. சமுதாயத்தில் உள்ள சகல இனத்தவர்களும் வேறுபாடுகளை மறந்து இந்நிலை தொடர்வதற்கான தமது பங்கினை அளித்தல் வேண்டும்.

***கே :-*** நீங்கள் சுய திருப்தியைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். அதனை விளக்க முடியுமா? சுய திருப்தியுடையவர் யார்? எந்த வகையில்? இந்த சுய திருப்தி சமாதான நடவடிக்கைகளுக்கு எந்த வகையில் உறுதுணையாக உள்ளது?

*ப :-* எனது விஜயத்தின்போது சமுதாயத்திலுள்ள பல தரப்பினர்களைச் சந்தித்தேன். அவர்களனைவரும் பொதுவான ஒரு எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். அவர்களது கூற்றின்படி அமைதி திடப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் பயமின்றி வருகின்றார்கள். வெளிநாட்டு முதலீடும் பங்குச் சந்தையும் வானை எட்டுகின்றன. இந்த முன்னேற்றங்களை முறையானதாக ஏற்றுக்கொள்ளக் கூட யுத்த நிறுத்தமே காரணம். ஆனால், சமாதானப் பேச்சு நடவடிக்கைகளைக் தொடர்ந்தும் பலப்படுத்துவதன் மூலமே இம்முன்னேற்றங்கள் திடப்படுத்தப்பட்டு அவை சமுதாயத்தின் அடிமட்டத்துக்குச் செல்ல வாய்ப்புள்ளது. இலங்கையின் அரசியல் தலைவர்கள் சமாதானத்துக்காகவும் அதற்கான விருப்பத்துடன் கூடிய விட்டுக் கொடுப்புகளுடனும் செயற்படும்போது அவர்களுக்கு பக்கபலமாக இருந்து பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டியது அவசியமே தவிர சுய திருப்தியடைவதல்ல.

***கே :-*** தற்போதுள்ள நிலையை மிகைப்படுத்துவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளீர்கள். அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

*ப :-* கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஒன்றும் நடைபெறவில்லை. அதுபற்றி நாம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குத் தெரிவித்ததுடன் அப்படியான பேச்சுவார்த்தைகள் தொடரத் தவறினால் யுத்த நிறுத்தத்துக்கு மிகவும் பாதிப்புகள் ஏற்படும் என்றும் எச்சரித்தோம். சமீபத்தில் நடைபெற்ற கொலைகளும், குண்டு வெடிப்புகளும் உறுதியற்ற நிலையையும், பதற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலை கிழக்கில் மட்டுமல்ல, கொழும்பிலுள்ள வீதிகளிலும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையைப் பற்றி எச்சரிப்பது மிகைப்படுத்துவது அல்ல. ஆனால், சிலர் நெருப்புடன் விளையாடுவதாகவும் அதனால் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்று சொல்வதேயாகும். எனினும், இந் நிலைக்கு மாற்றமானவர்களும் உள்ளனர். இந் நிலையிலும் கூட, இரு தரப்பிலுமுள்ள சமாதான செயலகங்களும் மற்றும் இராணுவப் பிரிவினரும் தொடர்ந்தும் அமைதியை நிலைநாட்டி வருகின்றனர்.

இம் மாதிரியான நிலை அமைதி நிலைகொண்டுள்ளது என்றும் அதனால் பதற்ற நிலை குறையும் என்றும் எண்ணக்கூடியதாகவுள்ளது. இத்தரப்பினர்கள் தொடர்ந்தும் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

***கே :-*** இலங்கை அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.யி.இனருக்கும் இடையிலான நம்பகத்தன்மை குறைந்துள்ளது. இதனை எப்படி மாற்ற முடியும்? மீண்டும் இந்த நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்ப எவ்வளவு காலமாகும்? அதனால் எதிர்பார்க்கக் கூடியவை என்ன?

*ப :-* 50 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய முரண்பாடுகளை சில மாதங்களிலோ சில வருடங்களிலோ தீர்த்து வைத்து அதனூடாக நம்பிக்கையை உடனடியாகக்கொண்டு வர முடியாது. பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு அவற்றின்போது எடுக்கப்படும் முடிவுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே பூரண நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதற்கு முதற்படியாக, இரு தரப்பினரும் பலாத்காரங்களை நிறுத்த வேண்டும். அடுத்தபடியாக, நம்பகத்தன்மை குறைந்தாலும் பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என்பதை அவர்கள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மேன்மை தகு ஜனாதிபதியவர்கள் தாம் அதற்காகத் தயார் என்பதைக் கூறியுள்ளதன் மூலம் தமது தலைமைத்துவத்தைச் சிறப்பித்துக்கொண்டுள்ளார்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## –வாழ்க்கை சரிதம்–

தமிழும் கன்னடமும் அறிந்த ஸ்ரீநிவாசராவ், நான் எழுதிய முழுப் பாட்டையும் கன்னடத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார், கெம்பராஜ் மிகவும் திருப்தியடைந்தவராக 'Very good boy...' என்று என் முதுகில் தட்டிவிட்டு எழுந்து போனார். மறுநாள் Record-ing என்றும், என்னை அழைத்துச் செல்ல வண்டி வரும் என்றும் சொன்னதும் எனக்கு ஆனந்தத்தில் தலைகால் புரியவில்லை.

என்னை மீண்டும் திருவல்லிக்கேணியில் கொண்டுவிட, என்னுடன் FIAT- காரில் ஸ்ரீநிவாசராவும் வந்தார்.

"என்ன சார் மொத மொதல்ல பாட்டு எழுத வந்திருக்கேன்.. என்னெ, மியூசிக் டைரக்டருக்கு நேரே சிகரெட் பிடிக்க வெச்சுட்டீங்க? புதுசா பாட்டு எழுத வந்தவனுக்கு, ஆரம்பத்திலேயே மரியாதை தெரியல்லேன்னு அவர் என்னைத் தப்பா நெனச்சிருப்பாரே, சார்..." என்று ஸ்ரீநிவாசராவிடம் என் மன வருத்தத்தை சொன்னேன்.


மெல்லச் சிரித்து விட்டு ஸ்ரீநிவாசராவ் சொன்னார்:

"வாலி! - நம்ம மியூசிக் டைரக்டர் தெலுங்குக்காரர்... அவருக்கு எவ்வளவாக தமிழ்க் கவிஞர்களைப் பத்தித் தெரியாது. நீங்க ஏற்கனவேயே தமிழ்ப் படங்களிலே பாட்டு எழுதிப் பிரபலமானவர்னு உங்களெப் பத்தி அவர்கிட்ட நான் சொல்லியிருந்ததனாலேதான் அவர் நீங்க எழுத சம்மதிச்சாரு... நீங்க புதுசுன்னு தெரிஞ்சா உங்களெ ACCEPT பண்ணியிருப்பார்னு நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதனாலதான் சிகரெட்டல்லாம் புடிச்சு, ஒரு பந்தாவா உங்களெ உக்காரச் சொல்லித் தொடையைக் கிள்ளினேன்"

இப்படி ஸ்ரீநிவாசராவ் சொன்னவுடன், என்னை எப்படியும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவர் முயற்சி எடுத்தது குறித்து நான் சிந்தித்தேன். எனக்கும் அவருக்கும் எந்த ஒட்டோ உறவோ இல்லாத நிலையில், அவர் எதற்காக எனக்கென மெனக்கெட வேண்டும்? இதற்கெல்லாம் ஒரே பதில்தான்.

காலம் கைகூடி வரும்போது காரியங்களை செவ்வனே முடிக்க, இறைவன் எவரையாவது அனுப்பி வைக்கிறான் என்பதுதான் அந்த பதில்.

மறுநாள் கோல்டன் ஸ்டூடியோவில் என் பாடல் ஒலிப்பதிவாயிற்று. திருமதி.



சுசீலா அவர்கள்தான் பாடினார்கள். திரு. கன்னியப்பன் என்பவரோ, திரு. மோகன சுந்தரம் என்பவரோ, ஒலிப்பதிவாளராக இருந்ததாக ஞாபகம்.

கோபியிடம் விஷயத்தைச் சொன்னேன். என்னிலும் அதிக சந்தோஷப்பட்டார்.

படவுலகின் என் பிரவேசத்திற்குப் பிள்ளையார் சுழிபோட்டு முதல் பாடல் எழுதுகின்ற வாய்ப்பைப் பெற்றுத் தந்த கோபிதான், தன்னுடைய நெருங்கிய நண்பரான புரட்சி தாசனை அயிமுகம் செய்து வைத்தார்.

புரட்சிதாசன் ஒன்றும் சாதாரணமானவர் அல்ல; அந்நாளில் 'மங்கையர் திலகம்' முதலான படங்களில் பாடல்களும், உரையாடல்களும் எழுதித் தனக்கென்று ஓரிடத்தைச் தக்க வைத்துக் கொண்டவர். மொழி இலக்கணம், இசை இலக்கணம் இரண்டையும் வழுவறக் கற்றவர்.

புரட்சிதாசனைப் போல் விசாலமான இதயம் படைத்த இன்னொரு பெருமகனார் திரு. மருதகாசி அவர்கள். இவரைப் பற்றி பின் அத்தியாயங்களில் விரிவாக விளக்குகிறேன்.

முதல் பாடலை எழுதிய பிறகு, இன்னமும் என்பால் அதிக அளவு அன்பு பாராட்டி, கோபி அவர்கள் என்னைப் பல்வேறு பட இயக்குநர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

பொதுவாக அன்றைய பட அதிபர்களிடம் புதியவர்களைப் பரீட்சித்துப் பார்த்து 'தேறுமா? தேறாதா?' என்றெல்லாம் ஆற அமர அலசிப் பணியில் அமர்த்திக் கொள்ளும் அளவு பொறுமையுமில்லை; பொருளாதார வசதியுமில்லை. அதையும் மீறி ஓரிருவர் அசாத்தியத் துணிச்சலுடன் புதிய பூனைகளுக்கு மணிகள் கட்டும் காரியத்தில் இறங்கத் தான் செய்தார்கள். அதன் விளைவு அவர்களுக்கு ஆரோக்கியமாக இல்லை. வடலூராரைப்போல் 'கடை விரித்தேன்; கொள்வாரில்லை' என்று களைப்பும் சலிப்பும் மேலிட, கோடம்பாக்கத்திற்கு 'டாட்டா' காண்பித்துவிட்டுப் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள்.

இருப்பினும் தனது திறமையை மட்டும் மூலதனமாகக் கொண்டு, என்றேனும் ஒருநாள் முன்னுக்கு வந்துவிடலாம் என்கின்ற தீவிரமான சுயமதிப்பீட்டோடு சென்னைக்கு வந்து என்னைப் போல் அல்லாடி மல்லாடி நின்றவர்கள் பலரை நான் அந்நாளில் பார்க்க நேர்ந்தது.

(தொடரும்...)



# இந்திய கிரிக்கெட் வீரர்களின் மனைவிமார்!

புகழ்பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர்களின் மனைவிமார் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளாத பல விடயங்கள் அண்மையில் வெளியாகியிருந்தன. அதன்படி, சச்சின் டெண்டுல்கரின் மனைவி அஞ்சலி. டெண்டுல்கரின் தந்தை இந்தியாவின் பிரபல வர்த்தகரான அசோக் மேத்தா என்பவராவார். அஞ்சலியின் தாய் பிரித்தானியாவைச் சேர்ந்தவர். அஞ்சலி சச்சினை விட நான்கு வயது மூத்தவர் என்பது பலர் அறியாத விடயமாகும். இவர் மும்பாயில் உள்ள ஜே.ஜே. மருத்துவ மனையில் குழந்தை நோய் வைத்திய நிபுணராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர்கள் இருவரும் இவர்களது நண்பர்களின் மூலமாகவே முதன்முதலில்



சச்சின் டெண்டுல்கர்

அறிமுகமாகியுள்ளனர். எனினும், மேற்படி நண்பர்கள் தெரிந்துகொள்வதற்கு முன்பதாகவே இருவரும் திருமணம் செய்தும்கொண்டனர்.

"சச்சின் தொடர்பில் என்னைக் கவர்ந்த விடயங்கள் பல உள்ளன. இவை அனைத்திலுமாக என்னைக் கவர்ந்த முக்கிய அம்சம் அவரிடம் இரு வேறு முகங்கள் இல்லாதிருப்பதாகும். அவர் தனது மனசாட்சிக்கு நேர்மையான முறையில் செயற்பட்டு வருபவர். அது போலவே அவர் இன்று இவ்வளவு தூரம் வளர்ச்சி கண்டுள்ளபோதும் வந்த வழியை மறக்காதவர்...

வெற்றி, பிரபலம் போன்றவற்றால் தலைக்கனம் கொள்ளாத நபர்தான் சச்சின். வீட்டிலும், ஏன் தெருவில் போகும்போதும் கூட அவர் ஒரு பிரபல நட்சத்திரம் என்ற வகையில் நடந்துகொள்வது கிடையாது. மண்ணில் கால் பதித்து வாழும் ஒரு சாதாரண மனிதனாகவே நான் சச்சினைக் காண்கின்றேன்" என்கிறார் அஞ்சலி.

சச்சினின் நடைமுறைகளை உற்று நோக்கும் அனைவராலும் அஞ்சலியின் கூற்றை ஏற்றுக்கொள்ள இயலும்.

அடுத்து இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் சவ்ரவ் கங்குலியின் மனைவி டோனா கங்குலி.

வங்காளத்தில் புகழ்பெற்ற செல்வந்தக் குடும்பமொன்றின் வாரிசான டோனா நாட்டியக் கலை தொடர்பில் திறமை வாய்ந்தவர். இவர் இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கூட பரத நாட்டியங்களை அரங்கேற்றி பாரிய புகழை ஈட்டிக் கொண்டுள்ளார்.

கங்குலி திறமையான கிரிக்கெட் விளையாட்டு வீரராக இருந்தபோதும் இருவரும் சந்தித்துப் பழகியது பெட்மின்டன் விளையாடும் போதுதான்.

இவ்விருவரும் அக் காலகட்டத்தில் அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வந்துள்ளனர். கங்குலியின் குடும்பத்தார் தினமும் மாலை வேளைகளில் பெட்மின்டன் விளையாடுவதை வழக்கமாகக்கொண்டிருந்துள்ளனர்.

இவர்கள் இருவரதும் வீடுகளுக்கு மத்தியில் ஒரு சிறு மதில் எழுப்பப்பட்டிருந்ததால் தனது வீட்டு முற்றத்தில் வந்து விழும் பெட்மின்டன் பூவைப் பொறுக்கிக் கொடுப்பதுதான் டோனாவின் பணியாக இருந்தது என அவர் இன்று சிரித்தவாறு கூறிவருகின்றார்.

முன்னணி வீரர்களில் ஒருவராக வளர்ந்து வரும் வீரேந்திர ஷேவாக் அண்மையில்தான் ஆர்த்தியைத் திருமணஞ் செய்தார். எனினும் திருமணத்துக்கு முன்பதாகவே இருவருக்கும் இடையில் உறவுத் தொடர்புகள் இருந்துள்ளன. அதாவது ஷேவாக் ஆர்த்தியின் மாமியின் மகன் எனக் கூறப்படுகின்றது.

சுமார் 17 வருட காலமாக இவர்களிடையே உறவுமுறை இருந்து வந்துள்ளபோதிலும் இருவருக்கிடையில் காதல் தொடர்பு சுமார் 3 வருடங்களுக்கு முன்பதாகவே ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

ஆர்த்தி வசிந்து வந்துள்ள பொஹரிதிராஜ் எனும் பகுதி சந்தடி மிகுந்த பிரதேசமாகும். இதனால் இவர்களது காதல்கால வாழ்க்கை அப் பகுதியில் படு பிரபல்யமாகி இருக்கிறது.

ஆர்த்தி டில்லியில் உள்ள உயர் பாடசாலை ஒன்றில் கலைப்பட்டதாரியாகப் பட்டம் பெற்றவராவார்.

ஆர்த்தி தொடர்பில் ஷேவாக்கிடம் வினவியபோது அதிகம் வெட்கப்பட்டவராக ஷேவாக் கூறியதாவது, "அவருடன் தொடர்பான அனைத்துமே இரம்மியமானவை. அவரது அழகு - பலம் - தொடர்ந்த அவரது அன்பு என அனைத்துமே இரம்மியமானவை" என்பதாகும்.

அடுத்ததாக இந்திய அணியின் உபதலைவர் ராகுல் டிராவிட்டின் மனைவி விஜெத்தா, ட்ராவிட் ஒரு மருத்துவராவார். இவர்கள் இருவரது குடும்பங்களுக்கும் இடையில் சுமார் 35 வருடகாலத் தொடர்புகள் இருக்கின்றன. இறுதியில் இரு குடும்பங்களினதும் மூத்தவர்கள் விரும்பியே இவர்களது திருமணம் நடந்தேறியுள்ளது.

விஜெத்தா ட்ராவிட்டைத் திருமணம் செய்தபோது அவருக்குக் கிரிக்கெட் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை.


இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளர் அனில்கும்ளேயின் திருமணம் சற்று வித்தியாசமானதாகும்.

இந்திய கிரிக்கெட் வீரர்கள் பலரது திருமணங்கள் காதல் திருமணங்களாகவோ அல்லது பெற்றோர் பார்த்துப் பேசித் தீர்மானித்த திருமணங்களாகவோதான் காணப்படுகின்றன.

எனினும் கும்ளேயின் மனைவி சேத்தா, கும்ளேயைத் திருமணஞ் செய்வதற்கு முன்பதாக இன்னொரு திருமணம் செய்திருந்தார். அவரது முதல் திருமணம் முறிவடைந்த பின்னர்தான் அனில்கும்ளே சேத்தாவைத் திருமணம் செய்தார்.

சேத்தாவின் முதல் கணவர் பங்குச் சந்தைத் தரகராகப் பணி யாற்றியவர். இவர்களது முதல் திருமணத்தில் சேத்தாவுக்கு ஒரு பெண் குழந்தையும் உண்டு. அண்மையில் கும்ளே - சேத்தா தம்பதியினருக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்துள்ளது.

- பாரூக் -




## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆச்சர்

எம்மில் எவருமே அதற்குப் பதில் சொல்லாததை உணர்ந்த பிறகு, அவன் தனது முயற்சியைக் கைவிடுகிறான். நான் என் வாழ்வில் முதல் தடவையாகக் கசப்பை உணர்கிறேன்.

நாம் சர்ச்சை அடைந்தபோது எனது உறவினர் பீட்டர் என்னை வரவேற்கிறார். அவர் ஆராதனைப் பிரதிகளை விநியோகிக் கிறார். அவரது மனைவி பெட் (ீயவ) எம்மை முன்வரிசை ஆசனத்தை நோக்கி அழைத்துச் செல்கிறார். எனது தாயார் அவர்களின் எத்தனையோ நண்பர்கள் உலகின் எல்லாப் பாகங் களிலிருந்தும் - அமெரிக்கா, கனடா, ஏன்? அவுஸ்திரேலியா விலிருந்தும் - அந்தச் சிறு மரணச் சடங்கில் கலந்துகொள்ள வந்திருந் தமை எனது இதயத்தைத் தொட்டது. வெஸ்ட் கன்ட்ரியிலிருந்தும் கூடப் பலர் வந்தி ருந்தனர். அங்கேதான் அவர் தனது வாழ்வின் மிகக் கூடிய காலத்தைக் கழித்தார்.


ஆராதனை நிரல் எனது மனைவி மேரியினால் தயாரிக்கப்பட்டிருந்தது. என் மனைவி எதைச் செய்தாலும் அதில் அவளது கவனத்தையும் கச்சிதத்தையும் காணலாம். பிரார்த்தனைகள், சுலோகங்கள், துதிப் பாடல்கள், வாசிப்புகள், இசை அனைத்தையும் தேர்வு செய்வதற்கு அவள் பல மணித்தி யாலங்களைச் செலவு செய்திருக்க வேண்டும். இசையிலும் அவள் மிகச் சரியானதையே தேர்வு செய்வாள். பிஷப் வோக்கர் மீண்டும் ஆராத னையை நடத்துகிறார். எனது ஒன்றுவிட்ட சகோதரரான டேவிட் வொட்ஸன் உணர்ச்சி ததும்ப உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அதில் அவர் எனது தாயாரின் அளவற்ற ஊக்கம், அன்பு, கற்றல் மீதான ஆர்வம், குறும்புத்தனமான நகைச்சுவை அனைத் தையும் நினைவு கூர்கிறார்.

நான் கடைசிப் பாகத்தை வாசிக்கிறேன். வேதப் புத்தகத்தின் XX1 ஆம் அத்தியாயம் 1-7 வசனங்கள். நான் குழுமியிருக்கும் கூட்டத்தைப் பார்க்கும்போது எனக்கு வார்த்தைகள் வராது போகுமோ? என்று அதிசயிக்கிறேன். எனது தாயாருடன் நான் செலவிடப்போகும் அந்த இறுதி நிமிடங்களில் பத்திரிகையாளர்கள் எவருமே எம்முடன் இல்லை என்பது எனக்கு மிகுந்த மன நிம்மதியைத் தருகிறது. அப்போதைக்கு வெளியே நிற்குமளவுக்காவது அவர்களுக்கு மரியாதை இருந்ததே பெரிய விஷயம்.

ஆராதனை சுமார் ஐம்பது நிமிடங்கள் நீடித்தது.

(பக்கங்கள் வளரும்)


# இவர்களைத் தெரியுமா?



## விவேக்

'புது புது அர்த்தங்கள்' மூலம் பாலச்சந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட விவேக் பல குரலில் பேசும் திறமை கொண்டவர். ஓய்வு கிடைக்கும் நேரங்களில் நல்ல கவிதைகள் எழுதிவரும் இவர், விரைவில் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட உள்ளார்.

தாயார் பெயரில் அறக்கட்டளை நடத்திவரும் இவர், ஏழைக் குழந்தைகளுக்கு உதவி வருகிறார். ஜனாதிபதி அப்துல்கலாம் மீது அலாதி பிரியம் கொண்ட விவேக் அவரை இரண்டு முறை நேரில் சந்தித்துப் பேசியுள்ளார்.



## கருணாஸ்

'பாப் கிங்' என்ற பெயருடன் மேஸ்ட்ரோ இசைக்குழுவை ஆரம்பித்து நடத்தி வந்தார். பாலாவின் 'நந்தா' படம் மூலம் திரையில் அறிமுகமாகி காமெடி ரசிகர்கள் மனதில் லொடுக்கு பாண்டியாகப் பதிவாகியுள்ளார். இசைக்குழுவில் தன்னுடன் இணைந்து பாடிய கிரேஸை காதல் திருமணம் செய்துகொண்ட கருணாஸ், மெல்லிசைப் பாடல்களை இனிமையாகப் பாடுவதுடன் பல குரலில் பேசும் திறமையும் கொண்டவர்.

பார்ப்பதற்கு வெஸ்ட் இண்டீஸ்காரர் போல இருந்தாலும் அவர் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே புதுக்கோட்டையில்தான். சென்னை வடபழனி நூறடி ரோட்டில் 'லொடுக்குப் பாண்டி மெஸ்' என்ற பெயரில் ஹோட்டல் ஒன்றையும் தொடங்கி நடத்தி வருகிறார்.



## வடிவேலு

மதுரையில் தெருக்கூத்தில் ஆரம்பித்து பல மேடை நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த வடிவேலு, 'என் ராசாவின் மனசிலே' படம் மூலம் ராஜ்கிரணால் அறிமுகப்படுத்தப்பட்டார். படப்பிடிப்புத் தளத்தில், மேக்கப் போடும் நேரங்களில் பழைய பாடல்களை எடுத்துப் பாடுவது இவரது பழக்கம். திரையுலகில் பிஸியான காமெடியனான பிறகு, தனது பால்ய கால நண்பரான முருகேஷை மனேஜராக நியமித்துக்கொண்டு இன்றுவரை கூடவே வைத்துள்ளார்.



## கவுண்டமணி

ஆரம்பத்தில் வில்லன், குணச்சித்திர வேடங்களில் நடிக்கத்தொடங்கி பின்னர் தமிழக மக்கள் மறக்க முடியாத காமெடியனாக உயர்ந்தவர். படத்தில் மட்டுமின்றி நிஜ வாழ்க்கையில் நக்கல் - நையாண்டி செய்வது இவருடன் கூடப் பிறந்த பழக்கம். இன்னும் சத்யராஜின் நண்பராக நடித்து வரும் கவுண்டமணிக்கு வயது என்னவோ எழுபது மட்டும்தான். காமெடியனாக நடித்து போரடித்த சமயத்தில் 'பணம் பத்தும் செய்யும்' படத்தில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார்.

## செந்தில்

இந்த பரமக்குடிக்காரர் சினிமாவுக்கு வருவதற்கு முன்பு மளிகைக் கடையில் பொட்டலம் மடித்துக்கொண்டிருந்தாராம். கவுண்டமணியுடன் கைகோர்த்த பிறகு காமெடியில் பலரது வயிறையும் பஞ்சராக்கினார்.

குழிப்பணியாரம், கோழி சூப் என்றால் ஒரு கை பார்த்துவிடுவார். சென்னையை அடுத்த படப்பையில் பெரிய பண்ணை ஒன்றை வைத்துள்ள செந்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் குடும்பத்துடன் அங்கு சென்று கோழி அடித்து சாப்பிட்டு ஓய்வெடுப்பதை வழக்கமாக வைத்துள்ளார்.

---

# முகமிழந்தவர்களுக்கும் முகவரியில்லாதவர்களுக்கும் சட்டபூர்வ அந்தஸ்தும் பாதுகாப்பும்!

ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் ஆகியவற்றிலேயே மிக மோசமான ஊழல்களும், மோசடிகளும் இடம்பெறுவதாக அமைச்சரொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இருபது வருட காலத்துக்கு மேலாக இந்த நாட்டையும் மக்களையும் உலுப்பி வந்த யுத்தத் தாக்கங்கள் கடந்த சில வருடங்களாக ஓரளவுக்கு ஒப்பீட்டளவில் குறைந்திருந்தாலும் இன்னமும் மழை விட்டும் தூவாணம் போகாத நிலையே நிலவுகிறது. நூற்றுக்கணக்கான பாதாள உலகக் கோஷ்டிகள் நாடெங்கும் நடமாடுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. பெரும்பாலும் ஆயுதப் படைகளிலிருந்து தப்பியோடி வந்தவர்களே இப் பாதாளக் கோஷ்டிகளில் அங்கம் வகிப்பதாகவும் குறிப்பாகத் தலைமை வகிப்பதாகவும்

> **முகவரிகள் இல்லாத, முகம் மாற்றிய இந்தத் தற்கொலைக் குண்டுதாரிகளுக்கும் பாதாளக் கேடிகளுக்கும் சட்டபூர்வ அடையாள அட்டைகளையும், ஏனைய இன்ன பிற ஆவணங்களையும் மூவாயிரம் ரூபாவுக்கும் ஆறாயிரம் ரூபாவுக்கும் பெற்றுக் கொடுக்கும் திணைக்கள அதிகாரிகளும் ஊழியர்களும், மக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிப்பவர்களாவர்.**

புலனாய்வாளர்கள் கூறுகின்றனர். ஆயுதக் குழுக்களில் அல்லது ஆயுதப் படைகளில் அங்கம் வகித்தவர்கள் சமூகத்தோடு ஒன்றித்து வாழத் தயார்படுத்தப்படாவிட்டால் பெரும் கேடிகள் கூட்டமொன்றே நாட்டில் உருவாகுமென்பதற்கு அண்மைக்கால சம்பவங்கள் உறுதி கூறுகின்றன.

தென்னிலங்கையிலிருந்து ஆடம்பரக் கார்களையும் சொகுசு வாகனங்களையும் கடத்தும் பாதாளக் கும்பல்கள், மோட்டார் பதிவுத் திணைக்களத்திலுள்ள ஊழல் பேர்வழிகளின் உதவியோடு வாகனப் பதிவு மற்றும் இத்தியாதி ஆவணங்களை மாற்றித் தயாரித்து வடக்கிலும் கிழக்கிலுமுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்று கொள்ளை இலாபத்துக்கு விற்றமை அம்பலத்துக்கு வந்த சங்கதியாகும். புலி இயக்கத்தைச் சேர்ந்த பெரும் புள்ளிகள் பெருந்தொகைப் பணம் கொடுத்து திருட்டு வாகனங்களை வாங்கியமையும் பழைய செய்தியேதான்.

நான்கு இலட்சம் ரூபாவும் ஒரு ரி-56 ரக ரைபிளுக்குமாக நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனமொன்று வன்னியில் கைமாறியதாக ஏழெட்டு மாதங்களுக்கு முன்னர் இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்த தகவலையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. இந்தப் பாதாளக் கும்பல்கள் போலிப் பெயர்களில் சுதந்திரமாக நடமாடுவதற்கான அடையாள அட்டைகளை வெறும் சில்லறைகளை வாங்கிக் கொண்டு ஆட்பதிவுத் திணைக்களத்தின் உயரதிகாரிகளே தயாரித்துக் கொடுக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் லண்டனில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக ஒரு கேடிக்கு - பாதாளக் கோஷ்டித் தலைவருக்கு - சமூகத்தில் செல்வாக்குமிக்க ஒருவர் போலிக் கடவுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொடுத்து லண்டன் செலவுகளுக்கென ஸ்டேர்லிங் பவுண்கள் கொடுத்து அனுப்பினாரென்ற குற்றச்சாட்டுகள் நீதிமன்றம்வரை சென்றதையும் மறந்துவிட முடியாது. இந்தக் கேடி பல கொலைகளைச் செய்தவரென்ற தகவல்களும் இவரிடம் மூன்று கடவுச் சீட்டுகள் இருந்தனவென்றும் விசாரணைகளின்போது தகவல்கள் வெளியாகின.

பாதாளக் கோஷ்டிகளும், கொலைக் கும்பல்களும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதற்கும் உதவியும் ஒத்தாசையும் வழங்கும் திணைக்கள உயரதிகாரிகளையும் இந்தக் கேடிகளின் வரிசையில் சேர்ப்பதே பொருத்தமானது.

கடந்த ஜூலை மாதம் ஏழாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து நடத்த எடுக்கப்பட்ட தாக்குதல் முயற்சி, பல பயங்கர உண்மைகளை அம்பலத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. தியாகராசா ஜெயராணி என்ற தற்கொலைக் குண்டுதாரிக்கும், அவருக்கு உதவியாகச் சென்ற சத்தியலீலா செல்வகுமார் என்ற பெண்மணிக்கும் உயரதிகாரியொருவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஒரே நாளில் அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் போலி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. போலி ஆவணங்களைப் பயன்படுத்தி ஆட்பதிவுத் திணைக்களத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தற்கொலைக் குண்டுதாரியின் உதவியாளரான சத்தியலீலா அடையாள அட்டையைப் புதுப்பிக்கும் விண்ணப்பத்தை கடந்த மே மாதம் ஐந்தாம் திகதி சமர்ப்பித்து அன்றைய தினமே புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார். இதற்கு அவர் வழமையான சட்டபூர்வக் கட்டணமான ஐந்நூறு ரூபாவுக்கு மேலதிகமாக 3,500 ரூபா இலஞ்சம் வழங்கியுள்ளாரென்று இரகசியப் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. தனது பழைய அடையாள அட்டை காணாமல் போய்விட்டதாக இவர் தெரிவித்திருந்தாரென்று கூறப்படுகிறது. தற்கொலைக் குண்டுதாரியான தியாகராசா ஜெயராணி, குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு மூன்று வாரங்கள் முன்னதாக அதாவது ஜூன் 19ஆம் திகதி, புதிய அடையாள அட்டையைப் பெற்றிருக்கிறாரென்பதை புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இத் தற்கொலைக் குண்டுதாரியின் கடவுச்சீட்டிலிருந்த தொடர் இலக்கமும் பத்து வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தொடர் இலக்கத்தையே கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. போலி அடையாள அட்டையைப் பெறுவதற்கு இவர் ஆறாயிரம் ரூபா இலஞ்சம் கொடுத்துள்ளாரென்பதும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. முகவரிகள் இல்லாத, முகம் மாற்றிய இந்தத் தற்கொலைக் குண்டுதாரிகளுக்கும் பாதாளக் கேடிகளுக்கும் சட்டபூர்வ அடையாள அட்டைகளையும், ஏனைய இன்ன பிற ஆவணங்களையும் மூவாயிரம் ரூபாவுக்கும் ஆறாயிரம் ரூபாவுக்கும் பெற்றுக் கொடுக்கும் திணைக்கள அதிகாரிகளும் ஊழியர்களும், மக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிப்பவர்களாவர்.

இத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்று ஒரு மாதம் கழித்து இரகசியப் பொலிஸ் உயரதிகாரிகள் ஆட்பதிவுத் திணைக்களத்தில் நடத்திய திடீர்த் தேடுதலின்போது 172 போலி அடையாள அட்டைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். எனவே, இப்படி வழங்கப்படும் சட்டவிரோத ஆவணங்கள் சட்டபூர்வ அந்தஸ்தோடு இன்னமும் நாட்டில் புழக்கத்தில் இருக்குமென்பதை எவரும் மறுக்க முடியாது.

**-யாதவ்-**

சட்ட விரோதக் கும்பல்கள் நடத்தும் போலிக் கச்சேரிகள் மூலம் அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள், பிறப்பு - இறப்புச் சான்றிதழ்கள், கல்வித் தராதரப் பத்திரங்கள், திருமணப் பதிவுகள், விவாகரத்துப் பத்திரங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கைதேர்ந்த பேர்வழிகள் பலர் இருக்கிறார்கள். இப் புல்லுருவிகளைச் சட்டம் சரியான வழியில் கையாளத் தவறினால் முகமிழந்த மனிதர்கள் பல முகங்களோடும், முகவரி இல்லாதவர்கள் பல முகவரிகளோடும் சட்டபூர்வ அந்தஸ்துப் பெற்று நடமாடுவார்கள். இறுதியில் சட்டம், நீதி, ஒழுங்கு - இவையெல்லாம் இப் பயங்கரவாதிகளுக்குத் தாழ் பணியும் நிலையே ஏற்படும்.



> சக்தி என்றும் வாழி! என்று பாடு - சிவ
> சக்திசக்தி என்று குதித் தாடு - சிவ
> சக்தி என்றும் வாழி! என்று பாடு - சிவ
> சக்திசக்தி என்றுவிளை யாடு.
>
> -சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு



## நன்றி கெட்ட மனிதன் கதை

**பாப்பா முரசு சிறுகதை**


ஒரு ஊரில் ஒரு பிராமணன் வசித்து வந்தான். அவன் ஏழையாக இருந்தபோதிலும் எல்லோரிடமும் அன்புடன் நடந்து கொள்வான். ஒரு நாள் அவன் மனைவி அவனிடம் குழந்தைகளின் பசியைப் போக்க ஏதேனும் பொருள் சம்பாதித்து வரும்படிக் கூறினாள்.

பிராமணன் புறப்பட்டுச் சென்றான். அவன் அருகிலுள்ள நகரத்திற்கு ஒரு காட்டின் வழியே போய்க்கொண்டிருந்தான். அவனுக்கு மிகுந்த தாகம் எடுத்தது. அவன் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று தேடிக்கொண்டு வந்தபொழுது ஒரு பழைய கிணற்றைக் கண்டான்.

அதனுள் எட்டிப்பார்த்த பிராமணனுக்கு ஒரே ஆச்சரியம். அந்தக் கிணற்றினுள் ஒரு குரங்கு, ஒரு பாம்பு, ஒரு புலி மற்றும் ஒரு மனிதன் ஆகியோர் இருந்ததைக் கண்டான். அவர்களும் அப் பிராமணனைப் பார்த்தனர். உடனே அவர்கள் மகிழ்ச்சியினால் கூச்சலிட்டனர்.

"அன்பானவரே, நாங்கள் தவறிப்போய் இக்கிணற்றில் விழுந்துவிட்டோம். ஒருவர் உயிரைக் காப்பாற்றுவது மிகவும் புண்ணியம் என்று கூறுவர். எனவே என்னை வெளியே தூக்கி விடுங்கள்" என்று புலி முதலில் கூறியது.

"நீயோ ஒரு கொடிய மிருகம். நான் உன்னைக் காப்பாற்றினேன் என்றால், நீ



என்னைக் கொல்லமாட்டாய் என்பது என்ன நிச்சயம்?" என்று பிராமணன் புலியிடம் கேட்டான்.

"உங்களுக்கு எந்தவொரு தீங்கும் நான் விளைவிக்கமாட்டேன். பிராமணனைக் கொல்வது கொடிய பாவமாகும்" என்று புலி கூறியது.

அதனால் பிராமணன் புலியை கிணற்றிலிருந்து காப்பாற்றினான். பிறகு குரங்கு அவனிடம் தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால், அப்பிராமணன் அக் குரங்கையும் வெளியே தூக்கிவிட்டான்.

அடுத்து பாம்பு, தன்னைக் காப்பாற்றும்படி வேண்டியது. தான் பிராமணனைக் கடிக்கமாட்டேன் என்று உறுதியளித்தது. அதனால் அவன் பாம்பையும் கிணற்றிலிருந்து விடுவித்தான்.

இப்போது புலி, குரங்கு, பாம்பு மூன்றும் கிணற்றுக்கு வெளியே பத்திரமாக இருந்தன. மனிதன் மட்டுமே அந்தக் கிணற்றினுள் இன்னும் இருந்தாள்.

"அன்புமிக்கவரே! அந்த மனிதனைக் கிணற்றிலேயே விட்டு விடுங்கள்! அவன் ஒரு நம்பிக்கைத் துரோகி. சந்தர்ப்பம் கிடைத்தால் அவன் உங்களுக்குத் தீமை செய்வான்!" என்று புலி பிராமணனை எச்சரித்தது. பிறகு அது பிராமணனிடம், ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தன்னை வந்து பார்க்கும்படி கூறிவிட்டு அங்கிருந்து சென்றது. குரங்கும் பாம்பும் கூட அவனுக்கு ஏதேனும் உதவி தேவையென்றால் தங்களை வந்து பார்க்கும்படி கூறிச் சென்றன.

இப்போது கிணற்றினுள் இருந்த அந்த மனிதன், "ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினான். பிராமணனும் அவனுக்கு இரங்கி, அவனைக் கிணற்றிலிருந்து வெளியே தூக்கிவிட்டான்.

"நான் ஒரு பொற்கொல்லன். இக்காட்டிற்கு மறு பக்கத்திலிருக்கும் நகரத்தில் வேலை செய்கிறேன். உங்களுக்கு ஏதேனும் பொன் ஆபரணங்கள் செய்ய வேண்டுமென்றால் என்னை வந்து பாருங்கள்!" என்று கூறிவிட்டு அவனும் அங்கிருந்து சென்றான்.

பிராமணன் எங்கெங்கோ அலைந்து திரிந்தும் அவனால் பணம் சம்பாதிக்க முடியவில்லை. அவன் தனது வீட்டுக்குத் திரும்பும் வழியில் குரங்கைப் போய்ப் பார்த்தான். குரங்கு அவனுக்கு இனிமையான பழங்கள் பலவற்றைக் கொண்டு வந்து கொடுத்து, அவனுக்கு எப்போதெல்லாம் உணவு தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் தன்னை வந்து பார்க்கும்படி கூறியது.

பிறகு அவன் புலியைக் காணச் சென்றான். புலி அவனை வரவேற்று அவனுக்கு தன் குகையிலிருந்த ஏராளமான பொன் ஆபரணங்களைக் கொடுத்து, "இவையெல்லாம் ஓர் இளவரசனை நான் கொன்றபோது, அவன் அணிந்திருந்த நகைகளாகும். அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். எல்லாவற்றையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியது.

பிராமணனும் அது கூறியவாறே எல்லா நகைகளையும் எடுத்துக்கொண்டு பொற்கொல்லன் அவற்றை நல்ல விலைக்கு விற்றுத் தருவான் என்று எண்ணி அவனிடம் சென்றான்.

பிராமணன் கையிலிருந்த நகைகளைப் பார்த்த பொற்கொல்லன் அவையெல்லாம் தான் முன்பு இளவரசனுக்குச் செய்த நகைகள் என்று கண்டுகொண்டான். அவன் அந்த நகைகளைக் கண்டு பிரமிப்பது போல் நடித்து, பிராமணனை அங்கேயே சிறிது நேரம் இருக்குமாறும், தான் அந்த நகைகளை எடுத்துப் போய் அதை வாங்குபவரிடம் காண்பித்து வருவதாகவும் கூறிச் சென்றான்.

பொற்கொல்லன் நேராக அரசனிடம் சென்று அந்த நகைகளைக் காண்பித்தான். மேலும் அந்த, பிராமணனே நகைக்காக இளவரசனைக் கொன்றுவிட்டதாகவும் கூறினான்.

ஆத்திரமடைந்த மன்னன் தனது காவலர்களை அழைத்து பொற்கொல்லன் வீட்டிலிருக்கும் பிராமணனை உடனே கைதுசெய்து சிறையிலடைக்குமாறு பணித்தான்.

"அவனுக்கு மரண தண்டனை அளியுங்கள்" என்று அரசன் ஆணையிட்டான். காவலர்களும் பிராமணனைக் கைது செய்து சிறையிலடைத்தனர்.

"ஐயோ! எனது விலங்கு நண்பர்கள், "இவன் ஒரு நம்பிக்கைத் துரோகி, இவனைக் கிணற்றிலிருந்து காப்பாற்றாதீர்கள் என்று எச்சரிக்கை செய்தும் இவனை நான் காப்பாற்றினேனே!" என்று பிராமணன் மனம் நொந்து வருந்தினான். அப்போது அவனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் தன்னை நினைக்குமாறு பாம்பு சொன்னது அவனது நினைவிற்கு வந்தது.

பிராமணன் பாம்பை தன் மனதினில் நினைத்தான். உடனே அது அவன் முன் தோன்றி, தான் அவனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டது.

"நான் இந்தச் சிறையிலிருந்து விடுதலை பெற விரும்புகிறேன்" என்று பிராமணன் கூறினான்.

"என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. கவனமாகக் கேளுங்கள்..... நான் ராணியைக் கடித்து விடுகிறேன். உங்களைத் தவிர அவளை வேறு யாராலும் காப்பாற்ற முடியாது" என்று கூறிவிட்டு பாம்பு அங்கிருந்து ஊர்ந்து சென்றது.

திடீரென்று அரண்மனையில் கூச்சல், குழப்பம் உண்டாயிற்று. ராணியை பாம்பு கடித்ததினால் உண்டானது அது. ஆனால், ராணியை யாராலும் குணப்படுத்த முடியவில்லை.

அப்போது பிராமணன் சிறைக் காவலர்களிடம், பாம்பு கடித்தவர்களை குணமாக்குவதில் தான் தேர்ச்சி பெற்றவன் என்று தெரிவித்தான். இதனைக் காவலர்கள் அரசனுக்குத் தெரிவிக்க, அவன் உடனே பிராமணனை அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தான்.


பிராமணன், ராணியைப் பரிசோதிப்பவன் போல் பாசாங்கு செய்து ராணியின் நெற்றியைத் தொட்டான். உடனே அவளிடமிருந்து விஷம் இறங்கியது. அவள் உயிர் பிழைத்தாள்.

அரசன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். அவன் பிராமணனிடம், அந்தத் தங்க நகைகள் அவனுக்கு எப்படிக் கிடைத்தனவென்று கேட்டான்.

பிராமணன் அரசனிடம், தான் கிணற்றில் விழுந்திருந்த நான்கு உயிர்களைக் காப்பாற்றியதையும், ஒவ்வொருவரும் அதற்காக தனக்கு நன்றிக் கடன் செலுத்தியதையும் ஆனால், பொற்கொல்லன் மட்டுமே நன்றி கெட்டவனாக நடந்து கொண்டான் என்பதையும் எடுத்துக் கூறினான்.

பிராமணனைத் தவறாக தண்டித்து விட்டோமே என்று வருந் திய மன்னன், அத் தவறை சரி செய்யும் விதமாக அவனுக்குப் பல பரிசுப் பொருட்களை அளித்து அவனை அனுப்பி வைத்தான். அதே சமயம் பொய்யுரை கூறிய பொற்கொல்லனை சிறையில் அடைத்தான்.

## அதிசய உலகம்



### யானை பற்றிய சுவையான தகவல்கள்

★ இலங்கையில் உள்ள ஒரு சில ஆண் யானைகளுக்குத் தந்தங்களே வளருவதில்லை. இத்தகைய யானைகளை மக்னா என்று அழைக்கின்றனர்.

★ ஐரோப்பிய நாடுகளில் யானைகளே இல்லை.

★ யானை ஒரு நாளில் சுமார் 18 முதல் 20 மணி நேரம் உணவை உண்கிறது.

★ சுமார் 300 கிலோ கிராம் இலை தழைகளை உணவாக எடுத்துக்கொள்கிறது.

★ பச்சை மூங்கிலும், மரப்பட்டைகளும் யானைக்கு மிகவும் பிடித்தவை.

★ யானைக் குட்டி கருவில் தாயின் வயிற்றில் இருபது மாதங்கள் வளர்கிறது.

★ பிறக்கும்போது யானைக் குட்டியின் உடலில் மயிர்கள் இருக்கும். பின்னால் நாளாக ஆக உதிர்ந்து விடும்.

★ பிறந்து ஆறு மாதங்கள் வரை யானைக் குட்டிகளின் உணவு வெறும் தாய்ப்பால்தான்.

★ யானை ஒரு நிமிடத்திற்கு 10 தடவை சுவாசிக்கிறது.

★ யானையின் பாதத்தில் கொழுப்பும் சதையும் நிறைந்து கனமான மெத்தை போல் உள்ளதால், யானை நடக்கும் போது அதன் காலடிச் சத்தம் கேட்பதில்லை. அதனால் தான் யானையின் கழுத்தில் மணிகளைக் கட்டித் தொங்க விடுகின்றனர்.

★ ஒரு நாளைக்கு 225 லிட்டர் குடிநீர் யானைக்குத் தேவைப்படுகிறது.

★ தும்பிக்கையால் ஒரே உறிஞ்சலில் 9 லிட்டர் நீரை யானை உறிஞ்சும். ஒருவேளைக்கு சுமார் 5 லிட்டர் நீரைக் குடிக்கும்.

★ யானைக்கு 4பற்கள் உள்ளன. இவை ஆறு தடவை விழுந்து விழுந்து முளைக்கும்.

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. ஜப்பானியரின் தேசிய விளையாட்டு என்ன?
   – சிலிப்ட்றன்.
2. மெதடிஸ்த திருச்சபையைத் தொடங்கியவர் யார்?
   – ஜோன் வெஸ்லி.
3. சாரணர் இயக்கத்தைத் தொடங்கியவர் யார்?
   – பேடன் பவல்.
4. காவற்படையை (பொலிஸ்) முதலில் அமைத்தவர் யார்?
   – றொபேட் பீல்.
5. சுருக்கெழுத்து முறையை வகுத்தவர் யார்?
   – சேர் ஐசாக் பிற்மன்.
6. தற்போதைய தேசப்பட வரைபட முறையை முதலில் வகுத்தவர் யார்?
   – மார்க்கட்.
7. ஹோமியோபதி வைத்தியமுறையை தொடங்கியவர் யார்?
   – டொக்டர் ஹனேமன்.
8. செய்திகளை தந்தி மூலம் அனுப்பும் தாபனத்தின் தாபகர் யார்?
   – போல் றொயிட்டர்.
9. சீனப் பெருஞ்சுவரைக் கட்டிய மன்னன் யார்?
   – ரிசன்ஷி.
10. தொங்கு தோட்டத்தை அமைத்த பாபிலோனிய மன்னன் யார்?
   – நெபுகத் நெசார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.08.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 557
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 555


**பரிசுக்குரியவர்:**
எம்.ஏ.எப்.நுஸ்ஹா
79, வெஸ்டன் சோல்டன் வீதி, புத்தளம்.

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ப.கீர்த்தன், (தரம் 9), ஆத்திமோட்டை த/வி, சாம்பல் தீவு, திருகோணமலை. | தங்கவேல் விவேக், போவே எஸ்டேட், இதல்கஸ்ஹின்ன. |
| ஆர்.போ்டி, மெட்ரோ கல்லூரி சர்வதேசப்பாடசாலை, எல்.கே.ஜி. | பா.சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. |
| எம்.எச்.அமானி, 2ம் வகுப்பு, கஹட்டபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | எஸ்.உதேனி, தரம்02, அம்பாகோட்டை தமிழ் வித்தியாலயம், கெங்கல்ல, கண்டி. |
| அபினயா, 84, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு - 15, | ஆர்.அக்ஷலா யஷோதினி, தரம் 4ஏ, ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| கமிலஸ் கிரித்திகன், தந்தை செல்வா பாலர் பாடசாலை, பண்டாரிகுளம், வவுனியா. | அருட்செல்வம் செந்தூரன், கலைவாணி பாலர் பாடசாலை, 246, அன்புவழிபுரம், திருகோணமலை. |

# தகவல் பெட்டி





## நீரிலும் நிலத்திலும்

கார் ஒன்று தண்ணீருக்குள் தவறி விழுந்துவிட்டது என்று எண்ணிவிடாதீர்கள். நீரிலும் நிலத்திலும் ஓடக் கூடிய காரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் பிரிட்டிஷ் நாட்டவர்கள். நிலத்தில் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடியது. நீரில் மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடியது. விலை 3 இலட்சத்து முப்பத்தையாயிரம் அமெரிக்க டொலர்கள். கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்ட இந்தக் காரை முதன்முதலில் வாங்கியவர் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த ரிட்சேட். இக் கார் மூலம் ஆங்கிலக் கால்வாயை இரண்டு மணிக்குக் குறைவான நேரத்தில் கடந்து சாதனை செய்கிறார் ரிட்சேட். இவ் வருடத்தின் கோடை காலத்தில் இக் காரின் உதவியோடு கடல் வழியாகவே பிரான்ஸ் நாட்டுக்குச் செல்லவுள்ளார்.



## விலையை தீர்மானிப்போம்


உலகமே இன்று எண்ணெய் வள ஏற்றுமதி நிறுவன நாடுகளன் அதாவது ஒபேக் நாடுகளின் (organization of petrolem exporting countries) கைகளில்தான் தங்கியுள்ளது. உலகத்தின் பொருளாதாரத்தையே இந்த நாடுகள்தான் தீர்மானிக்கின்றன. ஒபேக் நாடுகள் முன்னர் நாளொன்றுக்கு 200 இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெயை உற்பத்தி செய்தன. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து 260 இலட்சம் பீப்பாய் எண்ணையை உற்பத்தி செய்ய முடிவெடுத்துள்ளன. தற்போது ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 42 தொடக்கம் 45 டாலர்களாக உயர்ந்துள்ளது, மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வயல்கள் தாக்கப்படுவதும் முன்னேறி வரும் உலக அபிவிருத்தி போன்றனவுமே எண்ணெய் விலை அதிகரிப்புக்குக் காரணமாகும். எண்ணெய் வள நாடுகள் தமது உற்பத்தியை அதிகரித்தால் எண்ணெய் விலை குறையும் என ஐரோப்பிய ஒன்றியம் கருத்துத் தெரிவித்துள்ளது. அண்மையில் இலங்கையிலும் எரிபொருட்களுக்கான விலைகள் மிக அதிகமாகவே அதிகரித்துள்ளதும் இவ்வாறான காரணங்களாலேயே எனப் புரிந்துகொள்ள முடிகிறது. எனினும் நியாயங்களைத் தேடிச் சென்று விலை அதிகரிப்புகளை மேற்கொள்வதானது சாதாரண மக்களின் வாழ்க்கைச் சுமையை ஈடுசெய்வதாக அமையாது.

## எண்பதிலும் ஆசை

"ஐம்பதிலும் ஆசை வரும்" எனப் பாடல் உண்டு. இங்கே எண்பதிலும் ஆசை வந்திருக்கிறது ஒருவருக்கு. அவர் வேறு யாருமில்லை. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தந்தையான முன்னாள் ஜனாதிபதி புஷ் அவர்களுக்குத்தான்.

தனது எண்பதாவது பிறந்தநாளை வித்தியாசமாகக் கொண்டாடினார். 13 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானத்திலிருந்து கோல் நைட் பரசூட் மூலம் குதித்தார். அவருக்கு அமெரிக்க இராணுவ வீரர் பக்கப்பலமாக வருகிறார். வயதான புஷ்ஷின் விபரீத விருப்பத்தை சுமார் 4ஆயிரம் பார்வையாளர்கள் கண்டு களித்தனர். நடந்தாலே மூச்சுவாங்கும் தள்ளாத வயதில் பறந்துகொண்டே பிறந்தநாள் கொண்டாடி பரவசப்பட்டிருக்கிறார் புஷ்.





## அவலம்

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நாட்டின் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி, மனித உரிமைகள் எல்லாமே வலுவிழந்துவிடுகின்றன. யுத்தத்துக்காக செய்யப்படுகின்ற செலவுகள் அந் நாட்டு அரசாங்கங்களை நாட்டின் அபிவிருத்தி குறித்த விடயங்களில் கவனமெடுக்கச் செய்வதில்லை. இது வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் எனப் பாகுபாடு பாராது இருக்கக் கூடிய நிலை. உலகின் ஒவ்வொரு மூலையிலும் கல்விக்காக ஏங்கும் மாணவச் செல்வங்களை யுத்தம் மிக அதிகமாக பாதிக்கச் செய்கிறது. இலங்கையில் இந் நிகழ்வுகள் மிகத் தாராளம். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாடசாலைக் கட்டிடங்கள் இல்லாமலும் தளபாட வசதிகள் இல்லாமலும் மர நிழல்களின் கீழும் ஓலைக் குடிசைகளுக்குள்ளும் கல்வி பயிலும் அவலம் தொடர்கிறது. இங்கே சுடு மண்ணில் அமர்ந்து தொழுகைக் கடமையை முடிப்பதாக எண்ணி விட வேண்டாம். இவர்கள் ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலிலுள்ள உயர்தர வகுப்பு மாணவர்கள். பரீட்சை எழுதுகிறார்கள். மர நிழலும் இல்லை. ஓலைக் கொட்டகையுமில்லை. யுத்தம் எங்கெல்லாம் வியாபித்திருக்கிறதோ அங்கெல்லாம் இதே நிலை என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.




சிந்தூரி

சேலம் குட்டிச் சாமியார் பரணிதரனின் கதையை பரணி தரனையே நடிக்க வைத்துப் படமாக்க, கோடம்பாக் கத்தில் தீவிர டிஸ்கஷனில் ஈடுபட்டுள்ளனர்.



தவசிராஜ்



சேகர்



சரவணன்



லோகநாதன்

'ஆட்டோ கிராப்' படத்தையடுத்து, அதே பாணியில 'பயோடேட்டா' என்கிற டைட்டில் பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது.



## சினி

## தமிழரும் சிங்களவரும் மனிசங்கள் தான்

"இலங்கைக்கு முதல் தடவையாக வந்திருக்கிறோம். இந்தியாவின் நம்பர் 1 ஸ்ரண் மாஸ்டர் சுப்பர் சூப்பராயன் அவர்கள் நீண்ட வருடங்களாக ஸ்ரண் ஆர்ட்டிஸ்டாக வேலை செய்கிறாம். இந்த "செவ்வேல்" திரைப்படத்தைப் பொறுத்தவரைக்கும் எல்லா சண்டைக் காட்சிகளையும் இங்கேயே பண்ணிறோம். மொத்தம் நான்கு சண்டை. படத்தோட கதை, திரைக்கதை, டைரக்ஷன், தயாரிப்பு எல்லாமே பிரிமுஸ் தாஸ் பண்ணறாரு. அவருக்கு எங்களால முடிஞ்ச எல்லா ஒத்துழைப்பையும் கொடுத்து வேலை செய்கிறோம். சுமார் 25 வருடங்களாக வேலை செய்யிற சுப்பர் சுப்பராயன் மாஸ்டரோடு வேலை செய்யிறதை பெருமையாக நினைக்கிறோம். அவரை மாதிரி ஒரு நல்லவரைக் காண முடியாது. அவரோடு தொடர்ந்தும் வேலை செய்ய ஆண்டவன் துணை புரியணும்" என்று ஸ்ரண் ஆர்ட்டிஸ்ட் குறூப் சார்பில் என்னிடம் பேசினார் தவசிராஜ். அவர் மேலும் கூறும் போது "இலங்கையில் படம் பண்ண முதல் தடவையா வந்திருக்கிறம். ரொம்ப சந்தோசமாய் இருக்கு. இங்கே தமிழர், சிங்களவர்னு சண்டை நடக்கிறது மனசுக்கு வேதனையாய் இருக்கு. என்ன மொழி பேசினா என்ன எல்லோரும் மனிசங்கள்தான். "இன்னொரு சண்டை வராமல் சமாதானம் வரணும்" இப்படி எல்லோரும் ஒருமித்து சொன்னபோது மனதுக்கு இலேசான நிம்மதி கிடைத்தது.

## திருந்துவாரா கவுண்டமணி

கவுண்டமணியால் தனக்கு அவ்வப்போது சறுக்கல் ஏற்படுவதாக குறைபட்டுக் கொள்கிறார் செந்தில். கவுண்டமணி - செந்தில் கூட்டணி என்ற முத்திரை தனக்கு பிளஸாகவும் மைனஸாகவும் இருப்பதாகச் சொல்கிறார் செந்தில். "சம்பள விஷயத்தில் கவுண்டமணி இறங்கி வருவதுமில்லை. அதுமட்டும் இல்லாமல், ஏகப்பட்ட கண்டிஷன்கள் போடுகிறார். இதனால், அவரை நெருங்கப் பயப்படுகிறார்கள் சினிமாக்காரர்கள். இதனால் கவுண்டமணி காம்பினேஷன்கிற பேர்ல என் சான்ஸ்ும் போகுது. நிலமைக்கு ஏற்ப இந்த மனுஷன் அனுசரிச்சு நடக்கணும். அப்படி நடந்தால், இன்றைய தேதிக்கு கவுண்டமணியை அடிச்சுக்க எவனாலும் முடியாது.." என்று சூப்பர் மெஸேஜ் கொடுக்கிறார் செந்தில். இனியாவது திருந்துவாரா கவுண்டமணி.

## மாணவப் பருவமே!

கேரளாவில் 'போர் தி பியூப்பிள்' படத்தில் இடம்பெற்ற "லஜ்ஜாவதியே" என்ற பாடல்தான் எங்கும் ஒலிக்கிறதாம். இந்தப் பாடல் தமிழில் மறுபதிப்பாக வரும் '4 ஸ்டூடண்ட்ஸ்' படத்திலும் அதே மெட்டில் இடம்பெறுகிறதாம்.

தெலுங்கில் இந்தப் படம் 70 இலட்சம் பட்ஜெட்டில் உருவாகி, இப்போ 5 கோடி வரை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. ஊழல்களை வேரறுக்க மாணவப் பருவம்தான் சரியான தொடக்கம் என்பதைக் கதையாக்கி இருப்பது தான் படத்தின் வெற்றிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.


இந்தப் படத்தை இயக்கிய ஜெயராஜ் இரண்டு முறை தேசிய விருது பெற்றவர் என்பது படத்திற்குக் கிடைத்த இன்னொரு பிளஸ் பாயின்ட்.

## அழகிய காதல்!

பிரகாஷ்ராஜின் தயாரிப்பில் உருவான 'அழகிய தீயே' படத்தின் அறிமுக நாயகி நவ்யா நாயர், படம் வெளிவரும் முன்பே பிஸியாகிவிட்டார்.

"அதென்ன அழகிய தீயே?" என்று கேட்டால், அதற்கு அவர் தரும் பதில்,

காதலும் தீ மாதிரிதானே. எப்போது பற்றிக்கொள்ளும் என்று தெரியாதே, அத்தோடு காதல் அழகான விஷயம். அதனால்தான் தலைப்பு அப்படி" என்று கூறியதோடு, "காதல் எவ்வளவு மென்மையானது என்பதைப் படம் பார்க்கும் போது உணர்வீர்கள்" என்கிறார்.



அர்ஜுன்-ரீமாசென்

## தியேட்டர் அதிபரானார் விஜய்!

சென்னை விருகம்பாக்கம் நேஷனல் தியேட்டரை விஜய் வாங்கியுள்ளார் என்பதுதான் லேட்டஸ்ட் தகவல். வாங்கிய உடனேயே தியேட்டரை டி.டி.எஸ்., செய்து தன் 'கில்லி' படத்தை ரிலீஸ் செய்தார். இப்போது தியேட்டருக்கு ஏ.ஸி போடும் வேலைகளும் நடந்து வருகின்றன. தியேட்டர் வசூலைப் பொறுத்து சில வருடங்கள் தியேட்டராகவே வைத்திருந்து, பிறகு இடித்துவிட்டு தன் மனைவி சங்கீதா பெயரில் கல்யாண மண்டபம் கட்டப் போகிறாராம்.

## நம்பர் 1. ஆவாரா ஜோதிகா?

சென்னையிலேயே டெண்ட் அடித்துவிட்ட . நக்மா, வந்தவுடன் செய்த முதல் வேலையே, இதுவரை ஜோதிகாவின் மனேஜராக இருந்து கால்ஷீட் பார்த்துக் கொண்டவரை வீட்டுக்கு அனுப்பியதுதான். அந்த மனேஜரால்தான் தயாரிப்பாளர்கள் சங்கம் ரெட் கார்டு போட்டது வரை ஜோதிகாவிற்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்று கருதுகிறார் நக்மா. அதனால், இப்போது சம்பளம் பேசுவது, கால்ஷீட் பிரித்துக் கொடுப்பது என ஜோதிகாவின் அத்தனை விபரங்களையும் நக்மாவே பார்த்துக்கொள்கிறார். தமிழில் பிரச்சினைகள் தீர்ந்தபாடாக இல்லாததால், ஜோதிகாவைத் தெலுங்கில் நம்பர் ஒன் ஆக்க முயன்று வருகிறார் நக்மா.



சுள்ளான் தனுஷ்-தொலானி

## அப்படிப் போடு!

பா.விஜய்க்கு, கில்லி'யில் வரும் "அப்படிப் போடு" என்று அதிரடியாகவும் எழுத வரும், ஆட்டோகிரா..பில் வரும் "ஒவ்வொரு பூக்களும் சொல்கிறதே" என்று மனதை நெகிழ வைத்து பாட்டு எழுதவும் தெரியும்.

பா.விஜய்யின் இன்றைய சந்தோஷம், பெங்களூரில் இருந்து சென்னை வந்த நடிகை சரோஜாதேவி, ஆட்டோகிரா..ப் பாடலுக்காக பா.விஜய்யை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்துப் பாராட்டியதுதான்.

"கவிஞர் கண்ணதாசனின் "மயக்கமா கலக்கமா" பாடலுக்குப் பிறகு எனக்குப் பிடித்த தன்னம்பிக்கை தரும் பாடல் இதுதான்" என்று சரோஜாதேவி பாராட்டியிருக்கிறார்.

ஒரே நேரத்தில் 'அழகி', 'ஆட்டோகிரா..ப்' தெலுங்கு ரீமேக் படங்களில் நடித்து வருகிறார், கோபிகா.

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்தில் ஒரு பாடலை படத்தின் இசையமைப்பாளர் பரத்வாஜே பாடியிருக்கிறார்.

'பீஷ்மர்' படத்தைத் தொடர்ந்து தமிழில் சாயாசிங் ஜோடியாக 'மருதாசலம்' என்ற புதிய படத்தில் நடிக்கிறார், ரஞ்சித்.

ஜெய் ஆகாஷ் அதிரடி ஆக்ஷன் ஹீரோவாக நடிக்கும் 'செவ்வேல்' படத்தில், அவருக்கு அப்பாவாக நடிப்பவர் ராஜ்கிரண்.




லக்ஷ்மிபதி



ராஜாராம்

## மனைவி பெயரில் அஜித் கம்பெனி!

நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தியின் பிடியிலிருந்து விடுபடுவதுதான் இனித் தன் எதிர்காலத்திற்கு நல்லது என்ற முடிவிற்கு வந்துவிட்டார் அஜித். இதன் முதற்படியாகத் தன் மனைவி ஷாலினி பெயரில் படக் கம்பெனி துவங்குகிறார். கம்பெனியின் முதற் படமாக 'சிட்டிசன்' பட இயக்குநர் சரவணன் சுப்பையா இயக்கத்தில், 'இதிகாசம்' என்ற படத்தைத் தயாரிக்கிறார்.




ராஜ்குமார் சந்தோஷி இயக்கும் இந்தி 'ஆட்டோகிரா..ப்' படத்தில் சினேகா நடித்த கேரக்டரில் நடிக்கிறார் ஐஸ்வர்யாராய். பரத்வாஜ் இசையை இந்தியில் ஏ.ஆர்,ரஹ்மான் இசைக்கிறார்.

## நானே முதல் நடிகை!

'காதல் எப்.எம்.' பட நாயகி ஷிவானிசிங் 'முயல் தீவின் முதல் நடிகை நானே' என்று பெருமை கொள்கிறார். தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுதான் ஆளரவமற்ற முயல் தீவு. இது நடுக்கடல் பகுதி என்பதால் அலை இல்லாத கடல் பார்க்கவே நெஞ்சுக்குள் படபடப்பு ஏற்படுத்தும்.இங்கே சமீபத்தில் நடந்த 'காதல் எப்.எம்' படப்பிடிப்பில் கலந்துகொண்டார் ஷிவானிசிங். அப்போதுதான் இங்கே வந்த முதல் நடிகை அவரே என்று தெரிவிக்கப்பட, அதையே பெருமை பொங்கச் சொல்லுகிறார்.

'கருத்தம்மா' படத்திற்குப்பின் அவார்டு சப்ஜெக்டைக் குறிவைத்துக் காத்திருந்த ராஜஸ்ரீக்கு, செருப்புத் தைக்கும் பெண்ணாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. 'கதிர்காலம்' என்ற அந்தப் படம் தனக்கு அவார்டு வாங்கித் தரும் என்னும் நம்பிக்கையில் உள்ளார்.





'உள்ளம் கேட்குமே' படத்தை விலைக்கு வாங்கி, ஆஸ்கார் பிலிம்ஸ் மூலம் தமிழகம் முழுவதும் ரிலீஸ் செய்திருக்கிறார் இசையமைப்பாளர் ஹரீஸ் ஜெயராஜ்.

திருப்பதி பிலிம்ஸ் என்கிற பெயரில் கம்பெனி ஆரம்பித்து சொந்தப் படத் தயாரிப்பில் இறங்க இருக்கிறார் இயக்குநர் லிங்குசாமி.

# விசிட்

"செவ்வேல் திரைப்படத்தின் கதாநாயகி மிசாவுக்கு தாயாக நடிப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த நடிகை வடிவுக்கரசி அவர்களைச் சந்திக்க நேர்ந்தபோது, அவரோடு சில நிமிடங்களைப் பகிர்ந்து கொண்டோம். சினிமாவில் அவர் அறிமுகமானதையும் அதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் அவரிடம் கேட்டபோது, அவரது பெரியப்பா ஏ.பி. நாகராஜன், அந்தக் காலத்தில் கதாசிரியராய், தயாரிப்பாளராய், இயக்குநராய் இருந்தார் என்றும் குறிப்பாக சிவாஜிகணேசனுக்குப் பல படங்களை இயக்கியவர் என்ற வகையிலும் சினிமாவுக்கும் தனக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தார். பெரியப்பாவின் இறப்புக்குப் பிறகு நிலைமை மாறியதாகவும், வேலைக்குப் போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் பி.யு.சி முடித்த கையோடு கன்னிமேறா ஹோட்டலில் தான் வேலைக்குச் சென்றதாகவும், அதே நேரம் தூரதர்சனில் சிறுவர்களுக்கான கண்மணிப் பூங்கா நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கியதாகவும் குறிப்பிட்டார். அந்தக் காலகட்டத்தில் புதிய முகங்களைத் தயாரிப்பாளர்கள் தேடிக் கொண்டிருந்ததால் ரெலிவிஷன் தயாரிப்பாளர்கள் சினிமாவுக்குப் போகும்படி தன்னை கேட்டுக்கொண்டதாகவும், அப்போது பாரதிராஜா இயக்கிய 'கிழக்கே போகும் ரயில்' திரைப்படத்திற்கு கதாநாயகியாக வாய்ப்பிருந்ததாகவும் தெரிவித்த அவர், அதைத் தான் மறுத்ததாகவும் ரீ.வி. நிகழ்ச்சிகளிலே அதிக கவனம் செலுத்தப் போவதாகவும் தெரிவித்தார். அதற்குப் பிறகு ரீ.வி. நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களான தஞ்சை, பாலன், கோபால் ஆகியோர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் பேரில் சினிமாவுக்குள் நுழைய சம்மதித்துள்ளார். அப்போது 'கிழக்கே போகும் ரயில்' படத்தில் கதாநாயகியாகா நடிக்கும் வாய்ப்பு தவறிவிட்டது. அதன் பிறகு நீண்ட இடைவெளி கடந்து கமலஹாசன் நடித்த 'சிகப்பு ரோஜாக்கள்' திரைப்படத்தில் சிறிய காதாப்பாத்திரத்தில் சித்திராவாக அறிமுகமானார். இப்படியாகத் தொடர்ந்த திரைப்பயணம் 'கன்னிப் பருவத்திலே' என்ற திரைப்படத்தின் மூலமாக நடிகையாக தன்னை இனங் காட்டினார். அத் திரைப் படத்தில் ராஜேஷ், பாக்கியராஜ் ஆகியோர் இணைந்து நடித்ததை இப்போதும் நினைவு கூருகிறார். ஹரிதாஸ் திரைப்படத்திற்குப் பிறகு ஒரு வருடங்கள் ஓடிய ஒரே படம் 'கன்னிப் பருவத்திலே' என்பதில் வடிவுக்கரசிக்கு மகிழ்ச்சி. அதனைப் தொடர்ந்து 'மெட்டி' எனும் திரைப்படம் ராதிகா, விஜயகுமாரி ஆகியோருடன் இணைந்து நடித்திருந்தார். மகேந்திரன் இயக்கிய இத்திரைப்படத்தில் அலங்காரங்கள் எதுவும இல்லாமலே சிறப்பாக நடிக்கக் கிடைத்ததை பெரும் வாய்ப்பாக நினைக்கிறார். அப்போதெல்லாம் நடிப்பு உலகில் கொடி கட்டிப் பறந்த செவாலியர் சிவாஜியுடன் நடித்துவிட வேண்டுமென்ற அவா இவரைப் பாடாய்ப் படுத்தியதாக தெரிவித்த வடிவுக்கரசி, 'வா வா கண்ணா வா' என்ற திரைப்படத்தின் மூலம் சிவாஜிக்கு மகளாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்ததாக தெரிவித்தார். சுமார் 38 படங்கள் நடித்து விட்டபோதும் இவரின் நடிப்புக்கு திருப்பு முனையாக இருந்த படம் சிவாஜிக்கு மனைவியாக இணைந்து நடித்த பாரதிராஜாவின் இயக்கத்தில் உருவான 'முதல் மரியாதை'. இதுதான் வடிவுக்கரசியை சினிமா உலகுக்கு ஞாபகம் வைக்கும் அளவுக்கு பேரை வாங்கிக் கொடுத்தது. அதற்கு அடுத்தபடியாக சினிமாவில் குறிப்பிடக் கூடிய மாற்றங்களை சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் நடித்த திரைப்படங்களிலேயே தான் அநுபவித்ததாகக் கூறுகிறார். "மிஸ்டர் பாரத்" ரஜினியோடு இணைந்து நடித்த முதல் படம். ரஜினியைப் பற்றிக் கூறும் போது, ஒரு நடிகன் என்பதற்கு அப்பால் தான் சந்தித்த சிறந்த மனிதன் என்றும் மற்றவரைப் புரிந்துகொள்ளக் கூடியவர் என்றும் மற்றவருடைய மனசு கஷ்டப்படாமல் பழகும் மிகச் சாதாரணமான குண இயல்பு கொண்ட ஒப்பிட முடியாதவர் எனவும் தெரிவித்த அவர், அவரோடு நடித்த 'படிக்காதவன்' படத்தில் ரஜினிக்கு அண்ணியாக நடித்து திட்டியதால் ரஜினி ரசிகர்கள் மத்தியில் தனக்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொண்டதாக சிரித்துக் கொண்டே சொல்லுகிறார். அதைச் சரிபண்ணும் விதமாக 'வீராவில்' நல்ல அம்மா கரக்டரில் நடித்ததாகக் கூறுகிறார். ஒரு நாள் அருணாச்சல கிரியேசன் எனும் ரஜினியின் திரைப்படக் கம்பனியிலிருந்து தனக்கு அழைப்பு வந்து 'அருணாச்சலம்' திரைப்படத்தில் நடிக்கும்படி சுந்தர்.சி. கேட்டுக்கொண்டபோது தான் நம்பவில்லை என்றும், ஆனாலும் ரஜினியுடன் நடிக்கின்ற வாய்ப்பை தவறவிடக் கூடாது என்பதாலும் கதை கேட்டபோது கொஞ்சமும் எதிர்பாராத விதமாக ரஜினியை மரியாதை குறைவாகப் பேசுகின்ற காரக்டர் தனக்கு வழங்கப்பட்டதாகவும், அதைத் தான் விரும்பவில்லை என்றும் கூறினார். ஏனென்றால் 'படிக்காதவன்' திரைப் படத்திற்குப் பிறகு ரஜினியைத் திட்டுகின்ற கதாப்பாத்திரங்களை ஏற்று நடித்தால் தனது பெயர் கெட்டுவிடும் என்று பயந்ததே காரணம் என்கிறார். ஆனாலும் 'ரஜினிகாந்' தன்னையே நடிக்கச் சொல்லிக் கேட்டதால் மேற்படி கதாப்பாத்திரத்தை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கும் அவர் படம் வெளியாகி இரண்டாம் நாளே தனது வீட்டுக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு ரஜினி இரசிகர்கள் தன்னைப் பயமுறுத்தியதாக பயந்து கொண்டே கூறினார். இதற்குப் பிறகு ஒரு வருடம் கழிந்து வேறு ஒரு பட சூட்டிங்கிற்குகாக தேனிக்குச் சென்று திண்டுக்கல்லில் ரெயிலுக்கு வந்த போது ரஜினி இரசிகர்கள் கூட்டமாகக் கூடி வந்து தண்டவாளங்களில் படுத்துக் கொண்டார்கள். தான் பயணமாக இருப்பதை எப்படியோ தெரிந்து கொண்ட ரஜினி இரசிகர்கள் தன்னை வெளியே வருமாறு ஆர்ப்பாட்டம் செய்ததும் இன்னும் தனக்குக் கேட்டுக் கொண்டு இருப்பதாகவே சொல்லுகிறார். மிகவும் பயந்து போனதால் என்ன செய்வதென்று அறியாமல் விளித்துக் கொண்டு இருந்தபோது பிரயாணத்துக்காக வந்திருந்தவர்கள் ரஜினி இரசிகர்களோடு பேசி, ஒரேயொரு தடவை மன்னிப்புக் கேட்கவேண்டுமென கேட்டுக் கொண்டதாகவும், இவரும் கீழே இறங்கி ரஜினிக்குத் திட்டியதற்காக மன்னிப்புக் கேட்டதோடு இனிமேல் அப்படியொரு கதாபாத்திரத்தை ஏற்கப்போவதில்லை என்று கூறிய பின்னரே பயணிக்க அனுமதித்தனர் என்றும் கூறினார். இதற்குப் பிறகு நடிக்கும் வாய்ப்பு அவ்வளவாக வராததால் 97 ஆம் ஆண்டில் நிம்புஸ் குறூப்ஸ் தயாரித்த "சக்தி" தொலைக்காட்சி நாடகத்தின் மூலமாக சின்னத்திரைக்கு வந்ததாகக் கூறும் அவர், 'குடும்பம்', 'அர்ச்சனைப் பூக்கள்', 'அலைகள்' 'விக்கிரமாதித்தன்' ஆகிய மெகா சீரியல்களில் நடித்ததாகக் கூறுகிறார். ஒரே மாதிரியான நடிப்பு மட்டுமல்லாமல் நீண்ட தொடர்கள் என்பதால் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பை தவறவிட்டு விட்டதாக நினைக்கும் இவர், இனி சீரியல் நடிப்பை விட்டு வித்தியாசமான நடிப்பு கிடைக்குமாக இருந்தால் சினிமாவில் நடிக்க இருப்பதாகக் கூறினார். அந்த வகையில் 'செவ்வேல்' திரைப்படத்தில் நடிகையின் அம்மாவாகவும் அடாவடித்தனம் செய்து பணம் சம்பாதிக்கும் மீனவப் பெண்ணாகவும் நடிக்கின்ற வாய்ப்பு இயக்குநர் தாஸ், தயாரிப்பாளர் நிலாப்பிரியன் ஆகியோரின் கூட்டுத் தயாரிப்பில் கிடைத்ததாகக் கூறும் இவர், இப்படத்தில் பிரதான வில்லனாக கலாபவன் மணி நடிக்கிறார் எனவும் கூறினார். தனது முதல் வெளிநாட்டுப் பயணமும் இலங்கைக்கான முதல் பயணமும் இது என்பதை மறக்காமல் தெரிவிக்கிறார்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து / 07.08.2004




லண்டனில் வசிக்கும் யோகசீலன் - வர்ணமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஆகாஷ் தனது முதலாவது பிறந்தநாளை 2004-08-07 சனிக்கிழமையன்று லண்டனில் வெகு குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பம்மா - அம்மம்மா, தாத்தா - பாட்டி, இத்தாலியில் வசிக்கும் மாமா - மாமி, சித்தப்பா - சித்தி, அண்ணா கீர்த்தனன், லண்டனில் வசிக்கும் சித்தப்பாமார், சித்தி, அக்கா வாசுகி, அண்ணா கைலாஷ், இலங்கையில்

### செல்வன் யோ. ஆகாஷ்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமா - மாமி, சித்தி, அக்காமார் ஜெனுபா, கஜூசியா, பெரியப்பா- பெரியம்மா, தம்பி ஹரி ஜாகின் போல், சித்திமார், சித்தப்பாமார், தம்பி தீபிகன் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் நீடுழி வாழ வேண்டுமென இறையருள் வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
அம்மம்மா (ச. பவளமணி), புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்து




### செல்வன் சாதோக்

இந்திரன்- ஜெஸ்மின் தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாதோக் தனது முதலாவது பிறந்தநாளை 13.08.2004 அன்று சூரிச்சில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா- அப்பம்மா, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமா, அத்தை, லண்டனில் உள்ள மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல இயேசுவின் நாமத்தினால் சகல ஐஸ்வரியங்களுடன் நீடுழி காலம் இன்புற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- ஜெஸ்லின் (இலங்கை)




# வாழ்க்கைச் சிறை

ஒரு சிறைக்குள்ளேயே
உருள்கிறது என் வாழ்க்கை.
சூழ்நிலைகள் பல இறுக்கப்பட்டு
மனம் வேதனையில் துடிதுடித்து
வாழ்ந்ததும் அந்தச் சிறையில் தான்.
சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு
பல முகங்களாய் வாழ வேண்டிய
நிர்ப்பந்தத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கிறதும்
அதே சிறையில் தான்.
வாழ்க்கைப் பரிமாணத்தின்
துன்பக் கோணத்துச் சுமைகளை
சுமந்தே; பாரம் தாங்காது
பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும்
அதே மனச் சிறையில்தான்
என் வாழ்க்கை உருண்டுகொண்டிருக்கிறது.

ஜெ.சுபாஷினி.

# காதல் காத்திருப்பு....

போதும் பெண்ணே
உன் மௌன நாடகம்!

இத்தனை காலம்
ஒரு தலை ராகமாய்....
என் சோக கீதம்....
கேட்கவில்லையா.....
உன் காதுகளுக்கு....?

என்னைக் கண்டவுடன்
ஓடி ஒளியும்....
உன் வார்த்தைகளுக்கு....
ஒரு அழைப்புவிடு....!

மறைந்திருக்கும்
உன் மௌன மொழிக்கு.
ஒரு ஓசை கொடு....!

'இல்லை' என்றாலும்
இருப்பேன் இவ்வுலகில்...

மலையாக
உன் நினைவுகளை
மனதில் சுமந்துகொண்டு....
சிறகடிக்கும் உன்
சிந்தனைகளை
சிந்தையிலே
சிறைப்படுத்தி....
சிறகொடிந்த கிளியாக....
நடைப்பிணமாய் - நான்
இருப்பேன் இவ்வுலகில்.....

நி.அஸூமத், எருக்கலம்பிட்டி.

# என் குரல்



எம் விழிகளில்
குருதி வழிய
நீர் கும்மாளம்
இடுவீர்.!

உயிருக்குப்
பயந்து
உம் வாசல்
வந்த போது
எட்டி உதைத்து
எம்மை பலியிடுவீர்.

பாதை தெரியா
பறவைகளாய்
கஞ்சிக்கும் உயிருக்கும்
கதியற்ற போது
நீர் கைகொட்டி
சிரித்திடுவீர்!

இன்று பாதைகள்
மாறி பயணங்கள்
தொடரும் போது
மனது சுடுகிறதா?
வலிக்கிறதா?

சகோதரனே!
பாதிப்பென்பது
இருவருக்குமே!
காலங்கள்
யாருக்கும்
அடிமையில்லை.

ஜெ.தமிழ்ச்செல்வி, தில்லையடி, புத்தளம்.



# இல்லாத ஆராதனை

உள்ளுக்குள்
இருக்கும்
பளிங்கு மனசில்
சந்தன வாசனை.

கையசைவுக்கு
காத்துக் கிடக்கும்
தென்றல்.

என் பாத நிழலுக்கு
ஓடி வரும்
மேகக் கூட்டம்
சிரிப்பிற்குக்
கையேந்தும்
பிச்சைக்காரியாக
ஈர நிலா
இளமையில்
ஒட்டிக்கொள்ள
வண்ணாத்தி
படையெடுக்கும்
வார்த்தையில்லா
இவளுக்குள்....

இராகங்களும்
பாடல்களும் -
கண்ணீரில்
ஒழுகிக் கரையும்.
பிரிவுத் துயரோடு
ஒற்றையாய்
பூத்திருக்கும்
இந்த ரோஜா!

மொட்டுக்குள்ளே
கண்கள் அறியாமல்
பூச்சியும்
அரித்துக்கொண்டது.

சதிகளுக்குள்
வாழ்க்கை
பின்னப்பட்டபின்

வேஷமில்லா
வாழ்வில்
இடறல்களே
கை
குலுக்குகின்றன.

இப்போதெல்லாம்
கரு விழிக்குள்
கண் தோண்டி....

பிடரியில்
மரணக்காற்று
பிடித்திழுப்பதாய்

எனக்குள்
நானே
உயிலெழுதுகிறேன்!

—முல்லை நிலா.

# அவள் இவள்?

அதே உருவம்
அதே நடை
ஆடி அசையும் ஒற்றைச் சடை
அது அவளாகத்தான்
இருக்க வேண்டும்.
எனக்குள் சிந்தனை
இவ்வளவு நாளும்
எங்கே போனாள்?
பரவாயில்லை,
எப்படியோ மீண்டும்
தோன்றிவிட்டாள்.

எப்படியும் இன்று
காதலை
சொல்லிவிட வேண்டும்
அவளும் என்னை ஏற்பாள்.
ஏனெனில் அவளுக்கும்
என் மீது....சே.....

புதுவேகம்,
புரியாத பரபரப்பு,
எல்லாக் கடவுளிற்கும்
ஒவ்வொரு வேண்டுதல்,
மனதில் தைரியத்துடன்
அவள் முன் போய் நின்று
"ஹலோ" என்றேன்.
அவளோ சாவகாசமாக
நிமிர்ந்து பார்த்து
அழகாகச் சிரித்தாள்.
அந்த மாயச் சிரிப்பில்
இன்று மயங்கவில்லை.
மாறாக-
ஆடித்தான் போய்விட்டேன்
அவள் பிறை நெற்றியில்
குங்குமப் பொட்டு!

—கு.சந்திரிகா, கோப்பாய்.

# அழியாத நினைவுகள்

நீ
என் வீட்டுத் தெருவை
கடந்து செல்லும்
நாட்களில்,.....

என்னையறியாமலேயே
என் இதயம்
உன் காதலின்
பாதத்தில் இடறி
விழும்
ஆனாலும்
நீ
அறியமாட்டாய்....


நானாகவே
எனக்குள்
காதல் விதைதனைத்
தூவி
பூப்பறிப்பேன்
உனக்கும் கோர்த்து
சூடிவிட
துடிப்பேன்......

இரண்டுமே
தினம் தினம்
பார்த்துக்கொள்ள
தவறுவதில்லை
உன் பெயரை.


ஆனாலும்
தேய்ந்துவிட்டது
என் ஆள்காட்டி
விரல் நுனி....

நிலவு உறங்கிய
இரவுகளில்
நிஜமாய் உறங்காத
என் இதயம்
அழியாநினைவுகளுடன்
அல்லற்படுகின்றது!

—கவிப்பிரியை சம்ஸியா,
உக்குவளை,



என் வீட்டுச் சுவர்....
நான் முகம் பார்க்கும்
கண்ணாடி....




# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

கவிதையின் பணி பார்வையை முன்வைப்பதுதான். சொல் மற்றும் பொருளினூடே பிடிபட்டிருக்கும் பார்வை கவிஞனின் அநுபவமாகவும் அவனுள் ஓர் உள்ளாழ்ந்த செயலினால் கவிதையாகவும் மீட்கப்படுகிறது. இதனால் கவிதையில் பார்வையும் அநுபவமும் சொற்களும் வேறு வேறல்ல எனும்படி ஒன்றாகின்றன. இயற்கையுடன் ஒட்டியும் சமூக வாழ்வினூடே இயங்கியும் செயற்படுகின்ற கவிமனதின் அநுபவங்கள் தோற்றுவிக்கும் நிதர்சனம் கவியின் மொழிகின்ற மனதினூடே கவிதையாக உருவெடுக்கிறது. இயற்கையும் சமூகச் சூழலும் தருகின்ற அநுபவத்தால் நேருகின்ற மறுவினையாக கவிஞனுக்குள் கவிதை தூண்டப்படுகின்றது. அநுபவம் தருகின்ற பார்வையின் மறுமொழியாக கவிதை திகழ்கிறது. சமூகம் சார்ந்த மற்றும் தனி மனித மனோபாவங்களை ஆராய்வதினூடாக உயர்ந்த பண்புகளை மறைமுகமாக உணர்த்துகின்றன இன்றைய கவிதைகள். அந்த வகையில் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கும் புதிய வரவுகளில் ஒருவர் அழகிய பெரியவன். அழகிய பெரியவனின் நான்கு கவிதைகள்.



நீ அறிந்திருக்க நியாயமில்லைதான்
உன் சிரிப்புக்கெல்லாம்
மறுகினேன்

உன் வார்த்தைக்கெல்லாம்
மௌனித்தேன்

உன் நினைவுகளின் கரையில்
எங்கேனும்
உன் இதயத்தில்
தொட்டதும் உதிரும்படியாகிலும்
படிந்திருப்பேனோ.....

உனதுயிரின்
ஒரு துண்டிலாவது
இவை
உனக்கு அறியக் கிடைக்காமல்
போய் விடுமோ.......

* * *

இரவில் வந்தது மழை
யாரும் அதன் அழைப்பை
ஏற்கவில்லை
சன்னல்களும் கதவுகளும் சாத்திக் கிடந்தன
துக்கம் அதிகமாகி மாரடித்துப் புலம்பியது அது
இருட்டின் ஒரு துளியைக் கூட
கரைக்க முடியவில்லை அதனால்
இரவெல்லாம் சபித்தபடியும்
முணுமுணுத்தபடியும் இருந்தது.
காலையில் வாசலில்
தேங்கியிருந்த மழையின் கண்ணீரில் நின்றபோது
முறுக்கிக் கொண்ட சிறுமிபோல்
கால்களைக் கிள்ளியது
அதன் குளிர்ந்த கோபம்.

* * *

பிரபஞ்ச வெளியிலிருந்து
நினைப்பதை அள்ளும் கைகள்
செல்லக்குட்டிக்கு.
வெற்றுப் பையிலிருந்து தீராமல்
எடுத்து வைக்கிறாள்.
காய்கள் பழங்கள் தின்பண்டங்கள்
தின்னவும் சமைக்கவும் கட்டளை
பிறிதொரு சமயம்
தலை சுமக்கும் வெற்றுத் தட்டிலிருந்து
குறைந்த விலைக்கு
சிரித்தபடியே
மிட்டாய்களைத் தருகிறாள்
பின் புறங்களைக் காட்டச் சொல்லி
எல்லோருக்கும் விரல் ஊசி
கைப்பிடியளவு காற்றள்ளி வாயில் திணிப்பு
மருந்து மாத்திரை
அவளின் உடைகளில்
பை இல்லை
வேலை பழகாத கை கால்கள்
அவள் கணக்குகளை மிரட்டுபவள்
காசுத் தாள்களை கிழித்தும் தொலைத்தும்
ஆடுபவள்
வலிகளும் காயங்களும் இல்லாத
வாழ்க்கை சொல்லி
சிரிக்கிறாள்.
அச் சிரிப்பிடம் வெட்கமுறுகிறேன்.

பொழுதுகளை மீட்டிய உன் வருகை
கம்பிகளை அதிரவிட்டு ஓய்ந்தது.

வழிநெடுக நீ கொறிக்க
என் நெஞ்சரிந்து தந்தேன்

நீ விடைபெற்றுக் கொண்டபின்
மரங்கள் நடமிடாமலோ
பூக்கள் நெஞ்சு பிளக்காமலோ
போய்விடவில்லை

என் தோட்டத்துப் பறவைகள்
குரலடைத்துப் போகாமல்
தங்கள் பாடல்களைத் தொடர்கின்றன
இசை வலி உணர
புட்டம் சிவந்த சிட்டொன்று நீள்நேரம்
பாடுகிறது


உன் இதம் தணிந்த அறைக்காற்று
குளிர்ந்து தீண்டி நகைக்கிறது
இறந்தவனின் உயிர்த்த கண்களும்
இருப்பவனின் இறந்த கண்களும்
சுவரிலிருந்தபடி
என்னில் பார்வைகளை
குத்திப் பிடுங்கத் தொடங்கிவிட்டன

உன் பெயர்வின் வெற்றிடத்தால்
இந்நாளில் கணங்கள்
சிதிலமடைந்துவிட்டன
மாரிகால மேகமாய்த் திரண்டிருக்கும்
மௌனம்
தொண்டை அடைக்கிறது

அறையெங்கும் நாம் உதிர்த்த
சொற்சருகுகளை மிதித்து நடப்பதுதான்
பாதங்களை உறுத்துவது
நிசப்தம் பிய்க்கிறதென்னை

இமைகள் மூடி
உதடுகள் இறுக்கி என் அறை
கருவுற்றிருக்கிறது என்னை
உன் அடுத்த வருகையில்
வாசலை நீ திறக்க
நிகழலாம் என் மீள்பிறப்பு.


# பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : கா. சிறிதரன்
வயது : ——
முகவரி : மானிப்பாய் வீதி, உடுவில்.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர் : சி. நிலா
வயது : 20
முகவரி : சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி.



பெயர் :எஸ்.எம். நஹீர்
வயது : 20
முகவரி : பூவரசந் தீவு, கிண்ணியா—05.
பொழுதுபோக்கு : பத்திரிகை, கவிதை.



பெயர் : வித்யாசங்கர்
வயது : 22
முகவரி : மே/பா, சி. சங்கரதாஸ், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : கவிதை, தனிமை.



# லேடிஸ் ஸ்பெஷல்

# அலுவலகத்தில் உறுதி தேவை

அடக்கம், அமைதி, பொறுமை போன்ற குணங்களை காலங்காலமாக நம் முன்னோர்கள் பெண்களின் மனதில்



வேரூன்றச் செய்துள்ளார்கள். அடங்கிப் போவது என்பது பெண்களுக்கே உரிய ஒரு குணம் என்று எண்ணப்படுகிறது. இந்த நவீன யுகத்தில் ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் என்று எண்ணப்பட்ட பல சவாலான தொழில் நுணுக்கம்மிக்க வேலைகளை இன்று பெண்களும் ஆண்களோடு தோளோடு தோள் சேர்ந்து செய்ய ஆரம்பித்து விட்ட நிலையில், பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதில் உறுதியாக இருப்பதே இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது.

உறுதியாக இருப்பது என்பது சண்டையிடுவது அல்ல. ஆனால், பல சமயங்களில் இந்த இரு வேறு வார்த்தைகளுக்கும் சரியான அர்த்தம் தெரியாததால் பலர் நீங்கள் உறுதியாகப் பேசும்போதும் உங்களைச் சண்டைக்காரர் என்றும் கூறலாம்.


உறுதியாகப் பேசும்போது நீங்கள் நேர்மையானவர், உங்கள் உரிமையை நிலைநாட்ட விரும்புவர் என்பதையும் அதே சமயம் மற்றவர்களின் உரிமையை நீங்கள் பறிக்க முயற்சிக்கவில்லை என்பதையும் உங்கள் பேச்சு உணர்த்த வேண்டும்.

ஏன் நாம் உறுதியாக இருக்க வேண்டும்? மற்றவர்கள் சொல்வதை எல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ளும் பலரைப் போல் நாமும் நடந்துகொண்டால், நாம் பலராலும் விரும்பப் படுபவராக இருக்கலாம். அது எளிதானதும் கூட. "உறுதியாக இருப்பது என்பது எதிலும் உங்களின் தனிப்பட்ட நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகும். நீங்கள் உறுதியாக இருக்கவில்லை என்றால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். மற்றவர்கள் உங்களை எளிதாகவும் சாதாரணமாகவும் எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் ஏதாவது ஒரு பிரச்சினையில் இருந்தால், நீங்கள் உறுதியாக இருந்தால் மட்டுமே மற்றவரின் கவனத்தை உங்களால் ஈர்க்க முடியும்."

பெரும்பாலான நேரங்களில் நாம் உறுதியாக இருக்கத் தயங்குகிறோம். காரணம் உங்கள் அதிகாரி வருத்தப்படுவார் அல்லது தொழில் பிரச்சினைகள் ஏற்படும் என்று பயப்படுகிறோம். ஆனால், உண்மை என்னவென்றால், நீங்கள் உறுதியாக இருப்பதன் மூலம் உங்கள் அதிகாரிக்கு உதவுகிறீர்கள். மற்றவர்களும் உங்கள் பிரச்சினை என்ன, உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை அறிந்துகொள்ள உதவுகிறீர்கள். கடைசியில், நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் நன்மைக்காகவும் சில விஷயங்கள் சரியான முறையில் அமைவதற்கும் நீங்கள் உறுதியாக இருப்பது அவசியமாகிறது. மேலும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதுடன் உங்களை மற்றவர் சரியாகப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

## பிள்ளைகளை திட்டாதீர்கள்!

"பக்கத்து வீட்டுக் குழந்தையைப் பார், எவ்வளவு அழகாகப் பேசுகிறது, பழகுகிறது, படிக்கிறது. நீயும் இருக்கிறியே..... எதற்கும் உதவாதவள்...." என்று பல தாய்மார்கள் தங்கள் குழந்தையைப் பார்த்து இயல்பாகச் சொல்லிவிடுகிறார்கள்.



சொன்னதை அவர்கள் அப்படியே மறந்தும்விடுகிறார்கள். ஆனால், தாயிடம் இருந்து அத்தகைய வார்த்தைகளைப் பெறும் குழந்தைகள் அதனை அவ்வளவு எளிதாக மறந்து விடுவதில்லை. அந்த வார்த்தைகள் அப்படியே அவர்களின் மனதில் பதிந்து மாறாத மனக் காயத்தை ஏற்படுத்துகிறது.

இதன் மூலம் குழந்தைகளுக்கு ஏமாற்றம், விரக்தி, கோபம் போன்றவை ஏற்படுகின்றன. தன் மீது பெற்றோருக்குப் பாசம் இல்லை என்ற முடிவுக்கு வருகின்றன. இத்தகைய நினைவலைகள் குழந்தைகளின் சிந்தனைச் சக்தியைக் குறைத்து, செயல் திறனை மழுங்கடித்து விடுகின்றன.

அதனால் பக்கத்து வீட்டுக் குழந்தைகளை ஒப்புமைபடுத்தி மட்டந்தட்டுவதை விட, நீங்கள் சும்மாகவே இருந்துவிடுவது நல்லது. உங்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். திறமைசாலியாக வளர வேண்டும். தோல்விகளைக் கண்டு துவளக் கூடாது என்று நீங்கள் கருதினால், மகான்களின் வாழ்க்கை வரலாற்றை, அறிஞர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, அவர்களிடம் பளிச்சிட்ட திறமைகளை உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். அதன் மூலம் அவர்களது வாழ்க்கையில் நல்ல பிடிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

தரமான கல்விக்காகவும் வேலை பார்க்கும் பெற்றோர்கள் தங்கள் சவுகரியத் திற்காகவும் தங்கள் குழந்தைகளை விடுதியில் தங்கிப் படிக்க வைக் கிறார்கள். இந்தச் சிறுவர், சிறுமியர்களில் பெரும் பகுதியினர் தொடக்க காலத்தில் மிகுந்த கவலைக்கு உள்ளாகிறார்கள். பெற்றோரைப் பிரியும் ஏக்கத்தில் தலைவலி, வாந்தி, படிக்க மனமின்மை போன்றவைகளால் அவதிப்படுகிறார்கள்.

பெற்றோர் இத்தகைய மாணவ மாணவிகளைக் கட்டாயப்படுத்தி விடுதியில் கொண்டுபோய் திணித்துவிடக் கூடாது. அவர்களிடம் மென்மையாக அணுக வேண்டும். அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி மனம் விட்டுப் பேச வேண்டும். விடுதியில் இருக்கும் சூழல், தோழிகள், நண்பர்கள், ஆசிரியர்களின் அணுகுமுறை போன்றவற்றைப் பற்றியும் விசாரிக்க வேண்டும்.

சிறுவர், சிறுமியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எந்தப் பிரச்சினையும் இன்றி, மனதொன்றிப் படித்தால் மட்டுமே அவர்களால் படிப்பில் வெல்ல முடியும்.

# குறிப்புணர்த்தும் குடும்ப டிப்ஸ்!

## பகலில் தூங்கலாமா?

பகலில் தூங்கும் பழக்கம் மிகவும் கெட்ட கழக்கம். அதனால் எடை அதிகரிக்க வாய்ப்புண்டு. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பகலுணவிற்குப் பிறகு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு தூங்கலாம். மற்றவர்கள் பொழுபோக்காகச் செய்யும் வைவேலையையோ புத்தகங்கள் படிப்பதையோ வழக்கமாகக் கொண்டு பகல் பொழுதை உறங்காமல் கழிக்கப் பழகிவிட வேண்டும். உண்ணும் உணவோடு அடிக்கடி இஞ்சியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். எலுமிச்சம் பழம் பிழிந்த இஞ்சி ஊறுகாய், இஞ்சித் துவையல், இஞ்சித் தயிர்ப்பச்சடி முதலியவற்றுள் ஏதாவது ஒன்றைச் செய்து சாப்பிடுதல் நலம். வாரத்தில் இருமுறை பாகற்காய், சுண்டைக்காய், வேப்பம் பூ போன்றவற்றையும் உணவுடன் சமைத்து உண்ண வேண்டும். இவ்விதம் நாம் சில வழக்கங்களைக் கடைப்பிடித்து, உடற்பயிற்சிகளையும் நாள்தோறும் செய்தால், விரைவில் சீரான எடையுடனும் எழிலுடனும் ஆரோக்கியத்துடனும் விளங்கலாம்.

# நலமாக வாழ்வோம்


## பார்சுவகோணாசனம்

பலன்கள் :

1. மார்பு விரிவடைகிறது.

2. முட்டி வலி, முதுகு வலி, தொடை வலி ஆகிய வலிகளைப் போக்குகிறது.

3. வயிற்று உப்புசம், வயிற்றுப் போக்கு ஆகியவற்றைச் சரி செய்கிறது.



4. பக்கவாட்டு அதிக தசைகளைப் போக்குகிறது.

5. நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு ஆகிய நோய்கள் குணமாக உதவுகிறது.

செய்முறை :

1. விரிப்பின் மீது கால்களை 3 அடி இடைவெளி விட்டு வைத்து நிற்க வேண்டும்.

2. வலது கால் பாதத்தை வலது புறமாகத் திருப்பி வைக்கவும்.

3. வலது கால் முட்டியை முன்புறமாக நீட்டி வளைத்து வலது புறங்காலை 90ஂ டிகிரிக்கு அதாவது வலது முட்டிக்கு கீழ் காலை செங்குத்தாக வைக்க வேண்டும்.

4. வலது உள்ளங்கையை வலது பாதத்திற்குப் பக்கத்தில் வெளியே ஊன்றி வைத்து இடது கையை மடிக்காமல் தலைக்கு மேலே கொண்டுவந்து இடது காதை ஒட்டியவாறு வைத்து எதிரே உள்ள பொருளை நேராகப் பார்க்க வேண்டும். சாதாரண மூச்சில் 30 எண்ணிக்கை இருக்க வேண்டும்.

5. எழுந்து நிமிர்ந்து நின்று வலது கால் பாதத்தை முன் போல் திருப்பி வைக்கவும். அது போல இடது புறமாக 30 எண்ணிக்கை செய்து முடிக்க வேண்டும். இரண்டு தடவைகள் செய்ய வேண்டும்.

குறிப்புகள் :

1. பக்கவாட்டில் உள்ளங்கையை ஊன்ற முடியாதவர்கள் விரல் நுனிகளைத் தரை மீது வைத்துப் பழகலாம்.

2. இவ்வாசனத்தை விரிப்பின் மீது தனியாகச் செய்ய முடியாதவர்கள் சுவரை ஒட்டியவாறு நின்று பழகலாம். சில வாரப் பயிற்சிக்குப் பிறகு தனியே நின்று பழகலாம்.

3. கையை முன்புறமாக வைத்துச் செய்யக் கூடாது.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## செட்டிநாட்டுச் சிக்கன்

சிக்கனைச் சமைக்கத் தொடங்கும் முன், அதனைச் சுத்தம் செய்து, வெந்நீரில் 5 நிமிடம் வேகவைத்து கொழுப்பை நீக்கிவிட்டுச் சமைக்க வேண்டியது மிகமிக அவசியம்.

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| தோல் நீக்கிய சிக்கன் | - 200 கிராம் |
| சோம்பு, மிளகு, சீரகம் | - தலா 1 தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம் | - 1 கைப்பிடி |
| பெரிய வெங்காயம் | - 2 |
| தக்காளி | - 2 |
| மிளகாய் | - 1 |
| கறிவேப்பிலை | - 1 நெட்டு |
| எண்ணெய் | -2 தேக்கரண்டி. |

**செய்முறை :**

வெங்காயம், தக்காளி, மிளகாயைப் பொடியாக நறுக்கவும். சோம்பு, மிளகு, சீரகம், சின்ன வெங்காயத்தை 1 தேக்கரண்டி எண்ணெயில் வதக்கி அரைக்கவும். வாணலியில் மீதி எண்ணெயை விட்டு பெரிய வெங்காயம் தக்காளியை வதக்கவும். பிறகு அரைத்த கூட்டுடன் கொழுப்பு நீக்கப்பட்ட சிக்கனைச் சேர்த்து 10 நிமிடம் வேகவைத்து ( தீ மிதமாக எரிய வேண்டும்) இறக்கிச் சாப்பிடுங்கள்.

# தாகம் எடுப்பது ஏன்?

தாகம் எடுத்தால் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று தெரிகிறது. ஏன் தாகம் எடுக்கிறது என்று தெரியுமா? நிறையப் பேருக்குக் காரணம் தெரியாது என்று உறுதியாகச் சொல்லலாம். உடலின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்று தண்ணீர். உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவற்றை வரிசைப்படுத்தினால் முதலிடம் பெறுவது ஆக்சிஜன். இரண்டாது இடம் தண்ணீருக்கு.

தண்ணீரின் அவசியத் தேவையை அறிந்துகொள்ளக் கஷ்டப்பட வேண்டியதில்லை. சராசரி மனிதனின் எடையில் 60 சதவீதம் தண்ணீர். புதிதாய்ப் பிறந்த



குழந்தையின் எடையில் 75 சதவீதம் தண்ணீர். உடலின் முக்கிய இயக்கங்கள் அனைத்திற்கும் தண்ணீர் தேவை.

தசைகள் நெகிழ்ந்து இயங்கும்படிச் செய்வது தண்ணீர். நமது இரத்தத்தில் பெரும் பகுதி தண்ணீர். தசைகளுக்கு ஆற்றல் கிடைக்க ஆதாரமாக இருப்பது கிளைகோஜென்; இதைச் சேமித்து வைப்பதும் தண்ணீர்.

உடலுக்கு உரிய அளவு தண்ணீர் தேவை. பற்றாக்குறை ஏற்படும்போது தாகம் எடுக்கிறது.

உடலிலிருந்து தண்ணீரும் திரவமும் தினசரி ஏராளமாய் வெளியேறுகிறது. ஒன்றரை லிற்றரிலிருந்து இரண்டே கால் லிற்றர் வரை டாய்லெட்டில் வெளியேறுகிறது. வியர்வை 'மூலம் 100 மில்லி லிற்றர் இழக்கிறோம். மூச்சுக் குழாயில் ஆவியாகி வெளியேறுதல் உள்ளிட்ட வேறு வழிகளில் 700 மில்லியைப் பறிகொடுக்கிறோம். வெப்பம் மிகுந்திருக்கும் காலத்திலும் கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்யும் நேரத்திலும் வியர்வை வடிவில் கணிசமான அளவு நீரை வெளியேற்றுகிறோம். இவை தவிர, நமது சிறுநீரகங்களும் திரவக் கழிவுகளை வெளியேற்றுகின்றன.

இதற்கு என்ன அர்த்தம்?

நமது உடல், தொடர்ந்து திரவத்தை இழந்துகொண்டே இருக்கிறது என்பதுதான்.

நமக்குத் தாகம் எடுப்பது உடலில் உள்ள திரவநிலை குறைந்துவிட்டதையே குறிக்கிறது.

திரவநிலை குறைவதை நமது உடல் ஏற்றுக்கொள்வதில்லை. அதிக அளவு திரவம் குறைந்தால் நோய்கள் தொற்றும் வாய்ப்பு மிகுதியாகும். திரவச் சூழ்நிலையில்தான் உடலுக்குத் தேவையான ஆற்றல் உருவாகிறது. எனவே இரத்தம், தசைகள், மற்ற உறுப்புகள் சீராகச் செயற்பட குறிப்பிட்ட அளவு தண்ணீர் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

தாகத்திற்குப் போதுமான அளவு தண்ணீரோ வேறு திரவமோ பருகிய பிறகு, இந்தத் தகவல் மூளைக்குச் செல்கிறது. தண்ணீர் பருகியதால் ஏற்படட மன நிறைவு சுமார் 15 நிமிடத்திற்குத்தான் நீடிக்கும். அப்புறம் மறுபடியும் தாகம் எடுப்பது போல் தெரியும். இந்த உணர்வு ஏற்படவில்லை என்றால், தேவைக்கு மீறித் தண்ணீர் குடித்துவிட்டோம் என்று அர்த்தம். இதனால் இயல்பு நிலையை மீறி, உடலின் திரவங்கள் நீர்த்துப் போய்விடுகின்றன. அப்போது ஒரு வேலையும் செய்ய முடியாமல் சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றுவிடுவோம். பிறகு இயல்பு நிலை திரும்பிவிடும்.

தாகத்தைத் தணிக்கத் தண்ணீர்தான் பருக வேண்டும் என்றில்லை. பழச்சாறு போன்ற பானங்களையும் அருந்தலாம். ஆனால், இவற்றுக்கும் தண்ணீருக்கும் வேறுபாடு உண்டு. இந்தப் பானங்களில் கலோரிகள் உண்டு. நமக்குத் தேவையானதை விட அகதி கலோரிகள் இந்தப் பானங்களில் இருக்கலாம். ஆனால், தண்ணீர் 'ஸீரோ கலோரி' திரவம். அதாவது தண்ணீரில் கலோரி ஏதும் இல்லை.

இது தவிர, தோலை ஈரமாக வைத்துக் கொள்ளும் ஆற்றல் தண்ணீருக்கே உண்டு. நாள் தோறும் 8 முதல் 10 டம்ளர் வரை தண்ணீர் குடிப்பது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.

# துரோகம் ரத்துகிறது!




அங்கம் 15

அவனுக்கு வியர்த்தது.

"பறிகொடுத்த மாதிரி இருக்கியே! குடும்பத்திலே கஷ்டமா? அம்மனுக்குத் தலையைக் குடு, சரியாப் போயிடும்" என்றார்.

கோவில் பக்கத்தில் ஏராளமான புது மொட்டைகளைப் பார்த்தபோது தலையைக் குடுப்பதன் அர்த்தம் விளங்கியது.

தலை இருந்தால் அடையாளம் தெரிகிறது. அதை எடுத்து மீசை வைத்தால்......

மொட்டை போட்டான். மீசை வைத்தான்.

அம்மா, தாயே! என்னைக் காப்பா....

கிழவர் திரும்பச் சந்தித்தார். மொட்டையைப் பார்த்ததும் ஆச்சரியம்! ஒரு பேச்சுக்குக் கொடுத்த மதிப்பு அவரை அக்கறையாக்கியது. "நம்ப வீட்டுக்குச் சாயங்காலம் போறோம். நீயும் வரே!" என்றார்.

மயிலைக்காளை பூட்டிய வண்டியில் போனார்கள். கிராமம் ரொம்பப் பழசு.

வீட்டில் கிழவர், கிழவி, நாற்பதுகளில் இரண்டு சோம்பேறிப் பிள்ளைகள், அவர்களுடைய சீக்கிரம் கிழமான மனைவிகள்! ஒரே ஒரு சிறுசு! 10+2+2

மாடு, தொழுவம், வண்டி, இவற்றைச் சுற்றி அவனுக்கு வேலை.

அன்று ராத்திரி வாசலில் வைக்கோல் மெத்தையில் படுத்து அசை போட்டான். ஒரு வாரம் ஓடிப்போய்விட்டது. தினமும் பேப்பர் அவனைத் திடுக்கிட வைத்துக்கொண்டே இருந்தது. அம்மன் கோவில் பாமரனை ஏமாற்றித் தப்பியதிலிருந்து ஒவ்வொரு செய்தியாக......

அவன் மனைவி தங்கியிருந்த ஊரில் போய் போலீஸ் விசாரித்ததையும் அவள் இல்லாததையும் விவரமாக வெளியிட்டிருந்தார்கள்.

சண்முகாத்தா கூட, "போர்த்திக்கிட்டே ஒருத்தன் சாப்பிட்டான். திருட்டு முழி இருந்தது. அவனாகத்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லியிருந்தாள்.

அறியாப் பொண்ணு வேறு, அவன் அந்த ராத்திரி அகாலத்தில் பேப்பர் வாங்கி பரபரப்பாக ஓடிவிட்டதைக் கூறியிருந்தாள்.

விசாரணை போகிற போக்கைப் பார்த்தால் இங்கே அவன் முதுகடியிலேயே போலீஸார் வந்து நின்றுவிடுவார்கள் என்று தோன்றியது.

போகும் வழியெல்லாம் தடயங்களாக அவன் விட்டுப் போவது ஆச்சரியமாக இருந்தது.

கடைசியில் இரண்டு -நாட்களாக போலீஸ் விளம்பரமும் ஒன்று வந்து கொண்டிருந்தது.

அவனைப் பிடித்துக் கொடுத்தால் ஐயாயிரம் ரூபாய்!

"நமக்கு எந்த ஊரு?"

தலையாரி முதலியார் கேட்டார்.

"மதுரைங்க!"

"பேசறதிலே மதுரை இல்லியே!"

"அதுவா? இந்தப் பக்கம் ரொம்ப நாளா இருந்துட்டேன் அதான்.!"

"மொட்டை எப்போ போட்டீங்க?"

"திருவிளாவிலே."

'ழ'வை உச்சரிக்காமல் வேண்டுமென்று பட்டிக்காட்டுத் தனத்தைக் காண்பித்தான்.

"இதுக்கு முன்னால் என்ன வேலை பார்த்தீங்க!"

"தண்ணீ இழுத்துக்கிட்டிருந்தேங்க, ஒரு பெரிய மனுஷன் வீட்டிலே."

தலையாரி பேச்சிலே சூவன்னா தூனா தெரிந்தது. ஓசை போடாமல் பொடி வைக்கிறார். ஐயாயிரம் இழுக்கிறதோ!

மறுநாள் மாலையில் வயக்காட்டில் நாலைந்து நபர்கள் கண்ணில் விழுந்தார்கள்.

ஏற அவன் அங்கு வருவதற்கு காத்திருந்தது போல் இருட்டு அவனை மூடிக்கொண்டது.

ஒரு தூக்க நேரத்து பஸ்!

அந்த இரவு நேரத்தில் பஸ்ஸ"ம் தூங்கியது. பேச்சு மூச்சு இல்லை.

யாரும் கவனிக்கவில்லை. பத்திரமாகத் தூங்கலாம்! ம.்.ப்டி போலீஸ்காரர்கள் ஏமாந்ததைத் திரும்பத் திரும்ப நினைத்துச் சிரித்து, சிறிது உல்லாசமாகத் தூங்கினான்.

ரொம்ப நேரத்துக்குப் பின் கண் விழித்தது. பஸ் எங்கேயோ ஓர் ஊருக்குள் போய் பஸ் ஸ்டாண்டைத் தேடிக்கொண்டிருந்தது.

பெரிய டவுனில் இறங்குவதை விட இந்த ஊரில் இறங்குவது மேல்! மணியும் நாலரை!

ஸ்டாண்டில் இறங்கியதும் இரண்டு தூக்கக் கலக்கச் சிறுவர்களும் ஒரு நாயும் ஓடி வந்தார்கள். அவனது வெறும் கையைப் பார்த்ததும் திரும்பி அவசரமாகப் படுக்கப் போனார்கள்.

குருவுக்குத் தூக்கம் மிச்சம் இருந்தது. ஸ்டாண்டின் கூரை போட்ட வெறுமை காலை இழுக்க போய்ப் படுத்துக்கொண்டான்.

காலை கலகலத்ததும் உதறியடித்து எழுந்தான்.


மீசையைத் தொட்டுப் பார்த்தான்.

நேற்றைக்கு விட வளர்ந்திருந்தது. வரவர நல்லா கொழுத்துவிட்டது. அப்படியே கன்னத்தை மறைத்துவிட்டால் அதன் சப்பை தெரியாது. தோற்றம் மாறிவிடும்.

பரபரத்து தூரத்தில் பார்த்தான்.

கிராமத்து ரோடு பிடிக்காமல் தூரத்தில் ஜீப் சமர்த்தாக நின்றுகொண்டிருந்தது.

அப்படியே தென்னந்தோப்பில் நண்டு போல் ஸைட் நடை போட்டான். தென்னை மரங்கள் சாமர்த்தியமாக அவனை மறைத்தன. அடுத்தது வாய்க்கால்! வாய்ப்பாக கோரம்புல்லை நீட்டி வைத்திருந்தது.



பள்ளத்தில் இறங்கி, வெகு தூரம் மேற்கே போய், வாழைத் தோட்டங்களை ஊடுருவி, அடுத்த ஒற்றையடிப் பாதையில்

இப்படி ஊர் ஊராகப் போனால் கூட போலீஸை எத்தி வாழலாம். ஆனால் சாப்பிட வேண்டும், படுக்க வேண்டும்... அவைதானே கஷ்டம்.

ஸ்டாண்ட் பக்கத்தில் பஜார் தெற்கு வடக்கில் திருக்கிக்கொண்டு போனது.

வசந்த விலாஸ் காபி கிளப் கமகமத்தது.

சாப்பிட்டுவிட்டுக் கறாராக வெளியேறினான்.

பத்து மணிக்கு அந்த பஜாரில் ஓர் ஊர்வலம் வந்தது. ஐயப்பசாமியோ, சுப்பிரமணிய சாமியோ! அழகாக எல்லோரும் நெற்றிக்கிட்டிருந்தார்கள். சிலர் அழகாகத் தாடி வளர்த்திருந்தார்கள். சிலர் மார்பைத் திறந்து போட்டுக்கொண்டு.....

கடைசியில் ஒட்டாமல் ஒருவன் போனான். குருவின் பார்வை அவன் மேல் விழுந்தது.

நடையை எங்கேயோ பாக்த்தது. குட்டையான கையையும்தான். முகத்தில் தாடி என்று சொல்ல முடியாத வளர்த்தி முகத்தைப் பார்த்தால், அட, என்னைப் போல இருக்கிறானே?

சுருக்கென்று மூலையில் ஒரு திரி பற்றியது. அந்த வேகம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. பாய்ந்தான்.... "டேய், நீயாடா?"

அந்த வளர்த்தி திடுக்கிட்டான். பாய்பவனைச் சந்தேகத்தோடு பார்த்தான். பிறகு திடீரென்று அடுத்த தெருவுக்குள் பாய்ந்தான்.

குரு அவன் பின்னால் பாய்ந்தான். காலும் கையும் பரபரத்தது.

"டேய்!" என்று இரைந்துகொண்டு ஓட்டமாய் ஓடினான்.

தெரு நிர்மலமாய் இருந்தது. கிழவி கீரை விற்றுக்கொண்டிருந்தாள். இரண்டு பாலகர்கள் 'இஸ்கூல்' போய்க்கொண்டிருந்தார்கள். அவன் ஓட இவன் ஓட....

தெரு பின்னே பார்த்து ஓடியது. முருங்கை மரங்கள் விருட்டென்று பின்னால் பாய்ந்தன. ஒரு டஸ்ட் - பின் 'உய்ய்' என்று பின்னால் ஓடியது. அந்தத் தெருவின் தரை கன்வேயர் பெல்ட் போல் 'கிச்' சென்று பின்னால் பறந்தது.

"டேய், சூரியகுமார்! ஓடறான் ஓடறான், பிடி, பிடி......."

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

தெருப் பிரயாணிகள் நூதனமாகத் திரும்பிப் பார்த்தார்கள். இரண்டு நாய்கள் 'லொள் லொள்' என்று இரைந்தன. ஒரு குப்பை வண்டி பாதி திரும்பி நின்றது.

"டேய், சூரியகுமார்! ஓடறான் ஓடறான், பிடி, பிடி!"

இதே தொடர் காட்சிகள் இன்னும் இரண்டு தெருக்களில் தொடர, கடைசியில் சூரியகுமார் சரக்கென்று ஒரு சந்தில் நுழைந்தான்.

(துரோகம் துரத்தும்......)




# அழகு + அழகு


இந்தோனேசியா நாட்டின் ஜகர்த்தா நகரில் "மிஸ் இந்தோனேசியா" அழகிப் போட்டி நடைபெற்றது. இதில் டியான்கிருஷ்ணா முதலிடம் பிடித்து வெற்றி பெற்றார்.

இந்த அழகிப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக "மிஸ் எகிப்து" அழகி ஹிபா-எல்.சீசி வந்திருந்தார். இரு அழகிகளும் அங்கு நடந்த விருந்தில் கலந்துகொண்டு போட்டோவுக்கு போஸ் கொடுத்தார்கள்.

அழகிகளின் ஒய்யார நடையில் ஒடிந்து விழுந்தது பார்வையாளர்கள்தான். அழகிகள் அதைக் கூட அலட்சியம் செய்ததுதான் அழகு.

# இரகசிய முத்தம்





இப்படி முத்தம் கொடுப்பவர் யார் தெரியுமா? விலையுயர்ந்த பிரபலமான மனிதர். ஈரானிய அரசுக் கைதுசெய்யக் காத்திருக்கும் இவர் மரண தண்டனை விதிக்கப்பட்டவர். இவரும் ஒரு முஸ்லிம். ஆனால் இவர் எழுதிய நாவல் ஒன்று இஸ்லாத்தைக் கேலி செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவரைக் கொல்பவர்களுக்குப் பெரிய சன்மானம் வழங்கப்படும் என்று ஈரானிய அரசு அப்போது அறிவித்திருந்தது. ஆனால் இவரோ இந்தியாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நடிகையான பத்மா லஷ்சுமியை நான்காவது மனைவியாக திருமணம் செய்து அமெரிக்காவில் வாழ்கிறார். சல்மான் ருஷ்தி என்ற இந்த எழுத்தாளர் எப்போதும் கொல்லப்படலாம். முத்தம் கொடுக்கும்போது சத்தமில்லாமல் இருப்பது நல்லது. இவரது திருமணம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. பத்மாலஷ்சுமி அமெரிக்கப் படங்களில் நடிக்கிறார்.

# 22

# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்



ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் மிஸ்ஸஸ் போஸ்ரோமும் ஆலட்மேன் ஆகிய இருவரும் தொடர்ந்து பட்டப்படிப்புக்காக எங்கு செல்லப் போகின்றீர் நீர் என்று என்னிடம் வினவிக் கேட்டுக் கொண்டிருந்தனர். அத்துடன் உண்மையில் நான் எங்கு செல்வதென்று முடிவெடுக்காமல் இருந்து கொண்டிருந்தேன். ஆனால், அவர்கள் சிபார்சு செய்ததற்கிணங்க வெலஷ்லி, மற்றும் ஸ்மித் பல்கலைக்கழகங்களில் இரண்டுக்கும் விண்ணப்பம் செய்வதற்கு முடிவெடுத்தனர். இந்த இரண்டு பல்கலைக்கழகங்களும் புகழின் உச்சியில் இருந்து கொண்டிருந்தன. இந்த இரண்டு பல்கலைக்கழகங்களிலும் விரிவான பாடத்திட்டங்கள் மற்றும் நான்றாக ஒழுங்கமைக்கப்பட்ட பெண்கள் கற்கும் சிறந்த பல்கலைக்கழகங்களாக திகழ்ந்தன.

இந்த பல்கலைக்கழகங்களில் ஏதாவது ஒன்றுக்கு சென்று எனது பட்டப்படிப்பை தொடருவதன் மூலம் நான் நன்றாக எனது கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்தமுடியும் என்று எனது பெற்றோர்களும். மற்றும் எனது கல்லூரி விரிவுரையாளர்களும் எனக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள். என்னை மேலும் மேலும் பட்டப்பின்படிப்புக்கு பதிவு செய்து கற்பதற்கு ஆற்றுப்படுத்தி, நெறிப்படுத்தினர். அத்துடன், எனது கல்லூரியில் வாரத்தில் விரிவுரை நாட்களான அந்த ஐந்து நாட்களும் முழுமையாக விரிவுரைகளில் கலந்து கொண்டு என்னை நெறிப்படுத்திக் கொள்வதோடு மற்றைய விடுமுறை நாட்களை எனது தோழிகளுடன் சிறப்பான முறையில் நல்ல பொழுது போக்குகளில் கழிப்பதற்கு என்னை நான் பழக்கப்படுத்திக் கொண்டேன். ஆனால் இதுவரைக்கும் இந்த இரு கல்லூரிகளில் எதற்கு அனுமதி எடுத்து செல்வது பற்றி நான் தீர்மானம் எடுக்கவில்லை. எனது பெற்றோர்களுடன் தொடர்ந்தும் முழுமையாக மந்திராலோசனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அதேவேளை, நான் தற்பொழுது உயர்கல்வி கற்கும் எனது மிட்வெஸ்ட் கல்லூரியிலிருந்து ஏற்கனவே நான் தெரிவு செய்து பட்டப்பின்படிப்புக்காக செல்லவிருக்கின்ற அந்த இரண்டு பல்கலைக்கழகங்களில் மிசிகன் மாநிலத்தில் ஸ்மித் பல்கலைக்கழகத்திற்கு எமது கல்லூரியிலிருந்து சிறப்பாக சித்தியடைந்த முதுநிலை மாணவிகளுக்கு அழைப்பு வந்திருந்தது. அதில் நானும்



ஒருத்தி ஆதலால். அந்த அழைப்பை ஏற்று அங்கு நடைபெற்ற ஒரு பெரிய Honors Program ஒன்றுக்கு என்னையும் அழைத்திருந்தார்கள்: அந்த நிகழ்வுக்கு நான் அங்கு சென்று கலந்து கொண்ட அந்த நினைவலைகளை தற்பொழுது நிதமும் மீட்டிப்பார்க்கின்றபொழுது நான் மிகவுமே புளகாங்கிதம் அடைகிறேன். உண்மையில் அந்த நிகழ்வு மிக உன்னதமான நிகழ்வாக எனக்கு அமைந்திருந்தது. சிறந்த பல்வேறு படிப்பினைகளையும், அனுபவங்களையும். அந்த நிகழ்வு எனக்குத் தந்தது. அத்துடன், Michingan இனில் அமைந்திருந்த அந்த பல்கலைக்கழக வளாகம் மிகப் பிரமாண்டமாக அமைந்து காணப்பட்ட அதேவேளை, இந்த Honors Program நடைபெற்ற ஆரீாதணை மண்டபம், மிகமிக அழகாக காட்சிதீந்தது; அதேவேளை வெஷ்லி பல்கலைக்கழகம் சிகாவோவில் அமைந்திருந்தது. அதுவும் ஒரு பிரமாண்டமான பல்கலைக்கழகம்தான் இந்த இரண்டு பெரிய பல்கலைக்கழகங்களுக்குள் எதற்கு என்து பட்டப்பின்படிப்பை தொடர்வதற்கு போவதென்று உறுதியான முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது.

(இன்னும் வரும்...)

---

*இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.*

*ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களி னூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.*

*19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத் துகிறது.*

## (டபிள்யூ. ஜி. கிரேஸ்)




(1848–1915) என்பவர் இங்கிலாந்தில் மிகப்புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர். கிரிக்கெட்டில் இவர் சகலகலாவல்லவர் அசகாயசூரன் கிரிக்கெட்டில் புகழின் உச்சிக்கே சென்றவர். எந்தளவுக்கென்றால் அவர் தனது 59வது வயதுவரை கிரிக்கெட் விளையாடினார். இதுவரைக்கும் அவரது உலக சாதனை முறியடிக்கப்படவில்லை. 1865ம் ஆண்டிலிருந்து. தனது கிரிக்கெட்டை ஆரம்பித்த அவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 54211 ஆகும். அவர் பெற்ற மொத்த விக்கெட்டுக்கள் 2808ஆகும். உண்மையிலேயே இவர் துடுப்பாட்டம், பந்து வீச்சு. களத்தடுப்பு எல்லாவற்றிலும் மிகத் திறமையாக இருந்ததினால்தான் இப்போறப்பட்ட புகழின் உச்சிக்கே உயரமுடிந்தது. அவரது கடைசி கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தின் கூணவான்களின் "செரிய்" என்ற அணிக்கெதிராக ஒரு திங்கட்கிழமை "Easter"ல் நடைபெற்றது. அதில் இவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 25. பெற்ற மொத்த விக்கட்டுக்கள் 15 ஆகும். இவ்வாறு கிரிக்கெட்டில் அழியாப் புகழ்பெற்ற டபிள்யூ ஜி. கிரேஸ் என்பவர் கடைசியில் தனது 67வது வயதில் 1915ம் ஆண்டு மரணமடைந்தார்.

## ஒரு மறக்கப்பட்ட உருவம்



புளோரன்ஸ் நைட்டிங்கேர்ல் (1820–1910) இவர் உலகப்புகழ் பெற்ற சிறந்த தாதி. இவர் நோயாளிகளை கவனிக்கும் தாதி செயற்பாடுகளில் தனது பிரதேசமான Crimeaஇல் மிகப்புகழின் உச்சிக்கே வந்தவர். இவருக்கு Freedom of the City of London என்ற பட்டம் பரிசாக வழங்கப்பட்டது: இந்தப் புகழ்மாலை இவருக்கு பரிசாக கிடைத்தது. 16-03-1908ம் ஆண்டு அவருடைய 87வது வயதிலாகும்.



## ஜக் ஜோன்சன்

குத்துச்சண்டை வீரர் ஜக் ஜோன்சன் உலகில் முதலாவது கறுப்பின அதிபரான குத்துச் சண்டை வீரர் ஆவார். இவர் அவுஸ்திரேலியாவின் "சிட்னி" நகரில் நடைபெற்ற உலக அதிபரான குத்துச் சண்டைப் போட்டியில் வெள்ளைக்காரன் Tommy என்பவரை வெற்றிவாகை சூடி முதலாவது கறுப்பின குத்துச் சண்டை வீரர் என்ற புகழைப்பெற்றார். இந்தப் போட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 22.12.1908ல் நடைபெற்றது.

## போர்த்துக்கல் மன்னர் படுகோலை ~1~02~1908)



மன்னர் காலோஸ் - ஐ என்பவரும் அவருடைய முடிக்குரிய இளவரசரும் லூயிஸூம் Lisbon இல் வைத்து 1ம் திகதி பெப்ரவரி மாதம் 1908ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு இவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்பு இருவரும் படுகொலை செய்யப்பட்டதன் பின்பு அவருடைய இளைய புத்திரன் (மகன்) 19வயது நிரம்பிய Don Manuel என்பவர் பிற்காலத்தில் மன்னரானார்.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜே.ஆரின் இரட்டைப் போக்கு

**We too won't lose much as not much was achieved through these meeting.**
**It is a case of eating their sandwiches and drinking their tea.**
**-Amirthalingam.**

"ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றது?" இந்தக் கேள்விக்கு அமிர்தலிங்கம் அளித்த பதில் இதுதான்: அவர் மீது கொண்டிருக்கும் காதலால் நாம் அவர்களுடன் பேச்சு நடத்தவில்லை. மாறாக எமது மக்கள் மீது கொண்டிருக்கும் பற்று, பாசம் என்பவை காரணமாகவே இப் பேச்சுக்களை நடத்துகின்றோம். ஜே.ஆர்.அரசுடன் பேசுகின்றமை மூலமாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடிகிறது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளைச் செயற்படவைக்க முடிகிறது. இவை சுயாட்சியை உருவாக்கும் மூலக் கூறுகளாக உள்ளன. தமிழர்கள் தமது விவகாரங்களைத் தாங்களே கையாள்வதற்கான ஆரம்பப் படியாக இதனைக் கொள்ள முடியும்.

## 73 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

உலகத் தமிழர் மாநாட்டின் பேராளர்களது நம்பிக்கையை அன்று அமிர்தலிங்கம் வென்றுவிட்டார். தமிழீழ நிழல் அரசு அமைக்கும் தீர்மானம் எடுப்பதை உலகத் தமிழர் மாநாடு ஒத்திவைத்தது. எனினும் தமிழீழ விடுதலைக் கவுன்சில் ஒன்றை அமைக்கவும், இலங்கையில் தனிநாடு அமைக்கும் இலட்சியத்தை முன்னெடுக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய அமிர்தலிங்கம், தமது விஜயம் பற்றி விளக்குவதற்கு தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் ஒரு செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். அதில் அரசாங்கத்துக்கும், கூட்டணிக்கும் இடையே நடந்துவந்த மாதாந்தச் சந்திப்புக்கள் முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிவித்தார். "அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணியின் நிலைப்பாடு என்ன?" என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அமிர்தலிங்கம் எதிர்மறையாகப் பதில் அளித்தார். இது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் கலந்துரையாட வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டிற்குப் பின்னர் தனிப்பட்ட முறையில் பேசிய அமிர்தலிங்கம், கூட்டணியைத் தள்ளிவைக்க ஜெயவர்த்தனா தீர்மானித்துள்ளதாகவும், பௌத்த சிங்கள வாக்குகளைப் பெறுவதற்காகவே அவர் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதுதான் ஜெயவர்த்தனாவின் குறிக்கோள் என்பதைப் புரிந்து கொண்டிருப்பதாகவும் அமிர்தலிங்கம் தெரிவித்தார். அத்துடன் இந்தச் சந்திப்புக்களில் கலந்துகொண்டதன் மூலமாக நாமும் பெரிதாக எதையும் பெற்றுக் கொள்ளவில்லை; ஆனால் எதையும் இழந்து விட்டதாகவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

ஆகவே, பதினொரு மாதங்கள் நீடித்த பேச்சுக்கள் மிகச் சிலவற்றைச் சாதித்ததுடன் முடிவுக்கு வந்தது எனலாம். 1977 மற்றும் 1981 கலவரங்களில் பாதிப்புற்ற அரசாங்க ஊழியர்கள் நிவாரணம் பெறவும், வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு தமிழ்ப் பொலிஸார் கூடுதலான அளவில் இடமாற்றம் பெறவும், வவுனியா மாவட்டத்தின் சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், அநுராதபுரத்தினுள் செல்வதை தடுக்கவும் முடிந்தது. ஆனால் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு நிதி பெறுவதற்கும், அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் இப் பேச்சுக்கள் பயன் அளிக்கவில்லை.

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

'ஆசியாவின் மூத்த குள்ள நரி' என்று திருமதி இந்திரா காந்தி வர்ணித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைப் பற்றிக் கூட்டணியினர் நன்கு தெரிந்துகொள்ள இப் பேச்சுக்கள் உதவின என்று கூறினால் மிகையாகாது. இதற்கு அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டிய ஒரு சம்பவம் தகுந்த உதாரணமாகும். மாதாந்தச் சந்திப்பு ஒன்றின்போது கூட்டணியினர், அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது போல தமிழ் மொழி அமுலாக்கம் செய்யப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டி முறைப்பட்டனர். தமிழ் மொழி அமுலாக்கம் மிகவும் தாமதமாகவும், கடினம் நிறைந்ததாகவும் இருப்பதாக ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டார். தமிழ் மொழி அமுலாக்கலுக்கு ஒரு அமைச்சர் முட்டுக்கட்டை போடுவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் 'திரு.சூசைதாசனைக் கடனாகத் தாருங்கள். அவரைத் தமிழ் மொழி அமுலாக்கலுக்கான அமைச்சராக்கி விடுகிறேன்' எனவும் ஜெயவர்த்தனா கூறினார். இதனை அமிர்தலிங்கம் வன்மையாக மறுத்ததுடன், ஜே.ஆரின் இக் கேள்வி அவரது மனைவியை சிறிது காலத்திற்குத் தரும்படி கேட்பதற்கு ஒப்பானது எனவும் சூடாகத் தெரிவித்தார். கூட்டணியினர் தன்னை ஆதரிப்பதாக உலகுக்கு காட்டிக்கொண்டு போராளிகள் அமைப்புக்களுடன் மோதலில் ஈடுபடுவதே ஜே.ஆரின் திட்டமாக இருந்தது என்பதை அமிர்தலிங்கம் நன்கு உணர்ந்து இருந்தார். இதனையே பதினொரு மாதப் பேச்சுக்களின் மூலமாக ஜே.ஆர்.சாதித்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டணியினருடனான பேச்சுக்களைப் பயன்படுத்தி தீவிரவாதிகளுக்கு இருந்த தள ஆதரவைப் பலவீனமாக்க அவர் முயற்சித்தார். ஆனால், கூட்டணிக்குப் பயனளிக்காத எந்த விடயங்களிலும் விட்டுக்கொடுக்க முன்வராமை காரணமாக தீவிரவாதம் வளரவே வழி வகுக்கப்பட்டது.

அக்டோபர் 1982இல் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணியின் ஆதரவை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நாடியிருந்தார். ஆனால், வெளிப்படையாக அதனைக் கோருவதன் மூலமாக பௌத்த சிங்களவர்களின் வாக்குகளை இழந்து விடவும் அவர் விரும்பவில்லை. இந்த விதமான இரட்டை அணுகுமுறையின் மூலமாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு சங்கடமான நிலைமைக்குள் தள்ளப்பட்டனர். ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பைப் புறக்கணிக்கப் போவதாகக் கூட்டணியினர் அறிவித்துவிட்டு ஒதுங்கிக்கொண்டனர்.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் கலந்துகொள்ளத் தேவையில்லையென கூட்டணியின் சார்பில் அமிர்தலிங்கம் அறிக்கை வெளியிட்டார். ஆனால், இந்தத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டார். தமிழ் மக்கள் தனக்கு வாக்களிப்பதைத் தடுப்பதற்காகவே கூட்டணியினர் இவ்வாறு புறக்கணிப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக குமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தினார். குமார் பொன்னம்பலத்திற்கு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மறைமுக அனுசரணை இருப்பதாக கூட்டணியினர் விமர்சித்தனர்.

1982இன் ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலத்தைப் போட்டியிட வைத்தமையின் மூலமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தினார். அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்ற கூட்டணியின் கருத்தை நிராகரிக்க வைத்ததுடன், தமிழ் வாக்குகளில் கணிசமான தொகை எதிர்க்கட்சிக்குச் செல்வதையும் தடுத்தார்.

இந்தத் தேர்தலில் தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் கணிசமான தமிழர் வாக்குகள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கே கிடைத்தன. வட பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தை விடவும் அதிகமான வாக்குகள் சுதந்திரக் கட்சி வேட்பாளரான ஹெக்டர் கொப்பேகடுவவுக்குக் கிடைத்தன. 1982 அக்டோபரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து கூட்டணிக்கும், ஜே.ஆருக்கும் இடையிலான உறவில் மீண்டும் விரிசல்கள் ஏற்பட்டன. இவ்வாறு விரிசலடைந்ததைக் காட்டும் இரு அம்சங்கள் இங்கு குறிப்பிடத் தக்கவை. சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிக்க ஜே.ஆர். முடிவு எடுத்தமை தொடர்பான அதிருப்தி முதலாவது. வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து காலமான திருநாவுக்கரசுவின் இடத்திற்கு வெலிக்கடைச் சிறையிலிருந்த குட்டிமணி எனப்படும் செல்வராசா யோகச்சந்திரனை கூட்டணி நியமனம் செய்தமை இரண்டாவது ஆகும்.

'ஆசியாவின் மூத்த குள்ள நரி' என்று திருமதி இந்திரா காந்தி வர்ணித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைப் பற்றிக் கூட்டணியினர் நன்கு தெரிந்துகொள்ள இப் பேச்சுக்கள் உதவின என்று கூறினால் மிகையாகாது.

1977இல் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஜே.ஆர்.தீர்மானித்தார். பாராளுமன்றத்தில் ஐ.தே.க.வுக்கு இருந்த ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையைத் தொடர்ந்து பேணுவதே அவரது குறிக்கோளாக இருந்தது. சர்வசன வாக்கெடுப்பு ஒன்றில் வெற்றி பெறுவதன் மூலமாக தற்போது பதவி வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப் பதவியில் நீடிக்க முடியும் என்று ஜே.ஆர்.வாதிட்டார். கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜே.ஆரின் சர்வசன வாக்கெடுப்பு திட்டத்தை வன்மையாக எதிர்ப்பதாகக் காட்டிக்கொண்டனர். பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிந்ததும் தத்தம் பதவிகளைத் துறக்கப் போவதாகக் கூறி திகதி இடப்படாத பதவி துறப்புக் கடிதங்களை கட்சித் தலைவரான அமிர்தலிங்கத்திடம் வழங்கினர். எனினும் சர்வசன வாக்கெடுப்பு யோசனையை நிராகரிக்கும் எதிர்க்கட்சிகளுடன் பொது வேலைத்திட்டத்தில் ஈடுபடவும் கூட்டணியினர் மறுத்தனர்.

(தொடர்ந்து வடியும்....)




**வணக்கம்! வணக்கம்! வணக்கம்!**

ஒவ்வொரு வாரமும் பலவிதமான புதினங்களையும் பேசிக்கொண்டிருக்கிறோம். புதினங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. இவ்வாரமும் என்னென்ன புதினங்கள் என்று பார்ப்பதற்கு முன் தபாலட்டை மூலமாக எமக்கு கருத்துச் சொல்பவர்களுக்கும் பாராட்டுத் தெரிவிப்பவர்களுக்கும் எமது நன்றிகள்.

**சின் :-** ஜனாதிபதி குமாரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து விலகி விட்டாரே!

***மன் :-*** *என்ன ஆச்சரியமாகக் கேக்கிறீர். அவா அந்தப் பதவியிலேயே தொடர்ந்தா நல்லதா, இல்லாவிட்டால் அதை விட்டு விலத்தினது நல்லதா என்கிறீரா? ஜே.வி.பி.க்காறர் எதையாவது கேட்கும்போது தலைமைப் பொறுப்பில இருக்கேக்க ஒரு முடிவுக்கு வர முடியவில்லையாம். இனிமேல் தனியாச் சுதந்திரமா முடிவெடுக்க முடியும் எண்டு அவா நினைக்கக் கூடும். அது மட்டுமல்லாம அது சமாதான முயற்சிகளுக்கும் பாதகமில்லையாம். அதிலதான் நோர்வேக்காறரையும் உடன கூப்பிட்டிருக்காவே! புரியல்லையோ?*

**சின் :-** வேகத்தோட கொஞ்சம் விவேகமும் இருந்துதெண்டால் நல்லதுதான். கடந்த ஏப்ரலில நடைபெற்று முடிஞ்ச கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில யாழ்ப்பாணத்தில சுமார் 60 மாணவர்கள் திறமை சித்தியான 3-ஏ யைப் பெற்றுள்ளனரே.

***மன் :-*** *அரசியல் பிரச்சினைக்குள்ளால இதை மறந்து போடுவீர் எண்டு நினைச்சன். அந்தக் காலத்திலிருந்தே கல்வியில கெட்டிக்காரங்கள் நாங்கள்தானே! கொஞ்சக் காலம் பிசகுபட்டிட்டுது. திரும்பவும் பிள்ளையள் படிப்பில ஆர்வம் காட்டத் தொடங்கயிருக்குதுகள். இனியெண்டாலும் ஆள் பிடியள், பிள்ள பிடியள் தொல்லையில்லாமல் பிள்ளையளை ஒழுங்காப் படிக்க விட்டால் இதை விடவும் திறமைச் சித்திகள் பெறுவினம்.*

**சின் :-** பிள்ளைகளும் அது இதெண்டு திரியாம ஒழுங்காப் படிக்கவும் வேணும். பிள்ளையள் ஒழுங்காப் படிச்சு வேலை தேடி இடம் பெயர்ந்திடுவாங்கள் எண்ட பயம் பல பேருக்கு இருக்கு.

கொழும்பில இனி இரவு நேர ரோந்து நடவடிக்கையில பொலிஸாரும் பொலிஸாருக்குத் துணையாக இராணுவமும் ஈடுபடப்போகினமாமே....!

***மன் :-*** *புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டரை வருடம் முடிஞ்சிட்டுது. இந்தக் காலப் பகுதிக்குள்ள கொழும்பில செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்து முடிச்சிட்டினம். தாக்குதலை நடத்த வேண்டியவை கொழும்பில சிறு சிறு கடைகளிலயும் வர்த்தக மையங்களிலயும் செட்டில் ஆகிவிட்டினம். இனி ரிமோட் கொன்ரோலில கொழும்பினுடைய பாதுகாப்பு தவிச்சுக்கொண்டிருக்கு. இறுதிக் கட்டத்திலை எடுத்த இந்த நடவடிக்கை பிரயோசனமானதில்லை.*

**சின் :-** அப்பிடியெண்டால் இரண்டரை வருடத்துக்குள்ள கொழும்புக்கு வந்தவயளைக் கவனிக்கச் சொல்றீங்களாக்கும். அது நம்முடைய வேலையில்லையே. என்ன செய்ய....?

மட்டக்களப்புச் சிறைச்சாலையில கருணா அணியைச் சேர்ந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரே!

***மன் :-*** *சிறைக்குள்ள படுகொலை எண்டதுமே மிக நிதானமாக திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்குது எண்டதையும், இதில் ஒருவருக்கும் மேற்பட்டவையளின்ர தொடர்பிருக்கெண்டதையும் புரிஞ்சுகொள்ள முடியும். உப்புத் திண்டவன் தண்ணி குடிக்கத்தானே வேணும்.*

**சின் :-** இப்பிடிப் பாத்தால் இன்னும் பல கொலைகளோடு தொடர்புடைய பலர் கைது செய்யப்பட வேண்டியிருக்கு எண்டிறியள். கைதாகி என்ன? தப்பிக்க வழியிருக்கே. எங்கட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.மார் இராஜதந்திர ரீதியாக ஒழுங்காத் திட்டமிட்டுச் செயற்படுகினமில்லை எண்டும், அதற்காக அவையளுக்கு அழுத்தம் கொடுக்க வேணும் எண்டும் சில புத்திஜீவிகள் யோசிக்கினம் எண்ட தகவல் தெரியுமோ.

***மன் :-*** *தெரியும்...தெரியும்...உவையள் உருப்படியான ஆக்களில்லை எண்டு. சொந்தப் புத்தியுமில்லை, சொல்லிச் செய்யும் வல்லமையுமில்லை. தெரிவு செய்யப்பட்ட விதமே ஒழுங்கீனமெண்டால் இவயள் ஒழுங்காகவே இருப்பினம்? என்னடாப்பா இது. முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுறீர்.*

**சின் -** எல்லாம் ஒரு நப்பாசைதான். ஏறாவூரில பெண்கள் சுடப்பட்டிருக்கினம். கொலைகளுக்கான காரணங்கள் கருணா அணியோட தொடர்பாம். மகனைக் காப்பாத்த தாயார் தன்ர உயிரைக் கொடுத்தாவாம் எண்டு எங்கட ஊடகங்கள் செய்தி போட்டிருக்கே.

***மன் :-*** *கொலைகளுக்கு நியாயம் தேடிக் கண்டுபிடிக்கிற புதினமான கலாசாரம் வாழிற காலம் இது. கருணா அணியோட தொடர்பெண்டு கண்டால் மட்டு-அம்பாறையில வசிப்போரையும் சுட்டெல்லே அழிக்க வேணும். அதுவும் எதிர்காலத்தில நடக்கலாம். சித்தாண்டியைச் சேர்ந்த வெள்ளையன் சித்திரா (52வயது) கொல்லப்பட்டிருக்கிறார். வட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவையளை அழிக்கிற திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கோ என்னவோ!*

*ஆனால் உது நல்லதில்லை. கூட இருந்து போராடிய போராளிகளை துரோகியாக்கி கொலை செய்யிறதையே ஜீரணிக்க முடியல்லை. குடும்ப உறுப்பினர்களைக் கொலைசெய்யிறதெண்டது ரொம்ப ஆபத்தானது. இனி அவையளும் உங்கட உறவுகளை சுடப்போகினம் எது நடந்தாலும் நல்லதில்லை.*

**சின் :-** அட எங்கட விடுதலைப் போராட்டம் இந்தக் கட்டத்தை அடைஞ்சிட்டுதா? கேக்கவே வெக்கமா இருக்கு. மன்னிச்சுக்கொள்ளுங்கோ. தென் இலங்கையில தகப்பன்மாராலயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சுமார் 60 சிறுமிகள் தங்கட வாழ்க்கையை இழந்து தவிக்கினமாமே....!

### மன்னவரும் – சின்னவரும்

***மன் :-*** *கொடுமையிலும் கொடுமை. இதுகளைக் கேக்கேக்க விவரிக்க முடியாத எரிச்சலாக் கிடக்கு. தாய்மார் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போன வீடுகளிலையே அதிகமான சிறுமிகள் இப்பிடி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கினம். பிள்ளையைப் பாதுகாத்து கௌரவமாக கட்டிக் கொடுக்கிற தகப்பன்மார்களுக்கு இடையில இப்பிடியான தகப்பன்மாரும் இருப்பினம் எண்டு நினைக்கேக்க எரிச்சலாக் கிடக்கு. சம்பந்தப்பட்ட குற்றவாளித் தகப்பன்களுக்கு வழங்கப்படுகிற தண்டனை மற்றவையளுக்கு நல்ல பாடமாக அமைய வேணும்.*

**சின் :-** அநியாயங்களை அரங்கேற்றத் தான் மனிதன் படைக்கப்பட்டானோ தெரியலை. நல்ல சமாச்சாரங்களை விடவும் கெட்ட செய்திகள்தான் அதிகரிச்சிருக்கு. இப்பிடியே போனா மானிட வர்க்கம் அழிவை வரவேற்குதுனிஞ்ச எண்டுதான் அர்த்தப்படும். இந்த மானிடப் பிறவியில் நாமும் எண்டு நினைச்சுப் பல தடவை வெட்கித் தலை குனிஞ்சதுண்டு.

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 69

இப்படியான குடும்ப இயக்கம் (Family Dynamic) மாற்றப்பட முடியாதவிடத்து இந் நோயாளியைப் பகல் நேரப் பராமரிப்பு நிலையம் ஒன்றிலேயோ, வேறு பராமரிப்பு இல்லத்திலேயோ ஒரு நாளின் சிறு பகுதியையாவது செலவிடச் செய்வது இந் நோயாளிக்குப் பயன் தரும். உளச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அந் நோயின் தன்மை காரணமாக, ஏற்கெனவே தங்களிடம் இருந்த ஆற்றல்களை இழப்பது மாத்திரமன்றி, தங்களது இளம் பருவத்தில் கற்றுக்கொள்ளக் கூடிய அநுபவங்களையும் அறிவையும் இழக்கின்றனர். இந் நிலையில் இவர்களுக்கு மீண்டும் இவ்வாற்றல்களை விருத்தி

## உள மருத்துவம்

செய்துகொள்ள உதவி அவசியமாகின்றது. மேலும், அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவியாகத் தொழிற் பயிற்சிகளையோ, வேறு உதவிகளையோ கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்த மறுவாழ்வுப் பயிற்சிகளினால் அவர்கள் மீண்டும் சிறந்த வாழ்க்கைத் தரத்துடன் வாழ்வைத் தொடர உதவ முடியும்.

**மனச்சிதைவு நோய் எவ்வளவு காலம் நீடிக்கும்?**

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

மனச்சிதைவு நோய் அவர்கள் வாழ்க்கை முழுவதும் தொடர்கின்றது. சரியான சிகிச்சையளிக்கப்படுமிடத்து குறிப்பிட்ட காலத்திற்கு நோயாளிகள் மருந்துகளை உட்கொள்கின்றபொழுது இந் நோய் குறைகின்ற வாய்ப்புள்ளது. ஒரு சில நோயாளிகள் 1 – 2 வருடங்கள் மருந்துகளைப் பாவிக்கும்பொழுது அவர்கள் முற்றாகக் குணமடைகின்றனர். மருந்துகளை இடையில் நிறுத்தும்பொழுது நோய் முறையான சிகிச்சையளிக்கப்படாதவிடத்து மீளவும், மீளவும் ஏற்பட்டு இவர்கள் அதிக காலம் மருந்துகளை உட்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அடிக்கடி இந் நோய் ஏற்படுவதால் அவர்களின் ஆளுமையின் முன்னேற்றம் தடுக்கப்படுகின்றது. இளம் வயதில் நோய் ஏற்படும்பொழுதும், அந் நோயாளி ஆணாக இருக்கும் பட்சத்தில் ஆரம்பத்தில் இருந்தே குறைவான வாழ்க்கைத் தர நடத்தையைக் கொண்டிருக்கும்பொழுதும் இவர்கள் குணமடையும் தன்மை குறைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு திருமண பந்தத்தில் பற்றற்றவர்களாகவும், அடிக்கடி வேலையை மாற்றுபவர்களாகவும், சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழ்பவர்களாகவும் காணப்படுவர். வளர்ச்சியடைந்த நாடுகளை விட, வளர்ச்சியடைகின்ற நாடுகளில் உள்ள நோயாளிகள் இந் நோயிலிருந்து பூரணமாக விடுபடும் தன்மை அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகவே, இந் நோயினை முதலிலேயே அடையாளங்கொள்ளுமிடத்து, இந் நோயின் தாக்கத்திலிருந்தும், பாதிப்புகளிலிருந்தும் இலகுவில் விடுபட முடியும் என்பதே உண்மை ஆகும்.

(தொடரும்)

# உண்மையில் அழகு எது?

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**கையைத் திறந்தபோது, கசங்கிய நிலையில் பூ. அந்தக் கசங்கிய பூவை எடுத்து நீரோடையில் எறிந்தாள். தன் கையை சகோதரிகளின் முகத்துக்கு அருகே கொண்டுசென்று திறந்தாள். நறுமணம் வந்தது. "என் கையைப் பாருங்கள்! நறுமணம் வீசும் பட்டுப் போன்ற கை!" என்று பெருமையாய்க் கூறினாள். மூன்றாவது சகோதரி இதைப் பார்த்துவிட்டு, சும்மா இருப்பாளா, அங்கே திராட்சைக் கொடி பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. அதிலிருந்து ஒருசில திராட்சைப் பழங்களைப் பறித்து வந்தாள். தன் கைக்குள் வைத்து அழுத்தமாய்ப் பிழிந்தாள். திராட்சைப் பழச் சாறு வழிந்தோடியது. "என் பட்டுப் போன்ற கையிலிருந்து, எத்தனை சுவையான திராட்சைச்சாறு வருகிறது பார்த்தீர்களா?" என்றாள். மூத்த சகோதரிகள் மூவரும் தங்களின் கையினுடைய பட்டுப் போன்ற மிருதுவான தன்மையைப் பற்றிச் சிலாகித்துப் பேசிக்கொண்டிருக்க,**

**நான்காவது சகோதரி, அவர்களுடைய உரையாடல் முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தாலும், அதில் பங்கு பெறவில்லை. "எங்கே உன் கையைக் காட்டு பார்க்கலாம்." இது மூத்த சகோதரிகளின் கோரிக்கை. கடைக் குட்டியோ, தன் கையை இறுக்கமாக மூடிக்கொண்டு நின்றாளேயொழிய, திறந்து காட்ட முன்வரவில்லை. ஏன் அவள் தன் கையைக் காட்டவில்லை என்பதற்கான காரணம், அக்காமார்களுக்குத் தெரிந்ததுதான் என்பதால், அவர்கள் அவளை ஏளனமாகப் பார்த்தார்கள். அவர்களுடைய ஏளனப் பார்வையைச் சகித்துக்கொள்ள முடியாத கடைசித் தங்கை அழ ஆரம்பித்துவிட்டாள். அப்போது அந்த வழியே ஒரு மூதாட்டி நடந்து வந்து கொண்டிருந்தாள். ஒரு பெண் அழுது கொண்டிருப்பதைக் கண்டதும், அருகில் வந்து என்ன, ஏது என்று விசாரித்தாள். சகோதரிகள், விஷயத்தைச் சொன்னார்கள். அந்த மூதாட்டி, கடைசித் தங்கையிடம் "எங்கே உன் கை எப்படி இருக்கிறது என்று என்னிடம் காட்டு" என்றாள்.**

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 82

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | 15 | 16 |
| 17 | ■ | 18 | 19 | 20 |
| 21 | 22 | ■ | 23 | ■ |

## போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 18.08.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-82**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல.80க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

க.வத்ஷலா, வ/இ.கல்லூரி, சித்தன்கேணி.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

- எம்.சாந்திகுமார், கால்நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
- மனு மிக்கேல், 65/3, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
- சோபிகா சிவநாதன், தெற்கிலுப்பைக்குளம் வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியா.
- பிரதுஷன் பிரதாபன், 54 1/1 வெவசா்ட் இடம், வெள்ளவத்தை.
- லிங்கராஜா கிரிசாந்தன், இல 24, புதிய வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.
- பா.ஜெயபாலராஜா, பொலிஸ் அலுவலகம், வவுனியா.
- ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான், இல. 31, கல்லூரி வீதி, திருகோணமலை.
- எம்.சுந்தரேசன், 49, நர்சிங் ஹோம் வீதி, ஹட்டன்.
- க.நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, கலுபோவில.
- மரியம் ரொஸ்மின், 390ஏ, செமனிவத்த ரோட், தென்னக்கும்புர, கண்டி.

### குறுக்கெழுத்துப் போட்டி 80 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 க | 2 ரு | 3 ணா | 4 அ | 5 ணி |
| 6 றி | ■ | 7 ண் | ■ | 8 வு |
| 9 வே | 10 னி | 11 கு | ■ | 12 து |
| 13 ப் | ■ | 14 உ | 15 ளி | ■ |
| 16 பி | ■ | 17 க் | 18 ச | 19 தி |
| 20 லை | 21 கொ | ■ | 22 ப | 23 னை |

**இடமிருந்து வலம்**

1) தமிழ் அல்லது தமிழ்நாடு என்று பொருள்படும்.
9) தேயிலை, கோப்பி, தென்னை, றப்பர் போன்ற நமது நாட்டின் பெருந்தோட்ட பயிர்களில் இதுவும் ஒன்று. (திரும்பியுள்ளது)
14) கமுகு மரம் தருவது. (குழம்பியுள்ளது).
18) ஒரு மூலிகைச் செடி. மழைகாலத்தில் அதிகமாகச் காணப்படும். (குழம்பியுள்ளது)
21) மரஞ்செடிகளின் கூட்டம். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1) அந்நியர் வசப்படுத்த விரும்பும் எமது இயற்கைத் துறைமுகம்.
3) போராட்ட வகைகளில் ஒன்று இதை எரிப்பது. (குழம்பியுள்ளது)
5) யானையின் பலம் இதிலே உள்ளது. (குழம்பியுள்ளது)
15) கழிவு (குழம்பியுள்ளது)

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில்**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

56

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொழில்:- ..............................
கையொப்பம்:- ..............................



- ஒவ்வொரு வாரமும் ஒரு, அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-08-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? 54
## ஓட்டமாவடி வாசகிக்கு அதிர்ஷ்டம்!

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எம்.எம்.சிராஜ்,**
**ரயில்வே வீதி,**
**ஓட்டமாவடி - 01.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இவ்வாரச் சிறு கதைகள்

## உரிமையும் சலுகையும்

நிர்மலா தனது சகோதரனின் மகளை தான் பயின்ற பாடசாலையில் சேர்ப்பதற்காகச் சென்றிருந்தாள். அவள் அங்கு பயின்ற காலத்தில் சக மாணாக்கர் மத்தியில் மட்டுமன்றி ஆசிரிய குழாமிடத்திலும் நன்மதிப்பும் நம்பிக்கையும் பெற்றிருந்தாள்! படிப்பில் அவள் காட்டிய ஆர்வத்தைப் போல் கலை, இலக்கியத் துறைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தாள். சில சமயங்களில் சில ஆசிரியைகள் கூட அவளது உதவியை நாடிய கதையுமுண்டு!

வடக்கிலிருந்து புலம் பெயர்ந்த அவளது குடும்பத்தினர் கடந்த பதினான்கு ஆண்டுகளாக மேற்கினிலே இங்குமங்குமாக நாடோடிகளாய் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். வறுமைக் கோட்டின் கீழே அவர்களது வாழ்க்கைக் காலம் ஓடிக்கொண்டிருந்தது. சகோதரனின் குடும்பம் புத்தளத்திலும் உறவினர் வெவ்வேறு ஊர்களிலுமாகத் திசைக்கொருவராய்ப் பிரிந்து கிடந்தனர். அண்ணனுக்கு ஆறேழு பிள்ளைச் செல்வந் தவிர வேறொன்றுமில்லை, குறிப்பிட்டுச் சொல்வதற்கு! அவற்றுள் ஒன்றை இவர்கள் தத்தெடுத்துக்கொண்டனர்.

பழைய மாணவியென்பதனால் உரிமையோடு உள்ளே நுழைந்தாள் நிர்மலா. முன்னாள் அதிபர் ஓய்வு பெற்றும் புதிய அதிபர் நியமனமாகியிருப்பதும் அவளுக்குத் தெரியும். எனவே நேரடியாகப் புதிய அதிபரிடம் சென்று கேட்காமல், தனக்கு நன்கு பரிச்சயமான, நிர்வாகப் பணிகளில் கவனம் செலுத்தும் ஓர் ஆசிரியையின் உதவியை நாடினாள்.

"குட்மோனிங் மேடம்...!" என்றாள் பணிவோடு.

பதிலுக்கு ஆசிரியை "குட்மோனிங்...! ஆர்... நிர்மலாவோ? ஆ... எப்படிச் சுகம்? என்ன நடக்குது...?" என்று தனது மூக்குக் கண்ணாடியைச் சரி செய்துகொண்டு கேட்டார்.

நிர்மலா புன் முறுவலோடு, "நல்ல சுகம் மேடம்! நான் இப்போ வீட்டோடுதான்.... உங்கள் சுகம் எப்படி மேடம்?" என்று பரிவாய்க் கேட்டாள்.

அதற்கு அந்த ஆசிரியை ஒரு செயற்கைப் புன்னகையை முகத்தில் வரவழைத்துக்கொண்டு, ஏதோ அப் பாடசாலையை முழுக்க முழுக்க அவரே தூக்கிச் சுமப்பது போல பாசாங்கு காட்டியவாறே ஒரு பெருமூச்சோடு,

"ம்....! ஏதோ இருக்கிறோம்" என்றார். நிர்மலா நின்றுகொண்டிருக்க அந்த அறையில் இரண்டு நாற்காலிகள் காலியாகவே கிடந்தன. தனது மேசை மீது கிடந்த சில கோவைகளை மீள் பரிசீலனை செய்துகொண்டிருந்தார் அந்த ஆசிரியை. எப்படி ஆரம்பிப்பது என்ற பதற்றத்தில் நிர்மலா நின்றிருந்தாள். சில நாழிகள் மௌனமாகவே கரைந்தன.

அந்த ஆசிரியை கோவைகளைக் கவனித்தவாறே பேச்சைத் தொடங்கினார்.

"என்ன நிர்மலா விசேஷம்....?" என்றதும் நிர்மலா மெல்லத் தயங்கித் தயங்கி,

"மேடம்.... எங்க அண்ணன் மகளை ஸ்கூல்ல சேர்க்கணும், அதுக்கு அட்மிஷன்..."

அவள் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட ஆசிரியை, "அதுக்கு பிள்ளே அவர்தானே வரணும்! எங்கே அவர்?" கேட்க,

"அவரது குடும்பம் புத்தளத்தில் உள்ளது மேடம்.... ஆனால் மகள் எங்களோடுதான் இருக்கிறா!" என்று நிர்மலா கூறவும்

"சோ! அப்படியென்றால் அங்கேயுள்ள ஸ்கூல்ல போட வேண்டியதுதானே" என்று ஆசிரியை கொஞ்சமும் உணர்ச்சியற்ற தொனியில் பதிலளிக்கவும் மனம் வருந்தினாள் நிர்மலா.

"இல்லே மேடம்.... அது வந்து..." நிர்மலா இழுக்க, ஒருமுறை முகத்தைச் சற்றே உயர்த்தியவாறு தனது மூக்குக் கண்ணாடியூடாக நிர்மலாவைப் பார்த்தபடி அந்த ஆசிரியை சில கேள்விகளைக் கேட்டு வைத்தார்.

"அண்ணன் என்ன செய்கிறார்?"

"புடைவைக் கடையில் மேடம்!"

"எத்தனை பேர் ஸ்கூலுக்குப் போகினம்?"

"மூன்று பேர் மேடம்!" கிளிப்பிள்ளையாட்டம் நிர்மலாவும் பதிலுரைத்தாள்.

"சோ! அவங்களோடவே இந்தப் பிள்ளையையும் சேர்த்து அனுப்ப வேண்டியது தானே....ம்!!"

நிர்மலா விபரமாக எடுத்துச் சொல்லியும் கூட அந்த ஆசிரியை எதையும் புரிந்துகொள்ளாதவர் போல் உதாசீனமாக நடந்துகொண்டார். மீண்டுமவர் தனது அதிகாரத்தைக் காட்டுவது போல் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"அது சரி! உங்களுடைய வீடு சொந்த வீடா அல்லது கூலி வீடா? - இப்போ இங்கே உறுதியுள்ளவருக்கு மட்டும்தான் அனுமதியுண்டு! மற்றது.... நீர் பழைய மாணவியாக இருக்கலாம். அதனால் உமது அண்ணருடைய பிள்ளைக்கு அனுமதி கிடையாது. வேண்டுமானால் உமது பிள்ளைக்கு அட்மிஷன் தரலாம்! இது புதிய அதிபரின் உத்தரவு; வேண்டுமானால் அதிபரோடு பேசிப்பாரும்! நான் நெனைக்கல்லே அட்மிஷன் கிடைக்குமென்று!"

இவ்விதமவர் சொல்லிக்கொண்டிருக்கையில் மேசை மீதிருந்த தொலைபேசி அலறியது. ரிஸீவரை எடுத்துக் காதில் பொருத்தியவாறே "ஹலோ...." என்றார் அந்த ஆசிரியை. மறுமுனையில் யாரோ அவருக்கு வேண்டப்பட்டவர் போலும், தனது மகளை அங்கே சேர்ப்பதற்காக வேண்டிப் பேசினார். அவரது குரல் கேட்டதும் அன்றலர்ந்த செந்தாமரை போல் அந்த ஆசிரியையின் முகம் மலர்ந்தது.

"ஓம்! ஓம்! சொல்லுங்கோ...... லீவிங் சேர்ட்டிபிகட் வாங்கிட்டியளோ...? சரி... சரி... அப்ப நாளைக்கு வாங்கோவன்! என்னது...? நோ! நோ! அதைப்பத்தி ஒன்றும் யோசிக்க வேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். உங்கட விஷயத்தை நான் மேடத்திடம் சொல்லித்தானிருக்கிறேன் - ஷீ வில் ஹெல்ப் யூ! டோண்ட் வொரி. அது சரி..... அப்போ அங்கேயிருந்து இங்கே வர்றது தூரமாச்சே? வெரி லோங் டிஸ்டன்ஸ் நோ? ஆ... ஓம் பிறகென்ன..."

பேச்சு நீண்டுகொண்டு சென்றது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நிர்மலாவுக்குச் சகிக்க முடியவில்லை! விழிகளில் செங்குருதி கண்ணீராய் உருவெடுத்தது. அவளுக்கு ஒன்று மட்டும் தெளிவாய்ப் புரிந்துவிட்டது. இன்றைய காலத்தில் எதையும் நாம் வென்றெடுக்க 'உரிமை' மட்டுமிருந்தால் போதாது. கொஞ்சம் 'சலுகையும்' தேவைதான்! என்பதை அநுபவரீதியாக அறிந்துகொண்டாள். விழிகளைத் துடைத்துக்கொண்டு - விறுவிறென அந்த இடத்தை விட்டு வெளியேறியவள் மன ஆதங்கத்தோடு அருகிலிருந்த தனது வீட்டை நோக்கி நடக்கலானாள்.



**- கலைநேசன் அ. மர்சூன், மொறட்டுவை.**

## அன்பு சின்னம்மா

"பஸீனா.... ஏய் பஸீனா...."

"............"

"அடியேய் பஸீனா...,

"வந்துட்டேன்மா...."

"இவ்வளவு நேரமா கத்துறேன்.... எங்கேடி போய் தொலைஞ்சே..."

- அந்த வீட்டு எஜமானி றஹீமாவின் ஆதிக்கம் அமர்க்களமாக இருந்தது.

"சின்ன தொர.... க...டை...க்குப் போகச்.... சொன்னாரு...." மனதில் பயம் நிறைந்திருக்க தயங்கியபடியே பதில் கூறினாள் அச் சிறுமி.

"எது கேட்டாலும் பதிலைத் தயாராகவே வைத்திருப்பியே... ம்..... காலைலயே என்னுடைய துணியை எல்லாம் அயன்பண்ணி வைக்கச் சொன்னே. என்னடி பண்ணினே...?"

"அது.... வந்து.... மறந்துட்டேன்மா...." பஸீனாவின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

றஹீமாவுக்கு கோபம் தலைக்கேறியது.

"சொல்ற வேலைய ஒழுங்கா செய்யத் தெரியாது.... என்னடி மறதி...?" றஹீமாவின் கைகள் பஸீனாவைப் பதம் பார்த்தன. அழுதபடியே உள்ளே சென்றாள்.

சிறிது நேரத்தில் 'சென்ற்' வாசனை மூக்கைத் துளைக்க அமர்க்களமாய் வெளியே புறப்பட்டாள் பஸீனாவின் எஜமானி.

"என்னடி இன்னும் இங்கேயே உட்கார்ந்துகிட்டு இருக்கே. உள்ளே நிறைய வேலை இருக்கு. போடி..... போய் எல்லாவற்றையும் நாங்க வர்றதுக்குள்ள செய்து முடி... என் மகள் வரும் நேரம் இப்படி வீடெல்லாம் அழுக்கா இருக்கக் கூடாது. சரியா....?"

"சரிங்... க..... ம்..... மா..." ஒருவாறு எஜமானியை வழியனுப்பி முன் வாயிலையும் நன்கு மூடிவிட்டு உள்ளே வந்தாள்.

'என்னுடைய உம்மா மட்டும் இப்போ உயிரோடு இருந்தால் இந் நேரம் என்னைப் பாடசாலைக்கு வழியனுப்பிவிட்டு அவங்க இந்த மாதிரி வேலையெல்லாம் செய்திட்டு இருந்திருப்பாங்க. இதையெல்லாம் எனக்குத் தரக் கூடாதுன்னு இறைவன்தான் என் உம்மாவை அவன் பக்கமா எடுத்துக்கிட்டானே...' பஸீனாவின் கண்கள் குளமாகின. அழுதபடியே வேலையில் மூழ்கிப்போனாள்.

பஸீனாவின் குடும்பம் நடுத்தரமானது. சிறு வயதிலேயே தனது 'அன்புத் தாயை இழந்துவிட்டாள். அதன் பிறகு வயதான தனது வாப்பம்மாவுடன் வாழ்ந்து வந்தாள். தாயில்லாத அவளுக்கு அங்கே அன்பு அதிகமாகவே கிடைத்தது. ஆனாலும் அந்த வாழ்க்கை வெகு காலம் நீடிக்கவில்லை. பொறுப்பின்றி ஊர் சுற்றித் திரியும் பஸீனாவின் தந்தையால் அவளுக்கு அன்பை விட அடியே கிடைத்தது. அவரின் கண்டிப்பாலும் வற்புறுத்தலாலும் 10 வயதிலேயே பாடசாலையிலிருந்து நிறுத்தப்பட்டாள். அதன் பின் வயதான தாயின் பேச்சையும் மீறி இங்கே வேலைக்குச் சேர்த்துவிட்டார் பஸீனாவின் தந்தை.

அவள் இங்கே வந்து சுமார் 6 மாதங்கள் கடந்துவிட்டன. ஆரம்பத்தில் பஸீனா மீது கருணை காட்டுவது போல்தான் நடந்துகொண்டாள் றஹீமா. பிறகுதான் புரிந்தது எல்லாம் நடிப்பு என்பது. இப்போது பஸீனாவைத் துன்புறுத்தத் தொடங்கினாள். ஆனாலும் றஹீமாவின் கணவர் நல்லவர். இரக்க குணம் கொண்டவர். அவரின் அன்புதான் பஸீனாவுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. என்னவானாலும் இந்த வீட்டில்தானே இருந்தாகனும். இதை விட அந்தப் பிஞ்சால் வேறு என்னதான் செய்துவிட முடியும். வாப்பாவிடம் கூறத்தான் முடியுமா? அப்படியே கூறினாலும் என்னதான் செய்துவிடப் போகிறார். வழமை போல மூன்று வேளையும் சாப்பாடும் உடுதுணியும் குடுக்கிறாங்கதானே... 'இது போதாதா? பேசாமல் இங்கேயே இரு" என்று கூறிவிட்டு எஜமானி கொடுக்கும் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போய்விடுவார். இதனால் கண்ணீரில் அவள் கனவுகள் கரைந்துகொண்டிருந்தன.

வீட்டைச் சுத்தம் செய்து முடித்தவள் நேரத்தைப் பார்த்தாள். காலை 11 மணியைத் தாண்டியிருந்தது. சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்துகொண்டாள். முதல் நாள் மாலை பெரியதொரையும் எஜமானியும் பேசிக்கொண்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

"மகள் படிப்பு முடிந்து நாளை காலை வருவதாக கோல் பண்ணியிருந்தாள்" -இது எஜமானி.

"அப்படியா.... எத்தனை மணிக்கு வருவாளாம்?"

"நாங்க காலைலயே புறப்பட்டுப் போனா அழைத்து வந்துடலாம்"

"மகனுக்கு டியூசன் இருக்கு. அதனால் கூட்டிப் போக முடியாது... இல்லையா...?"

"ம்.... அப்புறம் மகள்தான் படிப்பை எல்லாம் முடிச்சுட்டாளே... அவளுக்கு நல்ல ஒரு மாப்பிள்ளையா நம்மளோட அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி ஒரு வரனா பார்க்கச் சொல்லிடுங்க" உத்தரவு போடாத குறையாக எஜமானி கூறியதும் சட்டென மறுத்த அவர்,

"ஏன் இவ்வளவு அவசரப்படனும். நமக்கிருக்கிறது ஒரே பொண்ணு. அவ விருப்பத்தை தெரிஞ்சுக்க வேண்டாமா? அதில்லாமல் பஸ்லாவுக்கு மேல படிக்கனும்ங்கிற ஆசையும் இருக்கு... இப்ப வந்ததும் வராததுமா கல்யாணப் பேச்சை கொடுத்து அவ மனச நோகடிக்கப் போறியா?"

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. நாம சொன்னா நம்ம பொண்ணு ஏத்துக்கிட்டுத்தான் ஆகனும்..."

"இத பாரு றஹீமா... சும்மா அவ மனசு நோகுற மாதிரி நடந்துக்காதே... இந்த விடயத்தை என்கிட்ட விட்டுடு..."

"எனக்கு மட்டும் நம்ம பொண்ணுமேல் அக்கறை இல்லையா?"

"சரி நீங்களே உங்க பொண்ண பார்த்துக்குங்க..."

பஸீனாவின் சிந்தனை வேறு விதமாக இருந்தது. நான் இதுவரைக்கும் சின்னம்மாவைப் பார்த்ததில்லையே. ஒரே ஒரு தடவை போட்டோவில பார்த்ததுதான். ம்... அவங்களும் எஜமானி மாதிரி இருப்பாங்களோ... கூடவே கூடாது. தொர மாதிரி அன்பா இருக்கனும். இறைவா.... அவங்க அன்பானவங்களாவே இருக்கனும். இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டாள்.

விரைந்து வந்து சமையலுக்கு வேண்டிய பொருட்களைத் தயார்படுத்தத் தொடங்கினாள். வெளியே மணி அடிக்கும் சத்தம் கேட்டது. சின்னம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு ஓடிச் சென்றாள் பஸீனா, தன் வாழ்க்கை அந்த சின்னம்மாவால்தான் பிரகாசிக்கப் போகிறது என்பதை அப்போது அறியாதவளாக.



**- ஏத்தாலை, நஸீஹா சம்சபாத்.**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## மௌனம் மனதை நிலைப்படுத்தும்

நீங்கள் எவ்வளவு அதிகமாக ஊகிக்கின்றீர்களோ அந்தளவிற்கு ஓய்வு குறைந்துவிடுகின்றது.

விவேகம் விழிப்புக்கொள்ளும் பொழுது, பலாத்காரத்துக்கு இடமே இல்லை.

அமைதியைத் தேடியடைவது மிகவும் கஷ்டமானது. ஏனெனில் அது ஊனக் கண்களுக்குப் புலப்படாது.

மூடன் என்றும் திருப்தியடைவதில்லை - அதேவேளை அறிவாளி திருப்தியில் செல்வத்தைக் கண்டுகொள்கின்றான்.

நீங்கள் கோபமடையும்போது உங்கள் மனோநிலையை அதிகளவில் இழக்கின்றீர்கள்.

நீங்கள் சஞ்சலமற்ற ஒருவனை மடையனாக்க முடியாது.

தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் மனதில் இருக்கும் ஒற்றுமை, ஒற்றுமையான சமுதாயத்தில் பிரதிபலிக்கும்.

சில விடயங்களையிட்டு நீங்கள் ஆச்சரியம் அடைவீர்களாயின், நீங்கள் மிக எளிதாகக் குழப்பம் அடைவீர்கள்.

நிஜமான உஷ்ணக் கட்டுப்பாடு என்பது கோபத்தின் சூட்டைத் தணித்து விடுவதே.

ஆயுதங்கள் தாமாகவே ஆபத்தானவையல்ல. மனிதரில் இருக்கும் கோபமே தீங்கானது.

மனிதர்களின் மனதிலேதான் யுத்தம் பிறந்தது என்பதை உணர்வோமாயின் மன அமைதிக்காக நாம் பெரு முயற்சி செய்வோம்.

நான் அமைதியை ஆதரிக்க விரும்பினால், அதற்காக நான் சத்தமிட்டுக் கூச்சலிட வேண்டுமா?

கற்பனை கொடிய சிங்கத்தைப் போன்றது - அதைக் கட்டுப்பாடின்றி ஓட விடாதீர்கள்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# சிந்தியா பதில்கள்

**சிந்தியா! கொழும்பு தலைநகரமா? கொலைநகரமா?**

-நடராஜி பாலசுப்ரமணியம், நானுஓயா.

மறத் தமிழன் இன்று மனசுக்குள் இரகசியமாய் பெருமிதப்பட்டுக்கொள்ளும் கலை நகரம்.

**நடுநிலைமை என்றால் என்ன?**

-சேனையூர் விஜி, செங்கலடி.

கிழக்கில் இன்று இளைஞர், பெண்கள், முதியவர்கள் என்று பாராமல், இயக்கத்திலிருந்து பிரிந்து போன ஒருவருக்கு ஆதரவாயிருந்தார்கள் என்று சொல்லி, சுட்டுக் கொன்று தெருத் தெருவாகப் போடுவதை எதிர்த்தோ, ஆதரித்தோ எதுவும் சொல்லிவிடாமலிருப்பது!

("நம் வீரர்கள் கிழக்கைச் சுத்தப்படுத்துவதோடு, தலைவரின் அற்புத இராஜதந்திரத்தினால் கொழும்பிலும் கால் பதித்துக் கிலி கொடுக்கிறார்கள்..." என்று வெற்றிக் கெக்கலிப்புடன் எழுதுவது, கொஞ்சம் நடுநிலை பிசகாய் வெளிநாட்டுக்காரர்களுக்குப் பட்டுவிடும் என்பதால், அதிகம் உணர்ச்சிவசப்பட்டுக் காட்டிக்கொடுத்து விடாமல் 'நடுநிலை'ப் பணியாற்ற வேண்டிய முக்கியத்தை நம்மவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றபடி, மற்றவர்கள் எல்லாரும் பிழை; நாங்கள்தானே முழுக்கச் சரி!)

**வெற்றி - தோல்வியின்றி முடிந்த முதலாவது டெஸ்ட் எப்படி?**

-பெ. கோகிலன், மேபீல்ட்.

முரளி 5 விக்கெட்டானே எடுக்க முடிந்தது என்ற ஆதங்கத்தைத் தவிர, மற்றபடி ஆறுதல்!

**"தமிழீழ மண்ணில் பாராளுமன்றம் அமைப்போம்" என்றும், "ஐ.நா.வில் புலிக்கொடி ஏற்றுவோம்" என்றும், "கொழும்புப் பாராளுமன்றைத் தகர்ப்போம்" என்றும் தமிழ் எம்.பி.க்கள் திடீர் ஆவேசம் வந்தவர்கள் போல் முழங்குகிறார்களே.... எதற்கு இந்த பில்ட் அப்?**

-ஆர். சண்முகராஜன், வவுனியா.

வாரோட்டம்தான்! வன்னிக் கடவுளைக் குளிர்த்தி செய்தலில் ஒருவரை மற்றவர் முந்திவிடும் போட்டி! தமிழ் வீரப் புல்லரிப்பினால் மக்களை ஆவேசப்படுத்தி, பிரமிப்பில் மெய்ம்மறந்திருக்க வைத்ததுமாச்சு; சிங்கள அரசாங்கத்தையும் இனவாத சக்திகளையும் உசுப்பிவிட்டு, பேச்சுவார்த்தைக்கு வரவிடாமல் செய்ததுமாச்சு; அடுத்த முறையும் இதே நிலைமைகளோடு எம்.பி. சீற்களை உறுதி செய்ததுமாச்சு.

**பிரசாந்தின் "ஷாக்"?**

- க. கமால்தீன், ஏறாவூர்-03.

'விஷ்ஷிக்' என்ற சத்தத்தோடு விரலைக் கீழிருந்து மேல் உயர்த்துதல், ஒரு குத்திலேயே எதிராளியைப் பின்பக்கமாக 50 யார் தூரத்திற்குப் பறந்தபடி போகச் செய்தல், கடவுளால் அனுப்பப்பட்ட நேரடித் தூதன் போல "நான் இவன்டா!" என்று பேத்தை உடம்பை வைத்துக் கொண்டு போடும் கூச்சல்.... அவதார புருஷன் என்று தன்னைத் தானே அறிவித்துக்கொள்ளும் அட்டகாசம்.... இதெல்லாம் இல்லாமல் ஒரு ஹீரோவை தமிழ்ப் படத்தில் பார்த்ததே பெரிய சந்தோஷம்!

**"லஜ்ஜாவதியே..." பாட்டுக் கேட்டீர்களா?**

-ஏ.ஜே. சித்தீக், பொத்துவில்-03

அசத்துகிறது புதிய இசையமைப்பாளரின் அந்தக் குரலும் அலட்சிய பாவமும்! பாடலாசிரியர்களில் பா.விஜய், யுகபாரதி எல்லாம் சற்றுப் பின்தங்க, இது நா.முத்துக்குமார் நேரம்!

**"நான் பிறந்த மண்ணில் போய் நான் நிற்பதை யாரும் தடுக்க முடியாது" என்று ஒரு பத்திரிகையாளர் துணிச்சலுடன் கருணாவுக்குச் சவால் விட்டிருப்பதைப் படித்தீர்களா?**

-வி. ஜெயகுலேந்திரன், தெஹிவளை.

ஜனநாயகத்தின் மீதான அவரது நம்பிக்கையும், உறுதியும் பாராட்டப்பட வேண்டியவையே! ஆனால்.... இதேபோல் வன்னி மண்ணில் போய் நிற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட ஒருவர், சவால் விடமுடியுமா? அதன்மூலம் வெளிநாடொன்றில் 'அசைவம்' எடுத்து அங்கேயும் நிம்மதியாக இருக்க முடியுமா? என்பது பற்றியும் அந்தப் பத்திரிகையாளர் யோசித்துப் பார்த்திருப்பார்தானே!

**வலிமையுடையதுதான் எஞ்சும் என்றால், பலமற்றவர்களெல்லாம் அழிந்து போக வேண்டியவர்கள்தானே?**

-எம். தமிழ்பிரியா, கொழும்பு-13

அப்படியா சொல்கிறீர்கள்... அந்தப் பரிணாம விதி மிருகங்களுக்கு என்றல்லவா நான் ஆசுவாசமாக இருந்தேன்!

**ஊடகவியலாளனாக வருவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

-எம்.ஏ.எம். மிஹ்லார், குருநாகல்.

சமீபத்தில் சிறுவர்களுக்கான போட்டியொன்று நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இரவு தொலைக் காட்சி செய்தியில் அதைக் காட்டினார்கள். பரிசு வழங்க வந்திருந்த அமைச்சர் வெகுநேரம் பேசினார். பரிசு வழங்கிய பெரியவர்களையும், வந்திருந்த பிரமுகர்களையும் காட்டினார்கள். கொடை நிறுவனங்களையும் சொல்லி செய்தி முடிந்துவிட்டது. சரி. போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களை காலையில் பேப்பரில் பார்த்து அறிந்து கொள்ள வேண்டியதான் என்று நித்திரைக்குப் போனேன். விடிந்து பேப்பரைப் பார்த்தால், அமைச்சர் இன ஒற்றுமை பற்றிப் பேசியது, போட்டி நடத்தியவர்களின் தயாள குணத்தைப் பாராட்டியது, அவர்கள் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தது எல்லாம் விரிவாக இருக்கிறது. வெற்றிச் சிறுவர்கள் யார் என்பதை மட்டும் எங்கும் காணோம். இதில் உங்கள் கேள்விக்குப் பதில் கிடைத்திருந்தால்.... நீங்கள் தேறிவிடுவீர்கள்.

**பத்திரிகையாளர் நடேசன் கொலையைக் கண்டித்து அதிதீவிர எழுச்சி கொண்டாடிய பத்திரிகையாளர்கள் சுவீடன் நாட்டு 'அஸைலம்' எடுத்துவிட்டார்களாமே?**

-என். நேசமணி, மட்டக்களப்பு.

ஏதோ... நடேசன் கொலையுடன்தான் இந்த நாட்டில் பயங்கரவாதமே ஆரம்பித்திருப்பது போல பம்மாத்துக் காட்டியவர்கள் 'விசா' எடுத்துத் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள்.



பிரசாந் - மீனா

பயங்கரவாதத்துக்குள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கும்(?) மக்கள் வாயே திறக்க முடியாமல் இவர்களைப் பார்த்துக்கொண்டும், வீர வசனங்களைக் கேட்டுக்கொண்டும் இருக்க வேண்டியதுதான்!

**லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு வாங்குபவர்களைப் பார்க்கிறபோது உங்களுக்கும் லொத்தர் சீட்டு வாங்கும் ஆசை வருவதுண்டா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

உண்டு. ஆனால், கடையில் இருக்கும் பல்லாயிரம் சீட்டுகளைப் பார்த்ததும் அந்த ஆசை போய்விடும்.

**பதில் சொல்வதை விட கேள்வி கேட்பதற்குத்தான் அதிக புத்திசாலித்தனம் தேவை. என்ன சொல்கிறீர்கள்?**

-எம்.எப்.எம். முஸம்மில், சிலாபம்.

ஆமாம். உங்கள் கேள்வியைப் பார்த்த பிறகு அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

**காதலுக்காக உயிர் விடுபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆர். கோபிநாத், கம்பளை.

கல்யாணமாகி ஒருவர் மற்றவரது உயிரை எடுப்பதற்குள் முந்திக்கொள்கிறார்களோ என்னவோ!

**நம் சமூகத்தின் ஆதிக்கக் குரலுக்கும், ஆர்ப்பாட்ட முழக்கங்களுக்கும் எதிராக என்ன செய்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள்?**

-கே. தியாகராஜா, குருநாகலை.

ஆற அமர யோசித்தால் விரக்தியாகத்தான் இருக்கிறது. ஆனால், இத்தகைய மந்தைத் தனமான வன்முறை ஆராதனைச் சூழலில், தோல்வியுற்றுப் போதலும் நியாயம்தான் என்று தோன்றுகிறது. லக்ஷ்மி மணிவண்ணன் என்ற கவிஞரின் "சர்வ வல்லமை பொருந்திய பிதாக்களுக்கு" என்ற தலைப்பிலான கவிதை, இந்த வெற்றிக் கெலிப்பீன் விண்ணாணத்தையும், தோற்பின் மேன்மையையும் சொல்கிறது. பாருங்கள்:

நான் ரொம்ப பலகீனன்  
உங்களிடம் மண்டியிட்டுத் தோற்றுப்  
போகிற  
அளவுக்கு பலகீனன்.  
உங்கள் அட்டைக் கத்திகள்  
போதுமானவை  
என் தொடைகளை அரிய,  
குத்திக் குரல்வளையைத் திறக்க,  
என் முகத்தை விகாரமாக்க,  
என் மார்பைப் பிளந்து  
இதயத்தை நாசப்படுத்த,  
எல்லாவற்றுக்கும்  
சர்வ வல்லமை பொருந்திய  
பிதாக்களே  
உங்கள் சாகஸத்தின் ரகசியம்  
எதையும் மிக நுட்பமாகப்  
புரிந்து கொள்ளும்  
அறிவும் எனக்கில்லை.  
பிதாக்களே, பிதாக்களே  
ஏன் என்னை உங்கள்  
நாடக மேடைகளுக்கடியில்  
கசக்கிப் போட்டிருக்கிறீர்கள்  
என்று தைரிமாய்க் கேட்கிற  
தெம்பும் எனக்கில்லை.  
உங்களிடம் மண்டியிட்டுத்  
தோற்றுப் போதலே  
என் வெற்றி என்பது புரிகிறது.  
கசக்கடிபட்ட மௌனத்தின் வெற்றி அது.  
மீண்டும் மீண்டும் உங்களிடம்  
தோற்றுப் போதலே  
என் ஜெயம்.

# இலக்கிய நயம்

## "கானல் நீரைக் கண்டு மயங்கி தாகம் தீர்க்கத் தடுமாறும் மான் போல"

நடந்து வந்துகொண்டிருந்தவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் கமலன்.

லயம் தவறாத இடையின் தாலாட்டில் அங்கங்கள் அனைத்துமே மோகனகரமாக அசைய வந்தவளின் நடையில் நடனக் கலை இருந்தது.

அவள் வந்துகொண்டிருந்த வேகத்தை விடப் பல மடங்கு வேகத்தில் உணர்ச்சிப் பரபரப்பு அவனுள் ஏறிக்கொண்டிருந்தது.

தெரிந்த சிற்றிடையும் தெரியாத உள்ளழகுகளும் பற்பல ஊகங்களுக்கு இடங்கொடுக்க மேகலா நெருங்கினாள்.

இவனுக்கு உன்மத்தம் தலைக்கேறிக் கொண்டது.

கண்கள் அவள் மர்ம இடங்களை ஊடுருவும் பணியில் தீவிரமாக இருந்தன.

அவன் பார்வை சென்ற இடங்களையும் முகத்தில் ஏறிக்கொண்டிருந்த வெறியையும் கவனித்து, வெட்கத்தாலும் வேட்கையாலும் முகம் குங்குமமெனச் சிவக்க, அருகே வந்து தயங்கி நின்றாள் மேகலா.

அவளது மெல்லிய ஆடையை ஊடுருவிய ஒளிக்கதிர்கள் காட்டிய தரிசனம், கமலன் இதயத்தில் ஈட்டிகளைச் செருகியது.

அவன் பார்வையை அறிந்துகொண்டவள் கைகளை நெஞ்சுக்குக் குறுக்கே கட்டிக்கொண்டு தயங்கி நின்றாள்.

கண்கள் அவன் கண்களோடு ஒருமுறை கலந்து கவ்வித் தாழ்ந்தன.

இடையொடியத் துவண்டு நின்ற மேகலாவின் பேரழகு, அவனை ஒரு கணம் சிலையெனச் செயலற்று இருக்க வைத்தது.

மறுகணம் அவள் கரத்தைப் பற்றித் தன்னை நோக்கி இழுத்தான் கமலன். தடுமாறிய மேகலா அவன் மடியில் வீழ்ந்தாள். வீழ்நதவள் எழ முயலாமல் அங்கேயே படுத்திருந்தாள். உணர்ச்சி மிகுதியால் உடல் இலேசாகத் துடித்தது. மடியில் வீழ்ந்த புஷ்பக் குவியலால் மனம் கலங்கி உன்மத்தமான கமலன், அந்த மலர்க் குவியலை வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்தான்.

அவள் திமிறத் திமிற அணைப்பு மேலும் மேலும் இறுகியது. அணைப்பு இறுகவே அவன் நெஞ்சில் பட்டுக்கொண்டிருந்த அவள் உடலின் பரப்பளவு மேலும் பரந்து அதிகரித்தது.

தருவது முழடில்யன்

அவள் உதடுகளை நோக்கிச் சென்ற இதழ்களுக்குத் துணிவில்லாததாலோ என்னவோ, தடுமாறி அவள் கன்னத்தில் புதைந்தன. சற்று நேரம் கழித்துக் கழுத்திலும் புதைந்தன.

"என்ன இது?" என்று மேகலா அவன் காதுக்கருகில் சிணுங்கினாள்.

"எல்லாம் உன்னால் வந்த வினை" என்று அவனும் இரகசியம் பேசினான்.

"என்னால் வந்த வினையா?" என்ற கேள்வியின் இறுதிப்பகுதி பலத்த கீச்சிடலாக முடிந்தது, கமலன் கைகள் அவள் உடலை வலிக்கும்படியாக இறுக்கியதால்.

"உன்னை யார் இந்த உடையில் வரச் சொன்னது?"

ஏன் இந்த உடைக்கென்ன? அவன் காதுக் கருகில் தன் முகத்தைச் சாய்த்துக் கேட்டாள். அவள் சமீபத்தை உணர்ந்ததில் தன்னிலை மறந்துகொண்டிருந்த கமலன், அவள் காதுக்கருகில் வந்து பேசியபோது கமழ்ந்த முல்லைச் சரங்களின் நறுமணத்தாலும் பட்டால் தடவுவது போல் மிக மிருதுவாகத் தன் கன்னத்தில் தடவிய அவள் கன்னத்தின் வழவழப்பாலும் விவரிக்க இயலாத எத்தனையோ உணர்ச்சிகள் உடலெங்கும் பரவி, அவளிடம் அடியோடு இலயித்துப் போயிருந்தான். அந்தக் கிறக்கத் துடனேயே பதில் சொன்னான்!

"என்னைப் போலவே உன் ஆடையும் எதையும் ஒளிக்கத் தெரியாமல் கள்ளங் கபடமற்று இருக்கிறது..."

"ஓஹ்ஹ்கோ....கள்ளமில்லாத பச்சைப் பிள்ளை.....நீங்கள்?"

"ம்....பின்னே என்னவாம்,....."என்றபடி



குனிந்த அவன் முகத்தை இரு கைகளாலும் பிடித்துத் தள்ளி "பிள்ளையா.....சரியான காமுகன்...."என்றாள். வார்த்தைகளில் மட்டுமன்றி முகத்திலும் இகழ்ச்சி விளையாடியது.

"அதுவும் சரிதான்!" என்று அவளை வலுவுடன் மீண்டும் இழுத்தான்.

"எதுவும் சரி?" குரலில் கோபத்தைக் கலந்தாள்.

"தப்பான காமுகன் இல்லை....உரிமையான இடத்தில் காமத்தை வெளிப்படுத்துகிறவன் சரியான காமுகன்தானே?"

"அடடா...இதில் சரி, தப்பு வேறு இருக்கிறதா?"

"நீதானே என்னைச் சரி என்று சொன்னாய்...இந்தச் சமயத்தில் நம் இருவருக்கும் எல்லாமே சரிதான்...."என்று இரகசியக் குரலில் சொல்லியபடி அவள் உடலை மேலும் இறுக்கினான். அந்த இறுக்கலில் உடல் வலித்தாலும், அந்த வலி அவளுக்குத் தேவையாயிருந்தது. ஆனாலும், "அதிகமாக இறுக்காதீர்கள்.... வலிக்கிறது" என்று முனகினாள்.

"இறுக்காவிட்டால் எனக்கு வலிக்குமே!" என்றான் கமலன்.

இன்ப வெறியேற அவன் மேனியில் முழுவதுமாக இழைந்தவள் சொன்னாள். "அப்படியானால் இறுக்குங்கள்!" மென்மை கனிவு ஆகியவற்றுடன் இலேசான நடுக்கமுமிருந்தது அவள் குரலில்.

"என் செல்லக் கள்ளி" என்று சிரித்தபடியே இரும்புத் தழுவல் தழுவினான் கமலன்.

நேற்று நடந்தவைகளை யோசித்து வெதும்பினாள் மேகலா. அவனுக்காக ஏங்கும் அங்கங்களைத் திட்டினாள். தன் கைகளாலேயே உடலைப் பிழிந்து விடுவது போல இறுக்கினாள்.

'நேற்று இந் நேரம் இங்கிருந்து என்னவெல்லாம் சொன்னார்.... கண்ணுக்குள் ஏதோ கவிதைகள் தெரிவதாகச் சொன்னார். தோள், கூந்தல் இடை என்று தனித்தனியே என்னென்ன உவமையெல்லாம் சொல்லிப் பாராட்டிக்கொண்டிருந்தார்.....' அவன் சொன்ன விசேட உவமை ஒன்று நினைவுக்கு வா, "ச்சீய்" என்று தனக்குள்ளாகவே வெட்கப்பட்டுக்கொண்டாள். "பேச்சிலும் மோசம்தான் அவர்...."என்று சலித்துக்கொண்டாள். என்ன துணிவு அவருக்கு! கைகளை எங்கெல்லாம் கொண்டு சென்றார்....' என்று சிந்தித்தவள், அதற்கு மேல் முடியாமல் எழுந்து சிறிது நடந்தாள்.

'எல்லா ஆசையையும் காட்டிவிட்டு, இன்று இப்படித் தனிமையில் தவிக்க விட்டு விட்டாரே.... திரும்பிச் சென்று விடலாமா' என்று நினைத்தவள், ஒருவேளை இனியும் வரக்கூடும் என்ற நப்பாசையில் நின்று தவித்தாள்.

'மரங்களே இல்லாத நீண்ட வெளியில் கானல்நீரைக் கண்டு நீர்தான் என்று மயங்கி, அருந்தவும் முடியாமல் விட்டுச் செல்லவும் முடியாமல் சபலமுடன் நிற்கும் மானைப் போல' என்று மேகலா தன்னை நினைத்துக் கொண்டாள். அவரைப் போய் என் மீது இரக்கமுடையவர் என்று நினைத்தேனே....' என்று வெறுப்புடன் சலித்துக்கொண்டாள்.

***கண்ணும் தோளும் தண்நறும்***  
***கதுப்பும் திதலை அல்குலும்***  
***பல பாராட்டி நெருநலும் இவணர்***  
***மன்னே இன்றே பெருநீர் ஒப்பின்***  
***பேஎய் வெண்தேர் மரன்இல்***  
***நீளிடை மான்நசை உறூஉம்***

*(நற்றிணை :- 84,:1-5)*




உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியானது 1877 மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்து 15, 16, 17, 19 ஆகிய நான்கு நாட்களாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

டேவிட் வில்லியம் கிரேஸி அவுஸ்திரேலிய அணிக்கும் ஜேம்ஸ் லில்லிவைட் இங்கிலாந்து அணிக்கும் தலைமை தாங்கிய மேற்படி போட்டியின்போது ஹென்றி ஜப் இங்கிலாந்து அணியின் விக்கெட் காப்பாளராகவும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் செயற்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளராக செயற்பட்டவர் அக் காலகட்டத்தில் கிரிக்கெட் உலகில் சிறந்த விக்கெட் காப்பாளர் எனப் புகழ் பெற்றிருந்த ஜோன் மெக்கார்த்தி ப்ளெக்ஹெம் என்பவராவார்.

உலகின் முதலாவது டெஸ்ட் போட்டியின்போது முதலாவதாக ஆட்டமிழந்த வீரர் அவுஸ்திரேலிய வீரரான என்.தொம்ஸன் ஆவார். ஒரேயொரு ஓட்டத்தினைப் பெற்றிருந்தபோது இங்கிலாந்து அணியின் ஹெலன் ஹில் வீசிய பந்து நேரே விக்கெட்டில் பட்டதால் இவர் ஆட்டமிழந்துள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது விக்கெட்டைக் கைப்பற்றியுள்ள ஹெலன் ஹில் இன்னுமொரு வகையிலும் முதலிடம் வகிக்கின்றார். டெஸ்ட் போட்டிகளின்போது முதலாவது 'கெச்'சைப் பிடித்த பெருமையும் இவரையே சாருகின்றது. எல்பிரட் ஷோ வீசிய பந்தை டீ.பி. ஹோர்ன் அடித்தபோது உயரே எழுந்த பந்து ஹில்லின் பிடிக்குள் வந்தது.

உலகின் முதலாவது டெஸ்ட் போட்டியின் போது முதலாவது பந்துக்கு முகங்கொடுத்தவரும் முதலாவது சதத்தைப் பெற்றவரும் என்ற பெருமை சார்ள்ஸ் பெனர்மனைச் சாருகின்றது. 165 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஜோர்ஜ் உல்யிட் வீசிய பந்து வலது கை விரலில் பட்டதனால் இவர் மைதானத்தை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பெனர்மன் இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவதற்காக 4 மணித்தியாலங்களும் 45 நிமிடமும் விக்கெட்டில் தரித்திருந்துள்ளார். இதில் 15 பவுண்டரிகள் அடங்குகின்றன. இதே நேரம் இவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் பெற்ற ஒரேயொரு சதமாகவும் மேற்படி ஓட்ட எண்ணிக்கையே காணப்படுகின்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் பெற்ற 245 மொத்த ஓட்ட எண்ணிக்கையில் 165 ஓட்டங்கள் சார்ள்ஸ் பெனர்மனால் எடுக்கப்பட்டவையாகும். இன்று வரையிலான உலக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் மேற்படி விகிதாசாரம் (அதாவது நூற்றுக்கு 67) உயர்ந்த விகிதாசாரமாகக் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 196 மொத்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டது. இதன்போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹென்றி ஜப் 63 ஓட்டங்களையும், எச்.ஆர்.ஜே.சார்ள்வுட் 36 ஓட்டங்களையும், ஹெலன் ஹில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சின்போது அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த டபிள்யூ.ஈ. மிட் விண்டர் 78 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆரம்பமானது. இதன்போது அவுஸ்திரேலிய அணியால் முதல் இன்னிங்ஸில் ஆடியது போல் ஆட முடியவில்லை. அனைவரும் ஆட்டமிழந்து 104 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

முதல் இன்னிங்ஸில் தனது முழுத் திறமையையும் காட்டிய பெனர்மன், இரண்டாவது இன்னிங்ஸில் 4 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர் எல்பர்ட் ஷோ 38 ஓட்டங்களைக் கொடுத்து, விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத் தக்கது.

இப் போட்டியில் வெற்றிபெற 153 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 108 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து 45 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. நடுத்தர வேகப் பந்துவீச்சாளரான அவுஸ்திரேலிய வீரர் தோமஸ் கெண்டல் 55 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் தோமஸ் கெண்டல் இடது கை பந்துவீச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது மெல்பர்ன் மைதானத்தில் வைத்து அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெற்றியை ஈட்டிக்கொண்டது.

இப் போட்டியின்போது ஒரு ஓவருக்கு நான்கு பந்துகள் வீதமே வீசப்பட்டுள்ளன.

முதலாவது பந்தை வீசிய இங்கிலாந்து அணியின் எல்பிரட் ஷோ சிறந்த பந்து வீச்சில் ஈடுபட்டு இப்போட்டியின் போது 89 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். 89 ஓவர்கள் பந்து வீசியுள்ள இவர், 50 ஓவர்களுக்கு ஓட்டங்கள் எதனையுமே கொடுக்கவில்லை. என்பதுவும் குறிப்பிடத் தக்க விடயமாகும்.

தோமஸ் வில்லியம் கெரட் என்பவர்தான் உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட குறைந்த வயதையுடைய வீரராகக் கருதப்படுகின்றார். அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த இவர் நடுத்தர வேகப் பந்துவீச்சாளராகச் செயற்பட்டார். இவரது அப்போதைய வயது 18 ஆகும். இதிலிருந்து சுமார் 53 வயதாகும் வரை வயது குறைந்த வீரர் எனக் கருதப்பட்டவரும் இவராவார்.

வயது கூடிய வீரர் எனக் கணிக்கப்படுபவர் ஜேம்ஸ் சவுத்தர்டன். இவர் இங்கிலாந்து அணியைச் சேர்ந்தவர். 49 வயதுடன் அப்போது விளையாடியுள்ளார். 1880 ஜூலை மாதம் 16ஆம் திகதி இவர் சரே மாநிலத்தில் இறந்துள்ளார். ஆக, கிரிக்கெட் விளையாட்டு வீரர்களில் முதலாவதாக மரணித்த வீரரும் இவரே..

**-மைந்தன்**


---

# டெஸ்ட் போட்டிகள்

**இலங்கை அணியுடன் 2 டெஸ்ட் ஆட்டங்களிலும் 5 ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடுவதற்காக இலங்கைக்கு வந்துள்ள தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 04.08.2004இல் காலியில் நடைபெற்று வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.**

**முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 486 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மஹெல ஜெயவர்த்தன 415 பந்துகளைச் சந்தித்து 237 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத் தக்கது. இதற்காக அவர் 25 பவுண்டரிகளை 6 சிக்ஸர்களையும் விளாசித் தள்ளினார்.**

**தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 376 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 214 ஓட்டங்களை பெற்ற நிலையில்**



மஹெல ஜெயவர்த்தன

**ஆட்டத்தை நிறுத்தி 4ஆம் நாள் இறுதியில் தென்னாபிரிக்க அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. 325 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி வெற்றிக்காகப் போராடாமல் ஏற்கெனவே தீர்மானித்துக்கொண்டது போல நின்று ஆடியதாகவே உணரமுடிந்தது. 3 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்று 5ஆம் நாளை நிறைவுசெய்து வெற்றி தோல்வியின்றி சமன் செய்தது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக மஹெல ஜெயவர்த்தன தெரிவானார்.**



டெஸ்ட் போட்டியின்போது

**காலி மைதானத்தைப் பொறுத்தவரை சுழற்பந்துவீச்சாளர்களுக்குப் பெரிதும் வாய்ப்பாக அமையுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. தென்னாபிரிக்காவின் சுழற்பந்துவீச்சாளர் நிக்கி போயே 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முரளிதரன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். டெஸ்ட் ஆட்டத்தில் 532 விக்கெட்டுக்களை வீழ்த்தி வீழ்த்திச் சாதனை புரிந்தார். இவ்விரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது டெஸ்ட் ஆட்டம் 11.08.2004 எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தொடங்கியுள்ளது. எஸ்.எஸ்.சி. மைதானத்தைப் பொறுத்தவரையில் வேகப் பந்து வீச்சாளருக்குச் சாதகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் காலநிலை மாற்றங்கள் சாதக நிலைமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும். ஆனாலும் இரு அணிகளும் வேகப் பந்து வீச்சாளர்களை நம்பியே களமிறங்குகின்றனர். தென்னாபிரிக்க அணி அதிக வேகப் பந்து வீச்சாளர்களைக் கொண்ட அணி என்பதால் துடுப்பாட்டவீரர் கிப்ஸின் மீள் வருகையை விட வேறு மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. இலங்கை அணி நுவான் சொய்சா, வாஸ், மலிந்த இவர்கள் மீது எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. இப் போட்டிகள் முடிவடைந்ததும் ஒருநாள் போட்டிகள் தொடங்க உள்ளன. 18.08.2004இல் தொடங்கும் ஒருநாள் போட்டி 31.08.2004 வரை தொடரும். முதலாவது ஒருநாள் ஆட்டம் பிரேமதாஸ மைதானத்தில் பகல் - இரவுப் போட்டியாக நடைபெறும். 1ஆம் 2ம் போட்டிகள் பிரேமதாஸ மைதானத்திலும், 3ஆம் 4ஆம் போட்டிகள் தம்புள்ள மைதானத்திலும் இறுதிப் போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்திலும் நடைபெறும்.**

*வித்தியா*

---

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 4: பிறந்த கிழமை புதன்

பொன்னுக்கும், பெருமைக்கும், புகழுக்கும் புனிதத்திற்கும் புதன் காரணமாகும். நல்வினை புரிதல் புதனுக்குரியது. நான்கு சுவர், நான்கு தூண்கள் இல்லாவிட்டால் ஒரு கட்டிடம் கிடையாது. வாழ்க்கைக் கட்டிடத்திற்கு நான்கு அதிமுக்கியமான எண். இப்படியான பிறப்பெண் 4லினையும் புதனையும் கொண்டுள்ள நீங்கள் என்ன மேன்மைகள், என்ன குணங்கள் உடையவர், எப்படியான வாழ்க்கை வாழக் கூடியவர் என்பதைப் படித்துப்பாருங்கள்.

பேச்சுத்திறன் இல்லாவிட்டால் ஒருவன் வாழ்க்கையில் நான்கில் மூன்று பங்கு அதிர்ஷ்டத்தையும், நல்ல சந்தர்ப்பங்களையும் இழக்கிறான். உதாரணமாக - காதலிக்கின்றான் ஒருவன். அதை உரியவளிடம் வெளிப்படுத்தாவிட்டால், அல்லது வெளிப்படுத்தத் தெரியாவிட்டால் அவன், அவளை இழந்து விடுகிறான். பேச்சுக் கலை என்பது பிறரை வசீகரிக்கக் கூடியது. எல்லோரையும் மிக இலகுவாகக் கவரலாம். ஒரு அரசியல்வாதிக்குப் பேச்சுத்திறன் இல்லாவிட்டால் அவன் படுதோல்வி அடைவது நிச்சயம். இறைவன் மனிதனுக்குக் கொடுத்த மிகப்பெருங்கொடை நல்ல குரல் வளமும் பேச்சுத்திறனும். இது உங்களிடம் இருப்பது நீங்கள் பெற்ற பாக்கியமே. ஒரு விடயத்தைப் பல பொருள்படக் கூறுவதில் வல்லவர் நீங்கள். ஞாபக சக்தி அதிகமாக உங்களிடம் இருக்கும். இதனால் தரவுகளோடு, புள்ளிவிபரங்களோடு ஆதாரபூர்வமாக ஆணித்தரமாகப் பேசுவீர்கள். உங்களுடைய பேச்சை மறுக்கவோ, வெறுக்கவோ அல்லது பொய் என்று பிரசாரம் செய்யவோ யாராலும் முடியாத காரியம். பல மணிநேரம் சோர்வு சோம்பலின்றிப் பேசக்கூடிய வல்லமை உங்களுக்குண்டு.

சுயமாகத் தொழில் செய்யும் நோக்கம் உங்களுக்கு இல்லை. வியர்வை சிந்தவோ உடலை வருத்தவோ உங்களுக்கு விருப்பமில்லை. பிறரின் உதவியில் அல்லது உழைப்பில் வாழ வேண்டும் என்று நினைப்பீர்கள். உங்கள் புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்குமாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்வீர்கள். ஆடம்பர வாழ்க்கையில் அதிக விருப்பம் உடையவர்களாகக் காணப்படுவீர்கள்.

சாப்பாட்டுப்பிரியர்கள் நீங்கள். அறுசுவை உணவு வகைகளை நன்றாகச் சாப்பிடக்கூடிய மனமும் விருப்பமும் கொண்டவர். ஆனந்தமாகத் தூங்குவதிலும் ஆர்வம் உடையவர் நீங்கள். பொதுநலத்தை நீங்கள் ஒரு போதும் விரும்ப மாட்டீர்கள். பிறருக்கு உதவிபுரிய மாட்டீர்கள். அன்பு, கருணை இதெல்லாம் உங்களிடம் கிடையாது. சுயநலமுள்ளவராக வாழ்வீர்கள் தான் உண்டு; தான் வாழ்ந்ததால் சரியென்ற மனநிலை கொண்டவர் நீங்கள். பிறர் உங்களை நேசிக்கமாட்டார்கள். அன்பு செலுத்தினால்தான் அன்பு கிடைக்கும்.

ஒன்றைக் கொடுத்துத்தான் ஒன்றைப் பெற வேண்டும். நீங்கள் எதனையும் இழக்காமல் பெற முயற்சிப்பவர். பிறர் உங்களை நெருங்குவதற்குப் பயப்படுவார்கள். இதனால் அதிக நண்பர்கள் உங்களுக்கு இருக்கமாட்டார்கள். உங்களுக்குக் கட்டுப்படக்கூடிய நண்பர்களைத்தான் வைத்துக்கொள்வீர்கள். ஒன்றும் ஒன்றும் மூன்று என்று நீங்கள் சொன்னால் ஆமாம் போடும் நண்பர்களைத்தான் தெரிவு செய்து வைத்துக்கொள்வீர்கள். உங்களுக்குக் கட்டுப்படாத, நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளாத நண்பர்களுடன் சேரமாட்டீர்கள்.

உங்களுடைய உற்றார், உறவினர்களைப்பற்றிக் கவலைப்படமாட்டீர்கள். அவர்களுக்கு உதவி புரியமாட்டீர்கள். இதனால் பிற்காலத்தில் துன்பப்படக்கூடிய வாய்ப்பு உங்களுக்குண்டு என்பதைத் தெரிந்துகொண்டு உங்கள் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். தொழில் செய்வதில் நாட்டமோ, அக்கறையோ உங்களுக்கு இல்லை. இதனால் பிறரை வைத்து வேலை வாங்கி அவர்கள் மூலமாக வருமானம் அடையக் கூடியவர்களாக இருப்பீர்கள்.


25 வயதுக்குப் பின்னர் 55 வயதுக்குள் சில சமயம் அதிக வருமானமும், சில சமயம் குறைந்த வருமானமும் கிடைக்கும். 9 வயது, 36 வயது, 48 வயதுக் காலங்களில் கண்டங்கள் ஏற்படும். ஆனால் உங்கள் உயிருக்குத் தீங்கு ஏற்படாது. 40 வயதிற்குப் பின்னர் நீரிழிவு நோய் ஏற்படும். இதனால் உங்கள் தேகநலம் பாதிப்புக்குள்ளாகும். பல மருந்துகளை நீங்கள் சாப்பிட்டாலும் நோய் குணமாகாது. சீனி கூடி, குறைந்து அடிக்கடி காணப்படும். முடியுமானவரை உணவு விடயத்தில் அதிக அக்கறை நீங்கள் காட்ட வேண்டும்.

முட்டைக்கோஸ், முள்ளங்கிக்கீரை, பொன்னாங்கண்ணி, கத்தரிக்காய், வெள்ளரிக்காய், தக்காளி, பால், மோர், முட்டை, ரொட்டி, சம்பாக்கோதுமை, உளுத்தம் கடலை, பாகற்காய், அன்னாசிப்பழம், எலுமிச்சம்பழம் போன்வற்றை நீங்கள் சாப்பிட வேண்டும். உங்கள் பிறப்பெண் 4 ஆகும். யோகம் தரக்கூடிய எண்ணும் 4 தான். மாதத்தில் வருகின்ற 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். புதன்கிழமையில் இந்தத் திகதிகள் அமையுமானால் மேலும் சிறப்புண்டு.

எந்த நிறமும் உங்களுக்கு அதிர்ஷ்டமானதே. இரத்தினக்கல் பதித்த தங்கமோதிரம் உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். நீங்கள் வசிக்கும் வீட்டின் இலக்கம் எதுவாக இருந்தாலும் உங்களுக்குச் சிறப்பைத்தான் தரும். பிறப்பெண் 4ஐயும் புதன் கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்க்கையில் சுகபோகங்களை அநுபவித்து வாழ என் நல்லாசிகள்.

**புதனில் உதித்த நீங்கள் - தீய**
**எதனையும் விட்டுநீங்கி - நற்**
**சாதனைபுரிய எண் நான்கு - நற்**
**போதனை செய்து வழிகாட்டும்.**

***(அடுத்து ஆதிக்கம் 4 வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பற்றி பார்ப்போம்)***



# மாஜிக் தந்திரங்கள்

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.

**பா**லை கிளாஸில் கொட்ட டப்பாவைச் சாய்க்கும்பொழுது பால் வெளியே வரும்படி டப்பாவை நன்றாகச் சாய்த்துப் பிடிக்க வேண்டும். அதே போல டப்பாவில் விட்ட பால் கள்ள அறையில் புகும்படி டப்பாவை நன்றாகச் சாய்த்துப் பிடித்த பின்னரே டப்பாவைச் சாய்க்க வேண்டும்.

### மேடையில் எரியும் மெழுகுதிரியைத் துப்பாக்கிக் குண்டினால் அணைத்தல்

இதற்குத் தனிப்பட்ட முறையில் ஒரு மர ஸ்டாண்டு தயாரிக்க வேண்டும். இந்த ஸ்டாண்டின் அகலம் 10 செ.மீட்டரும், உயரம் 15 செ.மீட்டரும், குறுக்களவு 5 செ.மீட்டரும் இருக்க வேண்டும். இந்த விதமாக இரண்டு பக்கமும் திறவையான ஒரு பெட்டி தயாரிக்க வேண்டும். இதை ஒரு செ.மீட்டர் கனமுள்ள பலகையில் தயார் செய்ய வேண்டும். இதன் வாயிலில் ஒரு பக்கம் 2 செ.மீ. அகலத்தில் 5 மி.மீ. கனத்தில் இடது, வலம், மேல்பக்கம், படச் சட்டம் போல இணைத்துவிட வேண்டும். இதை மேல் கீழாக மேசையின் மேல் வைத்தால் ஒரு சிறிய சிலையை வைக்கப் பயன்படும் ஸ்டாண்டு போல இருக்க வேண்டும். முன் பகுதியும் திறந்திருக்கும். இந்த வேலை முடிந்தபின் இதன் உள்ளே சூட்சும வேலை செய்ய வேண்டும்.


அதாவது, இந்தப் பெட்டியின் நீளப் பகுதியில் ஒரு பக்கம் மெழுகுதிரியின் மேல் மட்டத்தில் ஒரு தகரத் தகடு விழுந்து தீயை அணைக்க வேண்டும். தீ எரியும் நேரத்தில் மேலே தூக்கி நிற்க வேண்டும். இது 'ஸ்பிரிங்' பலத்தில் வேலை செய்ய வேண்டும். எப்படி என்றால் ஒரு நூலை மேல் நோக்கி இழுத்தால் இந்தத் தகடு உடனே வேகமாக எரியும் திரியின் மேல் மட்டத்தில் அடித்துப் படிந்து தீயை அணைக்க வேண்டும். பிறகு காட்சிக்குமுன் இந்தத் தகட்டை மேல் நோக்கித் தூக்கிவிட்டால் அது மேல் பலகையில் மட்டத்தில் படிந்து நிற்க வேண்டும். இதில் இணைந்திருக்கும் நூலை மேல் நோக்கி இழுத்தால் இந்தத் தகடு தீயை அணைக்க வேண்டும். இந்த அளவுக்கு சூட்சும வேலை செய்ய வேண்டும்.

இந்த வேலை முடிந்தவுடன் ஒரு மெழுகுதிரியை ஏற்றி இந்த ஸ்டாண்டின் நடுவில் வைத்து நூலை இழுத்து விளக்கை அணைக்கிறதா என்று பல முறை பரிசோதனை செய்து பழகிய பின்னரே இக் காட்சியை மேடையில் செய்து காண்பிக்க வேண்டும்.

காட்சியாளர் ஒரு கைத்துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டு மேடையை விட்டு இறங்கி சபையோர் பக்கம் நின்று ஒன்-டு-த்ரீ என்றவுடன் பரணில் இருக்கும் உதவியாள் கறுப்பு நூலை உடனே இழுக்க வேண்டும். அந்தச் சமயம் ஸ்டாண்டிலுள்ள வில் தகடு எரியும் திரியின் தலையை அடித்து தீயை அணைக்க வேண்டும்.

இந்தக் காட்சியைப் பல முறை செய்து பார்க்க வேண்டும். இந்தக் காட்சியை ஆரம்பிக்கும்முன் மேடையின் நடுவில் போட்டிருக்கும் மேசைக்குப் பின்புறமாக ஒரு ஸ்ரூலைப் போட்டு, அதற்கு மேல் ஒரு ஸ்ரூலைப் போட்டு உயர்த்தி, அதன் மேல் கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு அதன் மேல் மெழுகுதிரி ஸ்டாண்டை வைத்து, அதை ஆட்டி வைக்கும் சூட்சும - தகட்டை விடுவிக்கும் கருவியில் எந்த இடத்தில் நூலைக் கட்ட வேண்டுமோ அந்த இடத்திற்கு நேராகப் பரணிலிருக்கும் உதவியாள் ஒரு ஒரு துளையிட்டு, அதன் வழியே ரூபாயைப் பறக்கவிடப் பயன்படுத்திய கறுப்பு நூலை மேலேயிருந்து கீழே விட, இதைக் காட்சியாளர் அந்த நூலின் முனையை இந்தச் சூட்சுமக் கருவியில் கட்டிவிட வேண்டும்.

அதன்பின் காட்சியாளர் ஓர் அரையளவு மெழுகுதிரியை கையில் எடுத்து வந்து சபையோருக்குக் காண்பித்து அதை ஏற்றி ஸ்ரூலின் மேலிருக்கும் ஸ்டாண்டின் நடுவில் உறுதியாக விழுந்துவிடாதபடி நிற்கும்படி அடியை ஒட்டி நிற்க வைக்க வேண்டும். பிறகு, காட்சியாளர் கையில் ஒரு துப்பாக்கியுடன் மேடையை விட்டுச்




சபையோர் பக்கம் இறங்கி, "இப்போது நான் மேடையிலிருக்கும் எரியும் மெழுகுதிரியை இந்தத் துப்பாக்கியினால் அணைக்கிறேன்" என்று கூறித் துப்பாக்கியைக் குறிபார்த்து ஒன்-டு-த்ரீ என்று சொல்லி குதிரையை அழுத்த வேண்டும். உடனே துப்பாக்கி வெடிக்கும். பரணியிலுள்ள ஆளும் உடனே நூலைப் பிடித்து இழுக்க, வில் தகடு எரியும் மெழுகுத் திரியை அணைக்கும். சபையில் உள்ளவர்கள் இதைக்கண்டு "குறி பார்ப்பதில் தேர்ந்தவராக இருக்கிறாரே" என்று ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு :- இந்த வேலையைப் பலமுறை செய்து பயிற்சி பெற்ற பின்னர்தான் மேடையில் செய்து காண்பிக்க வேண்டும். மெழுகுதிரியை ஸ்டாண்டில் வைக்கும் பொழுது திரியின் அடிப் பாகத்தை உருக்கி பலகையுடன் ஒட்டிவிட வேண்டும். மேலே இருந்து நூலை இழுக்கும் உதவியாள் கவனமாக ஒன்-டு-த்ரீ என்று சொன்னவுடன் நூலை இழுக்க வேண்டும். கவனமில்லா விட்டால் காட்சி கெட்டுவிடும். காட்சியாள் துப்பாக்கியை வெடிக்கும் அளவிற்கு தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். குதிரையை அழுத்தி துப்பாக்கி வெடிக்காமல் திரி மட்டும் அணைந்தால் அவமானமாகப் போய்விடும் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

### ஒரு தூணில் கட்டியவன் மற்றொரு தூணுக்கு மாறுதல்

சுமார் 5 செ.மீ கனமுள்ளதும், மேடைக்குக் கீழ் 15 செ.மீ. பரணுக்கு மேல் 10 செ.மீ. அளவிற்கும் வரக்கூடிய இரண்டு 'போல்' மூங்கில்களை வாங்கி வர வேண்டும். இந்த மூங்கில்களின் அடிப்பாகம் சரளமாக இறங்கக்கூடிய அளவில் வலது பக்கம் ஒரு குழியும், இடது பக்கம் ஒரு குழியும் செய்துவிட வேண்டும். மர மேடையாக இருந்தால் துளை போட்டுவிட வேண்டும். இந்த இரண்டு மூங்கில்களுக்கும் இடையே 2 1/2 மீ அளவு இடைவெளி இருக்க வேண்டும். இதேபோல பரணின் கீழ்ப் பக்கம், அதாவது மேடையிலுள்ள துளைக்கு சரி நேராக இரண்டு குழிகளுக்கும் நேராக இரண்டு துளை போட்டுவிட வேண்டும்.

அடுத்தபடியாக, அந்த மூங்கில்களின்



அடிப்பகுதியில் சுமார் 10 செ.மீ. நீளம் விட்டு, 2 செ.மீ. கனம், 2 செ.மீ. அகலம், 5 செ.மீ. நீளம் உள்ள இரு மரச் சட்டங்களைத் தயார் செய்து, அதைக் குறுக்காக வைத்து ஆணிகளைக் கொண்டு அசையாதபடி அடித்துவிட வேண்டும். இது எதற்காக என்றால் மேடையிலுள்ள குழியில் இந்த மூங்கிலின் அடிப்பாகத்தை இறக்கினால் அது குழியில் அல்லது துளையில் சுமார் 10 செ.மீ. அளவு இறங்கி அப்படியே நின்றுவிட வேண்டும். அதற்காகத்தான் இந்தத் தடைச் சட்டம் அடிக்கப்பட வேண்டும்.


இப்போது மூங்கிலை எடுத்து அதன் தலைப் பகுதியை பரண் துளையில் நுழைத்து அடிப்பகுதியை மேடையிலுள்ள குழி அல்லது துளையில் இறக்கிவிட்டால் அது ஒரு தூண் போல நிற்கும். இந்த விதமான இரண்டு மூங்கில்களைத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்கு முன் இந்த இரண்டு மூங்கில்களையும் மேடையிலுள்ள மேல் கீழ் துளைகளில் சொருகி தூண் போல நிறுத்திவிட வேண்டும்.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.

*-காதில பூ கந்தசாமி-*

ஐ.கியூ, ஐ.குயூ எண்டிறாங்களே, பொது அறிவு - அது உங்களுக்கு எந்த அளவுக்கு இருக்கெண்டு எனக்கொரு சந்தேகமுங்கோ. அதுக்குத்தான் உங்களுக்கு நான் இப்ப ஒரு சின்னச் சோதினை வைச்சுப் பாக்கப் போறன். சித்தி பெறுகிறியளோ பாப்பம்.

ஒரே விதமான இரண்டு கொலைகள் நடக்குது. ஆனால் எங்கட தமிழ்ப் பத்திரிகைகளில ஒன்றுக்கு ஒரு மாதிரியும் மற்றதுக்கு வேற மாதிரியும் கருத்துக்கள் வெளிவருகுது. சம்பவம் எதெண்டே தெரியாத உங்களுக்கு இந்தக் கருத்துக்களை மட்டும் வைச்சு சம்பவம் பற்றி முடிவுக்கு வர முடியுமா எண்டதுதான் பரீட்சை. எங்க பாப்பம் ஜெயிக்கிறியளோ எண்டு?

சம்பவம் 1.

**கண்காணிப்புக் குழுவின் கருத்து** : இது யுத்த நிறுத்த மீறலா என்று இன்னும் எமக்குக் கூற முடியாதுள்ளது.

**அரசாங்கத்தின் அதிகாரி (முதலாவது அறிக்கை)** : இச் சம்பவம் ஒரு பாரதூரமான யுத்த நிறுத்த மீறல். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதனால் சமாதான சூழ்நிலை இக்கட்டான நிலைமையை அடைந்துள்ளது.

**அதே அரசாங்க அதிகாரி (இரண்டாவது அறிக்கை)** : இதை யார் செய்தார்களென்பதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. இது ஒரு தனிப்பட்ட சம்பவம். இதனால் யுத்த நிறுத்தத்துக்கு எந்தப் பாதிப்புமில்லை. அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் உறுதியாக உள்ளது.

**தமிழ் பா.உ. ஒருவரின் கருத்து** : அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களில் காண்பிக்கும் அசிரத்தையின் விளைவுதான் இது. ஏன் இதைப் பொலிஸாரே செய்துவிட்டு போராளிகளின் மீது பழிபோடக் கூடாது? போராளிகள் மீது மாசு கற்பிக்க நடத்தும் சதிமுயற்சி இது.

**வெப்தளச் செய்தி (நிகழ்ந்த சம்பவம் பற்றி காவற்துறையினர் உட்பட யாருக்கும் தெரியவருமுன்னரே வெளியிடப்பட்ட செய்தி)** : "இன்ன" இடத்தில் "இன்னார்" கொல்லப்பட்டுள்ளார். அவரின் உண்மைப் பெயர் "இது." அழைக்கப்படும் பெயர் "இது". இவர் முன்னர் "இன்ன" இயக்க உறுப்பினராயிருந்தவர். இவர் "இத்தனை" சம்பவங்களைச் செய்தவர். மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தவர். "அவரை" விட "இவரே". அதிக முக்கியமானவர். "அவரோடும்" "இவருக்குத்" தொடர்பு உண்டு.

**தமிழ்ப் பத்திரிகைச் செய்திகள்** : கொலைச் செய்தியில் பரபரப்புத் தன்மை அதிகம். கண்டனம் அறவேயில்லை. தொனிப் பொருள்: "அட இவரைக் கூட மடக்கிட்டாங்களே!"

**தமிழ்ப் பத்திரிகை வார இதழ் கட்டுரைகள்** : வெப்தளக் கட்டுரைகளின் மறு பிரசுரங்கள் அல்லது அதை அடியொற்றிய வேறு கட்டுரைகள். கட்டுரைகளின் தேடல் - கொல்லப்பட்டவரின் தவறான மறுபக்கம் என்ன எனப் பார்ப்பது; (அப்படியேதும் இல்லாவிட்டால் அவற்றை உருவாக்குவது), "வேண்டப்படாதவர்களுடன் அவருக்குத் தொடர்புகள் உள்ளனவா என ஆராய்வது அல்லது தொடர்புகள் இருக்கக் கூடும் என்றாவது ஊகிக்க வைப்பது) பத்திரிகைகள் மறைமுகமாக (நேரடியாக எழுதுவதும் கூட இப்போது இந்த மறைமுகத்துக்குள் அடக்கம்).

**முன்மொழியும் துணிபு** : கொல்லப்பட்டவர் கொல்லப்பட்டதால் விடுதலைப் பயணத்தில் இருந்த தடைக்கல் ஒன்று நீங்கியுள்ளது என்பது.

*சம்பவம் 2*

**கண்காணிப்புக் குழுவின் கருத்து** : யுத்த நிறுத்தத்துக்கு பாரிய அச்சுறுத்தல். நிலைமையை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

**அரசாங்க அதிகாரி** : பாதுகாப்புப் பிரிவினருக்கும் இதன் சூத்திரதாரிகளுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று அரசாங்கம் திட்டவட்டமாக மறுக்கிறது.

**வெப்தளக் குற்றச்சாட்டு** : இது அரசாங்கத்தின் சதி. அரச உளவுப் பிரிவினரின் அனுசரணையில்லாமல் இதைத் செய்திருக்க முடியாது. மிகப் பெரும் யுத்த நிறுத்த மீறல். அரசாங்கத்தைக் கண்டித்து பொது அமைப்புகள் குரலெழுப்ப வேண்டும்.

**அதே வெப்தளத்தில்** : கொலையுண்டவர் ஆற்றிய விடுதலைத் தொண்டுகள், தியாகங்கள் பற்றிய பல கட்டுரைகள். கொலையாளிகள் "இன்னார்தான்" என்ற ஆதாரம் ஏதும் அவசியமில்லை என்ற தொனியிலமைந்த நேரடிக் குற்றச்சாட்டு. இதற்குத் தகுந்த பதிலடி வழங்கப்பட வேண்டும் என்று தொனிக்கும் குமுறல்கள்!

**தமிழ் பா.உ. ஒருவரின் கருத்து** : இதற்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டும். இவ்வாறான கொலைகளால் விடுதலைப் பயணத்தை நிறுத்திவிட முடியாது. இந்தப் படுகொலையை நாம் மிக மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். (இன்னும் நீளும் இச் செய்தி நேரம், இடம் கருதி இத்துடன் கட் செய்யப்பட்டுவிடுகிறது)

**தமிழ்ப் பதிரிகைத் (தலைப்புச்) செய்தி** : கொலைச் செய்தியில் கண்டனத் தன்மை உக்கிரம். மரியாதை கலந்த அனுதாபம். தொனிப் பொருள்: இனியும் பொறுமை காக்க முடியுமா? அத்துடன் பல பிரமுகர்களதும் கண்டன அறிக்கைகள் பொது அமைப்புகளின் அனுதாபச் செய்திகள்.

**தமிழ்ப் பத்திரிகை வார இதழ் கட்டுரைகள்** : கொலையுண்டவரின் பணிகள் பற்றிய புகழாரங்கள். அவரின் இழப்பினால் தமிழ் சமூகத்திற்கும் போராட்டப் பயணத்திற்கும் ஏற்பட்டுள்ள தாக்கம். அவரின் அஞ்சலிக் கூட்டங்கள் தோறும் பேசப்பட்ட உரைகள். யுத்த நிறுத்த மீறல்களின் உச்சக் கட்ட நிலை குறித்த எச்சரிக்கை. சமாதானத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துப் பற்றிய விழிப்புணர்வு. அரசாங்கத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான கண்டனங்கள்.

**துணிபு** : இது அரசாங்கத்தின் துணையுடன் நிகழும் விடுதலைக்கு எதிரான சதிச் செயல்.

வாசகர்களே! இவ்விரு சம்பவங்கள் குறித்து கொலையுண்டவர் யாராயிருக்க முடியும் என வாசித்த மாத்திரத்தில் உங்களால் முடிவுக்கு வர முடிகிறதா? எங்கே சரியான கூண்டில் புள்ளடியிடுங்கள்.

| கொலையுண்டவர் | தியாகி | துரோகி |
|---|---|---|
| சம்பவம் 1 | | |
| சம்பவம் 2 | | |

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(15.08.2004 தொடங்கி 21.08.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், சிங்கம் - வியாழன், புதன், செவ்வாய், துலாம் - கேது
மேடம் - இராகு, மிதுனம் - சனி, வெள்ளி
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நன்மை, கௌரவம், மனக் குறை நீங்கும், பெரியோர் உதவி, அன்னியர் நட்பு, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம் அமைதல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் பலிதம், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, பிரயாண மிகுதி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மேன்மை, குடும்ப சுகம், பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, உத்தியோக சிரமம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கஷ்டம், வெளியாரால் தொல்லை, வீண் செலவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் சிரமம், அனாவசிய செலவு, கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, குடும்பக் கஷ்டம், மனக் கவலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் பலிதம், உயர்ந்தநிலை, பெரியோர் உதவி, இனசன நன்மை, உத்தியோகக் கஷ்டம், வீண் பிரயாசம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், உறவினர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்ப சுகம், உத்தியோகக் கலக்கம், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் சிரமம், வீண் குறை கேட்டல், பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு, குடும்பக் கலகம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்
**அதிர்ஷ்ட இலக்கம் :-** 02

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் பகை, அனாவசிய செலவு, பெரியோர் உதவி, மனக் குறை நீங்கும், குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் பலிதம், அன்னியர் உதவி, மன மகிழ்ச்சி, உயர்ந்த நட்பு, உத்தி யோகக் கலக்கம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் கலக்கம், செலவு மிகுதி, உறவினர் பகை, வீண் குறை கேட்டல், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, அரச உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் நன்மை, காரியானுகூலம், செலவு மிகுதி, பண வரவு தடை, குடும்பப் பிணக்கு, மனக் கவலை, உத்தியோக பகை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# மாணிக்கங்கள்



நேரில் வருபவர்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம்.
ஒவ்வொரு பிரச்சினைக்கும் அபூர்வமாகச்
செயற்படக்கூடிய அபூர்வ சக்தியுள்ள மாணிக்கக் கற்கள் உண்டு.
முதலில் ஜாதகக் கணிப்பைப் பார்வையிட்ட பின்னரே
தெய்வீக உரு செய்து கொடுக்கப்படும்.
தேவையானவர்கள் மட்டுமே நேரில் வரவும்.

**பேராசிரியர். டாக்டர் பி.கே.சாமி J.D.G.A.N.JP**
**இல. 162 கொட்டாஞ்சேனை வீதி,**
**கொழும்பு — 13.**
**தொலைபேசி — 2342463, 2342464**


# ஒலிம்பிக்

கிரேக்கர்களால் ஒலிம்பிக் மலையடிவாரத்தில் பொழுதுபோக்காக விளையாடப்பட்ட விளையாட்டுக்கள் பின்னர் ஒலிம்பிக் போட்டிகளாக இப்போது பிரபலமடைந்துள்ளது. 1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 5 கோடிப் பார்வையாளர்கள் கண்டு களிக்கும் வகையில் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பத்தில் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறுவது வழக்கம். கிரேக்கர்கள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள கால் நடையாக ஓடியே செல்வர். அப்படியாக கிரேக்க இராணுவத்தின் வெற்றியை எல்லையிலிருந்து ஏதென்ஸ் நகர மக்களுக்குச் சொல்வதற்காக ஓடி வந்து வெற்றியை அறிவித்தபின் விழுந்து மரணமானார் ஒருவர். அவரின் பெயர் மரதன். ஆகவே தான் மரதன் ஓட்டப் போட்டிகள் ஒலிம்பிக்கை ஆரம்பித்து வைக்கின்றன. கடைசியாக அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் 2000 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. ஒலிம்பிக் போட்டிகளில் ஒரே வீரர் அதிகத் தங்கப் பதக்கங்களை வென்றது 1932 ஆம் ஆண்டில்தான் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த அலடர் கிறிவீச் என்பவர் இவராவார். இவர் ஆறு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். இதுவரை நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கப் பதக்கங்களை வென்ற நாடு அமெரிக்கா. 931 தங்கப் பதங்கங்களை அமெரிக்கா வென்றுள்ளது. தற்சமயம் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் கிறீஸ் நாட்டிலேயே ஏதென்ஸ் நகரத்தில் நடைபெற இருக்கின்றன.





# நிபுணத்துவ கைரேகை



கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்




துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.

Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து


மீசாலை - இயக்கச்சியைச் சேர்ந்த இரவீந்திரன் - அனுசுயா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுபானுஜன் தனது முதலாவது பிறந்தநாளை 13.08.2004 அன்று AU-Switzerland இல் வெகு விமரிசையாகக் கொண்டாடு கின்றார். இவரை அன்பு அப்பா- அம்மா, மீசாலையில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: இரவீந்திரன் (அப்பா)
Swiss



**செல்வன் சுபானுஜன்**

**13.08.2004**



## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து / 11.08.2004

## விேனாஜ்

திருகோணமலையைச் சேர்ந்த விஜயதாசன் - ரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் வினோஜ் தனது முதலாவது பிறந்தநாளை 11.08.2004 அன்று பிரான்ஸில் 94140-ALFORTVILLE என்னும் இடத்திலுள்ள தனது இல்லத்தில் ஆசை அக்கா வினோஜாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா- அம்மா, அக்கா வினோஜா, அம்மப்பா- அம்மம்மா (இலங்கை) அப்பம்மா, தாசன் பெரியப்பா (இலங்கை), வாசு மாமா, சுதா அத்தை, தனுராஜ் அத்தான் (லண்டன்), ரகு சித்தா-வவி சித்தி, கிஷாந் அண்ணா, கிருஷிகா அக்கா (ஜேர்மனி), பாபு மாமா - துஷி அத்தை (லண்டன்), சுபா மாமா(லண்டன்), பஞ்சு பெரியப்பா, விஜயராணி பெரியம்மா (லண்டன்), குகன் பெரியப்பா- சுசி பெரியம்மா, ஷற்றோ அண்ணா, கவினி, பிறீனி அக்காமார் (பிரான்ஸ்), ரவீந்திரன் மாமா- தயா அத்தை (பிரான்ஸ்) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ திருமலை பத்திரகாளி அம்பாளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- சி.சிவராசா அம்மப்பா திருமலை.


# வெள்ளவத்தையில் உல்லாசமான வாழ்விற்கு




இன்னுமொரு

**Span Tower**

LOCATION:
43, Peterson Lane, Wellawatte.


LOCATION MAP




Flex Graphic

இரண்டு மற்றும் மூன்று
படுக்கையறைகளைக் கொண்ட
சொகுசு தொடர்மாடி வீடுகள்...

Hotlines: 0777-895760,
0777-313988, 0777-386231



ONGOING PROJECT AT
44/4, Dharmarama Road, Wellawatte.

மேலதிக விபரங்களுக்கு

**SPAN ENGINEERING (PVT) LTD.**
45/15A, Fredrica Road, Colombo 6. Tel: 011-2 365924
E-mail: info@spaneng.com Website: www.spaneng.com